பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 08 | ஞாயிற்றுக்கிழமை 21.01.2018 | கதிர் 77

## மஹிந்தர் யாழ். வருவார்

யாழ்ப்பாணம், ஜன.21

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். வருவார் என அக்கட்சியின் யாழ். வட்டாரங்கள் தெரிவித்தன.

பக்கம் 22

# நாட்டின் பொருளாதார நிர்வாகம் ஐ.தே.க. தரப்பிடமிருந்து பறிப்பு!

## ஜனாதிபதி தாமே பொறுப்பேற்பு நேற்று அவரே அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஜன.21

நல்லாட்சி அரசின் கீழ் கடந்த மூன்று வருடங்களாக நாட்டின் பொருளாதார, விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் தாம் விட்டு வைத்திருந்தார் எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனிமேல் அது அவர்களிடம் இல்லை என்றும் அதனைத்தான் பொறுப்பேற்று தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார் என்றும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

பக்கம் 22

## கூட்டரசில் மீண்டும் குழப்பம்! நெருக்கடி!!

கொழும்பு, ஜன.21

நாட்டின் பொருளாதார நிர்வாகத்தைக் கையாளும் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியினரிடமிருந்து தாம் பறித்து விட்டார் என்றும், அதனை ஐ.தே.கவினர் கையாளும் நிலைமை முடிவுக்கு வந்து விட்டது என்றும் சாரப்பட நேற்று கேகாலையில் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்வைத்து

பக்கம் 22

## ‘பட்ஜெட்’டை ஆதரிப்பதற்கு நடந்த பேரம்
## பிரதமர் ஊடாக தலா ரூ.2 கோடி கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு நிதி!

### உண்மையை அம்பலப்படுத்துகிறார் சிவசக்தி ஆனந்தன்

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்க தம்மைத் தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலா 2 கோடி ரூபா வீதம் நிதி பெற்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாகக் குற்

பக்கம் 22

## புலிகளின் நீர்மூழ்கியின் மிதப்பிகள் மீட்பு



விடுதலைப் புலிகளின் நீர் மூழ்கி கப்பலின் மிதப்பிகள் இரண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அங்கையற்கன்னி நீர்மூழ்கி கப்பல் கடலில் மூழ்கி செல்லும் சந்தர்ப்பத்தில் அதனுடைய மேற்பகுதி கடல்மட்டத்துடன் காணப்படும் என்று கூறப்படுகின்றது.

பக்கம் 22

## வலைத்தளங்களில் பரவுகிறது சந்திரிகா நடனமாடும் காட்சி



கொழும்பு, ஜன.21

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நடனமாடும் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பகிரப்பட்டு வருகிறது.

வைபவம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே முன்னாள் ஜனாதி

பக்கம் 22

### பிரதமர் நேற்று அறிவிப்பு
## எந்த வழக்கானாலும் இனிமேல் 3 ஆண்டுகளில் முடிய வேண்டும்

### சட்ட முறையில் பெரும் மாற்றம் வருகின்றது

நாட்டில் இனிமேல் வழக்குகளை வருடக் கணக்காக இழுத்தடிக்க முடியாது. அதற்கேற்ற வகையில் நாட்டின் சட்ட முறைமை முற்றாக - தீவிர கரிசனையோடு - மாற்றியமைக்கப்படுகின்றது. தேவையற்ற தாமதங்களின்றி,

பக்கம் 22

## ஜனாதிபதியை அவரின் அமைச்சர்கள் குட்டுகின்றனர் என மஹிந்தர் கவலை!



கொழும்பு, ஜன.21

அமைச்சரவையில் பணியாற்றுவது தமக்கு வெட்கமாக இருக்கின்றது எனக் கூறுவதன் மூலம் தற் போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஜனாதிபதியை தரம் தாழ்த்தி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ

பக்கம் 22

## கடுகதி ரயிலை வழிமறித்து ஓமந்தையில் போராட்டம்



வவுனியா, ஜன.21

வவுனியாவின் பாரம்பரிய கிராமங்களான விளாத்திக்குளம், அரசமுறிப்பு ஆகியவற்றுக்கு செல்லும் பிரதான வீதியை மூடி ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கப்பட்ட மையை கண்டித்து, அக்கிராம மக்கள் கொழும்பு - யாழ் கடுகதி ரயிலை மறித்து நேற்றுப் பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதனால் கொழும்பில்

பக்கம் 22

## ரணிலில் கை வைக்க முயற்சித்தால் மைத்திரியை வீட்டுக்கு அனுப்புவோம்!

### குற்ற விசாரணைப் பிரேரணை வரும் என்கிறார் ஐ.தே.கவின் எம்.பி.

கொழும்பு, ஜன.21

“உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியிலிருந்து தூக்கி விட்டு வேறு ஒருவரை அப்பதவியில் இருத்துவதற்கும் புதியஅரசுஒன்றைஅமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது என ஒரு கதை அடிபடுகின்றது.

“அப்படி முயற்சிகள் எடுக்கப்படுமானால்ஜனாதிபதிக்கு எதிராகவும் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவருவோம். அத

பக்கம் 22

## யானையை கொன்றவர் கைது

அநுராதபுரம்,ஜன.21

அநுராதபுரம் - உனகொல்லேவ பிரதேசத்தில் காட்டு யானை ஒன்றைக் கொலை செய்த நபர் ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரகொட பொலிஸா

பக்கம் 22

## இது ரகசியம் அல்ல!



கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநடப்புச் செய்த விடயம் இந்தத் தேர்தல் சமயத்தில் மஹிந்த தரப்புக்கு பெரும் அரசியல் தீனியாகி விட்டதாம்...!

பக்கம் 22

## வயோதிப அண்ணன் - தங்கை காலி பிரதேசத்தில் படுகொலை

காலி, போத்தல, ஹபுகல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி சகோதரனும் சகோதரியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று காலையில் நடந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

75 வயதான சகோதரனும் 65 வயதான சகோதரியுமே இவ்வாறு

பக்கம் 22

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நாவின் ஜெனீவா மாநாடு: இலங்கைத் தரப்பின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உலக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத் தொடரின் போது ஜெனீவாவுக்கான இலங்கை அரசின் பிரதிநிதியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சென்று இலங்கை தொடர்பில் விசேடமான அணுகுமுறையொன்று கையாளப்பட வேண்டும் என்று ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க விடுத்த கோரிக்கை உடனடியாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத்தொடரின்போது இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் எழுப்பப்படும் வாய்மூல கேள்விகளை மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா அலுவலகத்திற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க கோரிக்கை விடுத்தார்.

எனினும், இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறை அல்ல என்று தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான விசேட குழுவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விசேடமான அணுகுமுறையொன்று கையாள முடியாது என்று கூறி நிராகரித்துவிட்டனர்.




குறிப்பாக எந்தவோர் அரசையும் விசேடமாக கருத்திற்கொள்ளும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என்று மிகத் தெளிவாக ரவிநாத் ஆரியசிங்க முன்னிலையிலேயே குறிப்பிட்ட சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் விசேட குழுவின் பிரதிநிதியான பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன்பேர்க், வாய்மூலம் எழுப்பப்படும் கேள்விகளை நன்கு செவிமடுத்து அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் பொறுப்பும் கடமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் விசேட குழுவின் முன்னாள் தலைவரான பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன்பேர்க், நோர்வே உயர்நீதிமன்றின் முன்னாள் பதில் தலைமை நீதியரசர் என்பது மாத்திரமன்றி சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச ரீதியில் மிகவும் மதிக்கப்படும் சட்ட நிபுணர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல புதிய சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ள போதிலும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகின்றது என்பது தொடர்பில் பல கேள்விகளை எழுப்பிய ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அடுத்த கூட்டத்தொடரில் வழங்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இதன்போது தலையிட்ட ஜெனீவா அலுவலகத்திற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க மின்னஞ்சல் ஊடாக கேள்விகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். இதன்போது தலையிட்ட சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் விசேட குழுவின் பிரதிநிதி பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன்பேர்க், அவ்வாறான நடை முறை பின்பற்றப்படுவதில்லை என்று கூறி நிராகரித்துவிட்டார்.

## கல்விக்கதிர்

### தரம் 5 புலமைப் பரிசில் வினாத் தாள்களின் விடைகள்

**பிரபல ஆசிரியர் தயாரித்து கடந்த 17,18,19 இல் வெளியான வினாத்தாள் - 05 இன் பகுதி- I மற்றும் பகுதி- II இதற்கான விடைகள் வருமாறு:-**

**வினாத்தாள் - I**

| | | | |
|---|---|---|---|
| 01 - 4 | 11 - 3 | 21 -2 | 31 - 3 |
| 02 -3 | 12 - 3 | 22 -3 | 32 - 1 |
| 03 - 3 | 13 - 3 | 23 - 3 | 33 - 2 |
| 04 - 3 | 14 - 3 | 24 - 2 | 34 - 3 |
| 05 - 1 | 15 - 2 | 25 - 1 | 35 - 2 |
| 06 - 1 | 16 - 2 | 26 - 2 | 36 - 2 |
| 07 - 3 | 17 - 1 | 27 - 2 | 37 - 3 |
| 08 - 3 | 18 - 1 | 28 - 3 | 38 - 3 |
| 09 - 3 | 19 - 3 | 29 - 2 | 39 - 3 |
| 10 - 1 | 20 - 2 | 30 - 2 | 40 - 3, 15 |

**வினாத்தாள் - II**

**01**
1. அரைப்பகுதிக்கு
2. நீல நிறமையை
3. இறுக
4. புரள்வதைக்
5. கடல் அலை
6. சிறுவர்கள்
7. கிடையாக

**02.**
1. உயர்ந்தது
2. அறிவிக்கப்பட்டன.
3.வீழத்தியது.

**03**
1. சமயோசிதம்
2. கதர்
3. பஞ்சம்

**04.**
1. ஒன்றன் பால் படர்க்கை
2. உயர்திணை இறந்த காலம்

**05.**
3.கவிஞன்
1.புரவி
2.மின்னல்

**06.**
1.உறுமும்
2.பேத்தை
3.மந்தி

**07.**
1.தயவு செய்து உங்கள் பாதத்தைத் துடையுங்கள்.
2.நாங்கள் இப்போது நிறுத்துவோமா?

**08.** 1. Rani water 2. buildings

**09**
1.Thats good work

**10.**
1. அத இரிதா ஹெட்ட சந்துதா

**11.** பாடசாலை தொடங்கும் நாள்.

**12.** 1.மின்னஞ்சல்
2.பாரதியார்
3.21

**13.** 1. நாங்கள் இனிமையாகப் பாடுவோமா?

**14.** 1.கோல வண்ண மணிகளை

**2.** I. திறமையில் நம்பிக்கை
II.பழிக்குப் பயப்படாதே

**15.**
1.நான் அக்குருவியை மிகவும் பரிதாபத்தோடு உற்றுப் பார்த்தேன்
2.அப்போது அம்மா முற்றத்தில் காயவிட்டிருந்த தானியங்களை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது.
3.கொஞ்சத் தானியங்களை வீசுவதால் பஞ்சம் வந்து விடுமோ என எண்ணி கொஞ்சத் தானியங்களை அள்ளி எறிந்தேன்.

**16.**
1.இருபத்தையாயிரத்து முப்பது.

**17.**
1.4050g 2.1l 75ml

**18.** 6.0

**19.** 6M

**20.** 00:25

**21.**
1.10 2.10

**22.** விமான்

**23.**
1.பி.ப.2.45
2.3 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள்

**24.** 1. 4.7 2. 0.5

**25.** 110.00

**26.** 1/6

**27.** 274

**28.** 1. 2 2.2

**29.** 4 கிலோ 250 கிராம்

**30.** 102

| | | |
|---|---|---|
| 31.2 | 41.4 | 51.2 |
| 32.2 | 42.3 | 52.2 |
| 33.3 | 43.2 | 53.1 |
| 34.3 | 44.3 | 54.1 |
| 35.2 | 45.4 | 55.1 |
| 36.2 | 46.4 | 56.2 |
| 37.4 | 47.2 | 57.1 |
| 38.2 | 48.1 | 58.2 |
| 39.4 | 49.2 | 59.1 |
| 40.1 | 50.4 | 60.2 |

# இந்தத் தேர்தலின் பின்னர் அமைச்சுக்களில் மாற்றம்

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் முக்கிய அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தலின் பின்னர் அரசின் பிரதான அமைச்சுப் பதவிகள் மூன்றின் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளார்.



சில அமைச்சர்கள் அரசின் கொள்கைகள் மற்றும் ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு முரணான வகையில் தொடர்ச்சியாகவே செயற்பட்டு வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமை நீடிப்பதைத் தவிர்க்கும் நோக்கில் பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையின் மூலமும் சில அமைச்சுக்களின் செயற்பாடுகள் குறித்து திருப்தி கொள்ள முடியாத நிலைமை உள்ளது என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# முள்ளியவளையில் வெள்ளி இரவு வாள்வெட்டு, அடிதடி மோதல்

## காயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில்

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவு, முள்ளியவளையில் வெள்ளி இரவு 7 மணியளவில் நடந்த வாள்வெட்டு மற்றும் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். முள்ளியவளை 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெயசீலன் ஜனுராஜ் (வயது -20), முள்ளியவளை 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தங்கராசா டியானு (வயது - 20) ஆகியோரே காயமடைந்தனர். ஒருவர் வெட்டுக்காயங்களுடனும், மற்றையவர் அடி காயங்களுடனும் [illegible] மனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது என்றும், அதில் ஒரு குழு மற்றைய குழு மீது முள்ளியவளை சந்தைக்கு அண்மித்த பகுதியில் வைத்து வாள், கோடரிகளால் தாக்குதல் நடத்தியது என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜன. 21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை –

**யாழ். பிரதேசத்தில்-**


அராலிப் பிரதேசம் முழுவதும், வட்டுக்கோட்டை பிரதேசம் ஒரு பகுதி, யாழ்ப்பாணக் கல்லூரி பிரதேசம் ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**


சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் –

மின்சாரம் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கை – இந்தியா இடையே குறைந்த கட்டண விமான சேவை



இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையிலான குறைந்த கட்டண விமான சேவையொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது விமானம் சென்னை விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுக் காலை 8.00 மணிக்கு வந்தடைந்துள்ளது.

'இன்டிகோ' என அழைக்கப்படும் இந்த விமான சேவை ஒரு நாளைக்கு மூன்று முறை இரு நாடுகளுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளது. இந்தியாவின் சென்னை, பெங்களூர் ஆகிய நகரங்களிலிருந்து கொழும்பு கட்டுநாயக்க நோக்கி இந்த விமான சேவை இடம்பெறவுள்ளது.

மிகவும் கட்டணம் குறைந்த விமான சேவையாக இது கருதப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

## வடக்கு மாகாண சபையில்

# தமிழர் ஆட்சி மலர்ந்தது என்றார்கள் அது பயனற்று வாடியதுதான் மிச்சம்!

### டக்ளஸ் தேவானந்தா நையாண்டி

வவுனியா, ஜன.21

பசப்பு வார்த்தைகளுக்கும் உசுப்பேற்றல்களுக்கும் உணர்ச்சிப் பேச்சுக்களுக்கும் நீங்கள் ஆட்படாது சரியான வழிமுறையாக எம்மைத் தேர்ந்தெடுத்தால் உங்களது பல்வேறு பிரச்சினைகளுக்கும் நாம் உரிய தீர்வுகளைப் பெற்றுத்தருவோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு வவுனியா பேயாடிக் கூழாங்குளம் பகுதிக்கு நேற்றுச் சென்ற அவர் அப்பகுதி மக்களுடனான சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணசபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வென்றெடுத்தபோது தமிழர் ஆட்சி மலர்ந்தது என்று பெருமைப்பட்டார்கள். அத்துடன் அந்த மாயைக்குள் மக்களையும் வீழ்த்தியிருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் கூறிய தமிழர் ஆட்சி என்பது வாடியுள்ளதை மக்கள் எல்லோரும் உணர்ந்துள்ளார்கள்.

300 க்கும் அதிகமான தீர்மானங்களை நிறைவேற்றிய வடக்கு மாகாண சபை ஆட்சியாளர்களால் மக்கள் நலன்சார்ந்த எவ்விதமான செயற்பாடுகளையும் இன்றுவரை முன்னெடுக்க முடியவில்லை.

இதற்குக் காரணம் அவர்களுக்கு மக்கள் மீதான அக்கறையோ அவற்றைச் செயற்படுத்தக் கூடிய தான ஆற்றலோ இல்லாமைதான். அந்தவகையில் அவர்களைத் தெரிவு செய்த மக்கள் இப்போது ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் யாரை நம்பி நீங்கள் வாக்களித்தீர்களோ அவர்கள் உங்கள் வாக்குகளால் வெற்றிகளைத் தமதாக்கி தமது சுயநலன்களையும் சுகபோகங்களையும் மட்டுமே அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் இனிவருங் காலங்களில் இதுபோன்று தவறான தலைமைகளை தெரிவுசெய்யாது, கிடைக்கும் சந்தர்ப்பங்களில் நாள்தோறும் மக்களுடன் நின்று மக்களுக்காகப் பணிபுரியும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எம்மை வெற்றி பெறச் செய்யுங்கள்.

நாம் உங்களுக்காக உழைக்கத் தயாராகவே இருக்கின்றோம். அத்துடன் நீங்கள் எமக்களிக்கும் வாக்குகள் ஒருபோதும் வீணாகப் போகா. உங்கள் எண்ணங்களை அவை ஈடேற்றும் என்பதை நாம் திட்ட வட்டமாகக் கூறவிரும்புகின்றேன். – என்றார் அவர்.

# நீதிக்காகப் போராட மகளிர் இம்முறை களத்தில்; அவர்களுக்கு வாக்களித்து அங்கீகரியுங்கள்

### பெண் வேட்பாளர்கள் ஒன்றிணைந்து வேண்டுகோள்

– எஸ்.நிதர்ஷன் –

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் வடக்கு மாகாணத்தில் போட்டியிடும் பெண்களாகிய தமக்கு முழுமையான ஆதரவைத் தமிழ் மக்கள் வழங்கி தம்மை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென வடக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் பல்வேறு கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிடும் பெண்கள் பிரதிநிதிகள் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் யாழ் ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று நடத்தினர்.

இதன் போதே பெண்களின் முக்கியத்துவம் மற்றும் பங்களிப்புக்கள் குறித்தான தமது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டு வைத்து, நீதிக்காகப் போராடும் பெண்களை உள்வாங்கிய கட்சிகளுக்கு மக்கள் வாக்குகளை வழங்கிப் பெண்களின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் கோரினர்.

நீதிக்காகப் போராடத் தயாராகின்ற பெண்களாகிய நாம்இம்முறை புதியதொரு ஜனநாயக நீதியிலான அரசியற் பண்பாட்டைப் படைக்கப் போகின்றோம் என்பது உறுதி எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிப் பெண் வேட்பாளர்கள் அனைவரும் இணைந்து வெளியிட்ட பெண்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:–

கடந்த முப்பதாண்டு கால யுத்தத்தின் கொடூரத்திலிருந்து மீண்டு சற்று மூச்சு விடும் தருணத்தில்தான் எமக்கு புரிகின்றது சத்தங்கள் ஓய்ந் தாலும் எமது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்களின் இருப்பு கேள்விக்குரியதென்று. ஆம். எதிர்காலத்தையே எவ்வாறு சமாளிக்கப் போகின்றோமென்ற தவிப்பு.

இதை மீளக் கட்டியெழுப்புவது எப்படியென்ற சிந்தனைக்கு முன்பாகவே எமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை. எமக்கென தனித்துவமானதோர் அரசியற் தளத்தைப் போடவேண்டுமெனில், கடந்தகால அரசியலுக்கு மாறுபட்ட விதத்தில், மக்களின் சமூக, பொருளாதார,கல்வி மற்றும் பண்பாட்டில் மேம்பாட்டைக் கொணர்வதன் ஊடாகவே அதனை அடைய முடியும்.

அதனால்தான் பெண்களாகிய நாம் பொறுத்தது போதுமென்ற நிலையில் நீதியையும், நியாயத்தையும் எமது பிரதேசத்தில் நிலைநாட்ட இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடக் கட்சிகள் மூலமாகவும், சுயேச்சைக் குழுக்கள் மூலமாகவும் களம் இறங்கியிருக்கின்றோம்.

சமூகத்தில் வாழும் சகல மக் களையும் எவ்வித இன, மத, மொழி வேறுபாடின்றி அவர்களை மதித்து, அவர்களின் தேவைகளை அனைத்துத் தரப்பினரின் பங்கேற்பு, பங்களிப்புடன் நிறைவேற்ற முன்னின்று செயற்படுவோம். இங்கு எமது வெளிப் படைத் தன்மை, சமூகத்தின் மீதான பொறுப்புடைமை மற்றும் சமூகத்திற்குக் கணக்குக் காட்டுந் தன்மை போன்றவற்றால் எமக்கு சமூகத்தின் செல்வந்தர்கள், ஏழைகள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், மதத் தலைவர்கள், அரசியற் தலைமைத்துவங்கள் என அனைவரும் பக்கபலமாக இருப்பார்கள்.

உண்மையும், நேர்மையும் கொண்ட எமது அரசியலில் தனி மனித சிபாரிசுகளோ, பொய்யான வாக்குறுதிகளோ அல்லது சலுகை காட்டி வாக்குப் பெறுவதோ இருக் காது. பல வருடங்களாக சமூகத்திற் குப் பணியாற்றிய எமக்கு மக்களின் ஆதரவு இந்த வட்டாரமுறைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தரும்.

எம்மால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கையிலிலும், ஊழல் நடவடிக்கைகளுக்குத் துணைபோகாத, பக்கச்சார் பற்ற, வெளிப்படைத் தன்மை பேணப்படும். வன்முறையினால் வளர்ந்த அரசியலை மாற்றி வன் முறையற்ற, சகலருக்கும் நன்மை பயக்கும் அரசியற் பண்பாட்டை மீளவும் எமது சமூகத்தில் எமக்காக, எம் தாய்மாருக்காக, எம் சகோதர சகோதரிகளுக்காக உருவாக்குவோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் சகல சேவைகளையும் சமூகத்தின் சகல தரப்பினரும் பெறக் கூடியதாகச் செய்வோம். ஒவ்வொரு குடிமகனின் திட்டமிடலையும், பங்கேற் பையும், பங்களிப்பையும், அமுல்படுத்தலையும், கண்காணிப்பையும் மக்களுக்கான சேவைகளில் உறுதிப்படுத்துவோம்.

இன, மத, மொழி பேதமின்றி எந்தக் கட்சியில் பெண் போட்டியிட்டாலும் அவர்களுக்கான முழுமையான ஆதரவை மக்களுடன் இணைந்து வழங்குவோம்.. தேர்தல் வன்முறைகளையும், அரசியற் பழிவாங்கல்களையும் சமூகத்தில் அடியோடு இல்லாதொழித்து புதிய தொரு வன்முறையற்ற அரசியற் பண்பாட்டை ஏற்படுத்துவோம்.

நாட்டின் மொத்தச் சனத் தொகை யில் 52 வீதம் பெண்கள். இன்னும் வாக்களிக்கும் சனத்தொகையில் 56 வீதம் பெண்கள். இந்த நிலையில் கடந்த காலங்களில் பெண்ணுக்கொரு வாக்களித்து அவளது வெற்றிக்கு வாய்ப்பளிக்காத ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் உணர்ந்து பெண்களை நேரடி வேட்பாளர்களாக உள்வாங்கிய கட்சிகளுக்கும், கூடுதலான பெண்களை உள்வாங்கிய கட்சிகளுக்கும், தனது மனப் பாங்கினை மாற்றி பெண்களின் புதிய அரசியற் பிரவேசத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் இம்முறை பெண்களின் வெற்றிக் காகப் வழிசமைப்போம்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்டோர் நாம். பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர அவர்களுக்கான வாழ்வாதார மற்றும் தொழில்நுட்ப ஆற்றல், தகைமை மற்றும் தலைமைத்துவம் பெறவும், அவர்களுக்கான ஒளிமயமான வாழ்வுக்கு கட்டியங் கூறவும் பெண்கள் நாம் இம்முறை தலைமைத்துவப் பொறுப்பைத் தேர்தலில் பெறுவோம்.

எங்கள் அரசியல் மொழி இனிமை, சிநேகம், புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, ஆழ்ந்த சிந்தனை, கடும் முயற்சி, உறுதி, சுயகௌரவம், பணிவு, தன்னடக்கம் கொண்டனவாக இருப்பதனாலேயே உங்கள் தாயாக, சகோதரியாக, மகளாக உங்களுக்காகத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஆகவே உங்களது முழுமையான ஆதரவை பெண்களாகிய எங்களுக்கு வழங்க வேண்டும். – எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அடுத்த வருடம் வீடு திரும்புவதை மறந்து பேசுகின்றாராம் மைத்திரி

### இப்படிக் கூறுகின்றார் மஹிந்தர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வருடம் பதவிக் காலம் முடிந்து வீடு செல்லப் போகிறார் என்பதை மறந்து கருத்துத் தெரிவித்து வருகிறார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று மாலை வெலிஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினார்.

தங்களை நரகத்துக்கு அழைத்துச் செல்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். எம்மை நரகத்துக்கு அனுப்பும் வரையில் ஜனாதிபதி பதவியிலிருந்து செல்வதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பனிப் போர் ஒன்று நடைபெறுகின்றது. தற்பொழுது இந்த யுத்தம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. இந்த நாட்டின் மக்கள் தேர்தல் ஒன்று வரும் வரையில் பார்த்துள்ளனர். யானையைத் தோல்வியடையச் செய்ய, கையைத் தோல்வியடையச் செய்ய, வெற்றிலையைத் தோல்வியடையச் செய்ய, எதிர்வரும் 10 ஆம் திகதி அரசாங்கத்தின் நிலைமை குறித்து மக்கள் தீர்மானிக்க வேண்டும். – எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## 70 ஆண்டு காலப் பட்டறிவு

சுதந்திர இலங்கைக்கு 70 வயது.

'சுதந்திர இலங்கை' என்ற கட்டமைவில் இந்தத் தீவில் நடந்தவை என்ன என்பது இந்த எழுபது ஆண்டுகால நிறைவில் புரட்டிப் பார்க்கத் தக்க ஒன்றே.

அந்நிய காலனித்துவ ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரம் - அல்லது அரசியல் அதிகாரம் - சிங்களப் பெரும்பான்மையினரிடம் கைமாறியமையைத் தவிர, வேறு பெரிய அரசியல் கட்டமைவு மாற்றங்கள் எவையும் இதனால் ஏற்படவில்லை என்பதே இந்தத் தீவின் பூர்வீக மக்களாகிய தமிழரின் பட்டறிவாகும்.

வெள்ளையரின் கொடி இறக்கப்பட்டு, சிங்கள, பௌத்த மேலாண்மையைக் குறிக்கும் வாளேந்திய சிங்கத்தின் கொடி உயர்த்தப்பட்ட போது, சிங்களப் பேரினவாதமும் கூடவே மேலாண்மை பெற்று மேலெழுந்து உயர்ந்து, கோலோச்சத் தொடங்கியது.

எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்த தமிழர்களுக்கு எதிரான பௌத்த மேலாதிக்கவாதம் குரூர வடிவம் எடுத்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மாறி, மாறி ஆட்சிப்பீடத்துக்கு ஏறிய சிங்கள அரசுகளும், சிங்களத் தலைமைத்துவங்களும் தமிழருக்கு எதிரான அரச அடக்குமுறைக் கொள்கையை முழு அளவில் கடைப்பிடித்தன.

தமிழர் தேசத்தின் தேசிய வாழ்வுக்கு ஆதாரமாக இருந்த அடித்தளங்களை - அடிப்படைகளை - படிப்படியாகவும் ஒவ்வொன்றாகவும் தகர்த்தழிக்கும் நாசகாரத் திட்டங்களையே இந்த இன ஒடுக்குமுறை அரசுகளும் முன்னெடுத்தன.

பல முனைத் தாக்குதல்களாக இந்த இனவழிப்பு வேலைகள் வடிவெடுத்துக் கட்டவிழ்ந்தன.

மொழி உரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்புரிமை என்று தொடர்ந்த இந்த மேலாதிக்க வெறி, இறுதியில் தமிழர்களின் உயிர்வாழும் உரிமைக்கும் ஆப்பு வைப்பதாக விரிவடைந்தது.

தமிழர்கள் இந்தத் தீவில் ஒரு தனித்துவ இனமாக வாழ்வதற்கு அடிப்படையாக அமைந்த ஒவ்வொன்றையும் பேரினவாதம் இலக்கு வைத்து அழிப்பதை நோக்கமாகக் கொண்டே செயற்பட்டது. கடந்த எழுபது ஆண்டுகால வரலாறு அதனைத்தான் பதிந்து சென்றிருக்கின்றது.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கு அவசியமான அடித்தளத்தைத்தான் சிங்கள, பௌத்த மேலாதிக்க அரச ஒடுக்குமுறை குரூரமாகவும், கொடூரமாகவும், பல்பரிமாண முறைகளிலும் தாக்கியது.

காலத்துக்குக் காலம் ஏவிவிடப்பட்ட இனக்கலவரங்கள் இந்த நடவடிக்கைத் திட்டங்களின் ஒரு பகுதியாக அமைந்தன.

இக்கலவரங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். தமிழரின் சொத்துக்கள் நிர்மூலமாக்கப்பட்டன. தமிழர் தேசத்தின் எல்லைக்கிராமங்கள் அவர்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பற்றவை என்று உணர்த்தப்பட்டமை மூலம் அவர்கள் ஆங்காங்கே இருந்து துரத்தியடிக்கப்பட்டனர். இதனால் பல்லாயிரம் ஏக்கர் தமிழர் தாயகப் பிரதேசங்கள் சிங்கள மேலாண்மையால் கபளீகரம் செய்யப்பட்டன.

தமிழர் தேசத்தின் இருப்பையே நிர்மூலமாக்கும் சிங்கள மேலாண்மையின் மற்றோர் ஆக்கிரமிப்புக் கருவியாக அரச ஏற்பாட்டில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டன. தமிழர் தேசத்தின் பெரும்பகுதியைக் கறையான் அரிப்பது போல அரித்து விழுங்கிக் கொண்டது இந்தத் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள்.

சுதந்திர இலங்கையில் அதன் நாடாளுமன்றமே பெரும்பான்மைக் கொடுங்கோன்மையின் உச்ச ஆதிக்கத் தளமாயிற்று. அங்கு இனவாதம் அரசுக் கட்டில் தலைவிரித்தாடி அரசோச்சியது.

சிறுபான்மையினரான தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்குதான் யாக்கப்பட்டன.

சிங்கள மேலாதிக்க அரச ஒடுக்குமுறை தமிழர் தேசத்தின் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்று வியாபித்து இறுதியில் அந்த இனத்தின் இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கி அழித்தொழிக்கும் கொடூரமாக முழு அளவில் விரிவடைந்து உக்கிரம் பெற்ற போதே தங்களையும், தங்கள் இனத்தையும், இந்தத் தீவில் தமது இனத்தின் இருப்பையும் உறுதிப்படுத்துவதற்காக ஆயுதமேந்தத் தலைப்பட்டார்கள் தமிழ் இளைஞர்கள்.

அதன் விளைவாகவே இந்தத் தீவில் பெரும் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது. பல லட்சம் பேர் உயிரிழக்கவும், பல்லாயிரம் பேர் உடல் ஊனமுறவும், மேலும் பல்லாயிரம் பேர் நாட்டுக்கு வெளியேயும், நாட்டுக்கு உள்ளேயும் இடம்பெயரவும், எண்ணிலடங்கா சொத்துக்களும், உடைமைகளும் நாசமுறவும் - ஏன் நாட்டின் புகழ், கீர்த்தி, பொருளாதாரம் எல்லாமுமே - அழியவும் காரணமான கொடூர யுத்தத்துக்கு இந்த பௌத்த, சிங்கள மேலாண்மைவாத அடக்குமுறையே வித்திட்டு வழிசெய்தது.

இவ்வாறு இன முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தி, இந்தத் தீவின் இரு பெரும் தேசிய இனங்களான தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையிலான சமரச சகவாழ்வை சாத்தியமற்றதாக்கி, புரிந்துணர்வைக் கெடுத்து, மோசமான வாழ்வியல் நிலைமையை ஏற்படுத்தியது தான் இந்த எழுபது ஆண்டு கால சுதந்திர இலங்கையின் வரலாற்றுப் பெறுபேறாகும்.

அந்த எழுபது ஆண்டு நிறைவை மகிழ்வோடு நினைத்து வரவேற்பதற்குத் தமிழருக்கு ஏதுமே இல்லை என்பதுதான் உண்மையாகும்.

### மன்னார் வைத்தியசாலையின்

# குறைபாடுகளை தீர்த்து வையுங்கள்; முடியாவிடில் அதை மூடி விடுங்கள்!

## சுகாதார அமைச்சருக்கு சிவகரன் காட்டமான கடிதம்



மன்னார், ஜன.21

மன்னார் மாவட்ட வைத்திய சாலை நிர்வாகம் நிலையிழந்து போகிறது. இங்கு பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. இந்தக் குறைபாடுகளை தீர்த்து வையுங்கள் அல்லது வைத்தியசாலையை ஒரே படியாக இழுத்து மூடி விடுங்கள்.

– இவ்வாறு மன்னார் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளரான வி.எஸ்.சிவகரன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் காட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிலையிழந்து போகும் மன்னார் மாவட்ட வைத்தியசாலை; மாற்றான் தாய் மனப்பாங்கில் மத்திய அரசு! மூடி விடுங்கள் மன்னார் வைத்தியசாலையை" என்ற தலைப்பிட்டு எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் –

வைத்தியசாலையின் ஆளணிப்பற்றாக்குறையினால் நிர்வாகம் நிலையிழந்து போவதாக எனவே தங்களுக்கு பலமுறை கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் எமது நிலையை தெரிவித்திருந்ததுடன் ஜனாதிபதிக்கும் கடிதம்எழுதியிருந்தோம். இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை வீதியிலே குழந்தை பிறப்பு நிகழும் விசித்திரத்தையும் ஏற்படுத்திவிட்டீர்கள்.

மனித வாழ்வின் அத்தியாவசிய தேவையாகிய மருத்துவ சேவையைக் கூட அந்த நாட்டு மக்களுக்கு வழங்க முடியாவிட்டால் அந்த ஆட்சி நடப்பதில் என்ன பயன்? மனிதாபிமானத்திலும் சிங்கள தேசம் இவ்வாறான நிலையில் எப்படி நல்லிணக்கம் ஏற்படும்.

மன்னார் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்குமாறு பல்வேறு தரப்புகளால் விடுத்த கோரிக்கையை நிராகரிக்கும் நீங்கள் மன்னார் வைத்தியசாலையை மூடிவிடுங்கள். பொது மக்கள் தமது வைத்திய சேவையை வேறு இடங்களுக்கு செல்வார்கள். நீங்கள் மனிதாபிமானத்தில் விலை பேசுகிறீர்கள். என்றே எண்ணுகின்றோம்.

தற்போதைய சூழலில் அவசிய தேவையாகிய மகப்பேற்று வைத்திய நிபுணர் உட்படப் பல்வேறு விதமான துறை சார்ந்த பிரிவுகளுக்கும் வைத்திய நிபுணர்கள் இல்லை குறைந்த பட்சம் மயக்க மருந்து ஏற்றுவதற்குகூட ஆள் இல்லை பெயரளவில் தான் மாவட்ட வைத்தியசாலையாக காணப்படுகின்றது.


எனவே கர்ப்பிணிதாய்மரார் வீதியில் இறங்கி போராடி ஒரு வாரம் ஆகியும் எந்தவித தீர்வும் கிடைக்கிவில்லை எந்த விதமான அதிகாரமும் இன்றி பெயரளவில் தான் மாகாண சுகாதார அமைச்சு இயங்குகின்றது. ஆகவே மன்னார் மாவட்டத்தில் வைத்தியசாலையில் உள்ள பல்வேறு விதமான குறைபாடுகளை ஆராய்ந்து உடனடியாகத் தீர்வு காணவேண்டும்.

மத்திய சுகாதார அமைச்சு எங்களை வஞ்சிக்கின்றது யுத்த வடுக்களை சுமந்து ஏதிலிகளாய் உள்ள சாமானிய மக்களின் அடிப்படை உரிமையில் வேண்டுமென்று சதி செய்து சவாரியிடுகிறீர்கள்.

உங்களால் மாவட்ட வைத்தியசாலையைச் சரியாக நிர்வாகிக்க விருப்பம் இல்லை என்றால் மூடி விடுங்கள் எத்தனை தடவைகள் தான் கோரிக்கை விடுப்பது? இது ஒன்றும் வலிந்து கெஞ்சிக் கடன் கேட்கும் விடயமல்ல. இது உங்கள் தார்மீக கடமையாகும் வருடக் கணக்கில் ஏமாற்றி அவமதிக்கிறீர்கள். விரக்தியின் உச்ச நிலைக்கு உட்படுத்திவிட்டீர்கள். பாவம் எமது மக்களை ஏமாற்றாதீர்கள். நீங்கள் மட்டுமா எமது மக்களால் தொவு செய்யப்பட்ட வன்னியில் உள்ள ஓர் அமைச்சரும் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட இந்த விடயத்தில் எமது மக்களை பரிதாபத்திற்கு உட்படுத்திவிட்டார்கள். ஆகவே தயவு செய்து உடனடியாக எமது பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணுங்கள் இல்லாவிட்டால் வைத்திய சாலை அபிவிருத்திக் குழுவே வைத்தியசாலையை பூட்டுப் போட்டுப்பூட்ட வேண்டிய பரிதாபத்துக்குரிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என மிகுந்த மன வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். – என்றுள்ளது. (இ)

## இயல்வாணனின் இரு நூல்கள் கிளிநொச்சியில் வெளியீடு




சு.ஸ்ரீகுமரன்(இயல்வாணன்) எழுதிய 'பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்', 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' ஆகிய இரு சிறுவர் இலக்கிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கிளிநொச்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை இராமநாதபுரம் அ.த. க.பாடசாலை அதிபர் [illegible], வாழ்த்துரையை [illegible] வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும், வெளியீட்டுரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸும், மதிப்பீட்டுரைகளை காவேரி கலா மன்ற இயக்குநர் வண.பிதா ரி.எஸ்.யோசுவா அடிகள், கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர் ந.குகபரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூல்களை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை கே.பி.கே. கொன்ஸ்ரக்சன் நிறுவன உரிமையாளர் கே. பகீரதன் பெற்றுக் கொள்வார்.

நூலாசிரியர் பதிலுரை ஆற்றுவார்.

## ஈ.பி.டி.பியின் வேட்பாளர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி தொகுதி ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பிரதேச சபை வேட்பாளர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி அல்லாரை கிராமத்திற்கான பிரதேச சபை வேட்பாளரான கந்தையா சிவாஜி என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் போக்குவரத்து வழக்கொன்றில் விதிக்கப்பட்டிருந்த பிடியாணையை அடுத்தே அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

### நாளை

22.01.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.இ. 5.19 வரை
திதி : பஞ்சமி பி.ப. 1.39 வரை
சுபநேரம் : 12.35 – 2.05 வரை
இராகுகாலம்: 8.05 – 9.35 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனக் கடற்படையின் விரிவாக்கம்

## அம்பாந்தோட்டை குறித்து ஜப்பான் எச்சரிக்கை

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் கடற்படை நடவடிக்கைகள் விரிவடைந்து வருகின்றமை குறித்து ஜப்பானிய கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் கட்சுரோஷி கவானோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சீனக் கடற்படை தனது நடவடிக்கைகளை உறுதியாக விரிவுபடுத்தி வருகிறது என்றார்.

இந்தியாவைச் சுற்றி கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக சீனா தனது நிதியை முதலீடு செய்து வருகிறது. பிராந்தியத்தில் தனது இராணுவத் தளங்களின் வலையமைப்பை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

சீனாவின் கடற்படை விரிவாக்க மூலோபாயத்துக்கு உதவும் கட்டமைப்புகளுக்கு உதாரணமாக, பாகிஸ்தானின் குவடார் துறைமுகம், சீனாவின் முதலீட்டுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றமையைக் கூறலாம்.

கடந்த ஓகஸ்ட் மாதம் டிஜிபோட்டியில், சீனாவின் முதலாவது கடல் கடந்த கடற்படைத் தளம் திறக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம், 99 ஆண்டு குத்தகைக்காக சீனாவுக்கு கடந்த டிசெம்பரில் வழங்கப்பட்டுள்ளது.

டிஜிபோட்டியில் உள்ள சீனக் கடற்படைத்தளம் இந்தியப் பெருங்கடலில், அந்த நாட்டின் கடல் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே உதவியாக இருக்கும்.

மெடிட்ரேரியன் கடலைச் சுற்றிய பகுதிக்கு இலகுவாகச் சென்றடையும் வகையில், சீன கடற்படை தனது செயற்பாடுகளை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.



அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஒரு வர்த்தகக் கட்டுமானமே என்று இலங்கையும், சீனாவும் கூறுகின்றன.

ஆனால், 99 ஆண்டு குத்தகை என்பது சீனாவின் இராணுவ முன்னெடுப்புக் கான காத்திரமான நகர்வாகவே மாற்றியுள்ளது.

சீனா தனது கடல் கடந்த இரண்டாவது தளத்தை தெற்காசியாவில் அம்பாந்தோட்டையில் கட்டியெழுப்பினால், சீனக் கடற்படையின் ஆற்றல்கள் புதிய மட்டங்களுக்கு அதிகரிக்கக் கூடும்.

இத்தகைய விநியோக வசதிகளைப் பயன்படுத்தினால், சீனக் கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்குத்திரும்பாமல் நீண்ட காலத்துக்கு இந்தியப் பெருங்கடலில் தங்கியிருக்க முடியும்.

சீனா தனது அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் கடற்படைக் கப்பல்களை அண்மைய ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் தொடர்ச்சியாக நிறுத்தி வருகிறது.

எமது முக்கியமான கப்பல் பாதைகள் இந்தியப் பெருங்கடல் மற்றும் தென் சீனக்கடல் வழியாகவே இருக்கின்றன.

இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விரிவாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ஜப்பான் இணைந்து பணியாற் றும்.

தற்போதுள்ளது போன்ற சீனாவின் இராணுவ செலவின விரிவாக்கம், தொடர்ந்தால், ஜப்பான் தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும். அந்தச் சூழலைக் கணிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு எதிரான பிரேரணை 38 எம்பிக்கள் ஒப்பமிட்டுள்ளனர்



பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யோசனை முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிப்பது தொடர்பான பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் பிரதமர் முன்னுக்குப் பின் இந்த தகவல்களை வெளியிட்டமையை அடிப்படையாகக் கொண்டும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட உள்ளது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## சீமைக்கிழுவை மரத்தில் இருந்து மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டம்



சீன உடன்பாட்டில் மொனறாகலையில்

மரத்தை எரிபொருளாகப் பயன்படுத்தி, பசுமை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை இலங்கையுடன் இணைந்து சீனா மேற்கொள்ளவுள்ளது.

மொனறாகல மாவட்டத்தில், 70 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இந்த மின் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

சீனாவின் Beijing Full Dimension Power Tech Company Ltd, Nanjing Turbine and Electric Machinery Group Company Ltd மற்றும் Electric Machinery Group Company Ltd, ஆகிய நிறுவனங்கள், இலங்கை, IMS Holdings நிறுவனத்துடன் இணைந்து இந்த மின் திட்டத்தை அமைக்கவுள்ளன.

இதற்கான உடன்பாடு நேற்றுமுன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சீமைக்கிழுவை எனப்படும் கிளிறி சிடியா மரத்தை எரித்து, பெறப்படும் எரிபொருளில் இருந்தே, இந்தத் திட்டத்தின் மூலம் மின் சாரம் தயா ரிக்கப்படவுள்ளது.

இதன் மூலம், நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயனடைவர். ஆண்டுக்கு 32 லட்சம் டொலருக்கு சீமைக் கிழுவை மரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம், வரும் செப்ரெம்பர் மாதம் மின்சார உற்பத்தி, ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## அணுசக்தி ஒத்துழைப்பு குறித்து இலங்கை - ரஷ்யா பேச்சு



அமைதித் தேவைக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக, ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இலங்கையும் ரஷ்யாவும் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ரஷ்யாவின், அரச அணுசக்தி நிறுவனமான, ரொசா ரொம்மின், பிரதிப் பணிப்பாளர் நிக்கலொய் ஸ்பாஸ்கி, இலங்கை அமைச்சர்கள் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோருடன் இதுகுறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த 16ஆம், 17ஆம் திகதிகளில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

அணுசக்தியை அமைதித் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கான ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக, இலங்கையுடன் பேச்சுக்களை நடத்தியதாக, ரொசா ரொம்மின், பிரதிப் பணிப்பாளர், நிக்கலொய் ஸ்பாஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக மேலதிக பேச்சுக்களை நடத்தவும், ரஷ்யாவில் உள்ள அணுசக்தி மையங்களைப் பார்வையிடவும், ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு இலங்கை அரச அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ரஷ்யாவின், அரச அணுசக்தி நிறுவனமான, ரொசா ரொம்மின், பிரதிப் பணிப்பாளர், நிக்கலொய் ஸ்பாஸ்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ட்ரம்ப், வடகொரிய கிம் பிதற்றும் **'நியூக்ளியர் பட்டன்'** உண்மையில் இருக்கிறதா?

# இருவருமே புருடா விடுகிறார்கள்...!

**ர.சீனிவாசன்**

வடகொரியா அணுசக்தி நாடாக உருவெடுத்து வருகிறது. அணு ஆயுதங்களையும்ஏவுகணைகளையும் பெரியளவில் தயாரிப்பதே நம் இலக்கு. என் மேசையில் அணு ஆயுதத்தை ஏவுவதற்கான 'நியூக்ளியர் பட்டன்' எப்போதும் இருக்கும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் புத்தாண்டு வாழ்த்து சொல்கிறேன் என்ற பெயரில் இப்படிச் சொல்லிவிட, அமெரிக்காவின் ட்ரம்ப் மட்டும் சும்மா இருப்பாரா?

வடகொரியாவின் அதிபர் கிம், எனது மேசையில் எப்போதும் அணு ஆயுதத்தை ஏவுவதற்கான 'பொத்தன்' (பட்டன்) இருக்கும் என்று கூறியுள்ளார். என் மேசையிலும் அதைப் போன்றே ஒரு பட்டன் இருக்கிறது என்று அவரிடம் யாராவது எடுத்துச் சொல்லுங்கள். என் நியூக்ளியர் பட்டன் மிகவும் சக்தி வாய்ந்தது. அது வேலையும் செய்யும் என்று அவரும் சூடாக, இந்த இரண்டு முட்டாள்களுக்கு நடுவில் மாட்டிக்கொண்டோமே என்று உலக நாடுகள் அனைத்தும் கலக்கத்தில் உள்ளன.

இவர்களின் அச்சுறுத்தும் பேச்சுக்களை கேட்கும்போது, நமக்கு கண்முன் தோன்றும் பிம்பம் என்னவாக இருக்கிறது? ஆக்ரோஷமான முகத்துடன் உயர்திரு ட்ரம்ப் பெருந்தகையோ, கிம் பெருந்தகையோ நான்தான் பெரியவன் என்று காட்ட, தங்கள் மேசையின் மேல் உள்ள சிவப்பு நிற நியூக்ளியர் பட்டன் ஒன்றை அழுத்திவிட, இரண்டு நாடுகளையும் அணு ஆயுதங்கள் பெரியளவில் தாக்க சரி, அதை விடுங்கள்.

அந்தச் சிவப்பு நிற பட்டன், அதாவது ஜனாதிபதி மேசையில் இருக்கும் நியூக்ளியர் பட்டன், உண்மையாகவே இருக்கிறதா? இருக்கிறது என்றால், அதை ஒருமுறை அழுத்திவிட்டால் போதுமா? அணு ஆயுதங்கள் விண்ணில் ஏவப்பட்டு விடுமா? இதுபோல புதிரான கேள்விகளுக்கு விடைகள் இதோ!

### 'பட்டன்' வரலாறு

இந்தப் பட்டன் பஞ்சாயத்தும், பஞ்ச்வசனமும் அமெரிக்காவிற்கு ஒன்றும் புதிதல்ல. பட்டனில் நான் கை வைத்திருக்கிறேன் என்பது பல வருடங்களாக உலக அரங்கில் பேசப்படும் ஒரு வசனம் தான். இதன் ஆரம்பப் புள்ளி, இடைப் புள்ளி எல்லாவற்றையும் பார்த்து விடுவோம்.


நியூக்ளியர் பட்டன் இரண்டாம் உலகப்போர் சமயம். மேலே போர் விமானங்களில் இருந்து கொண்டு பாம்பர்கள் கீழே வெடிகுண்டு வீசுவார்கள். கீழேயிருந்து எதிரி நாட்டு வீரர்கள் விமானத்தைத் தாக்குவார்கள். அப்படித் தாக்கும்போது சில சமயம் விமானம் பெரியளவில் சேதாரம் அடைந்துவிடும். சரி, வீரர்களையாவது காப்பாற்றலாமே என்று அபாய மணி ஒன்றை பைலட் அழுத்துவார். பாம்பர்கள் அனைவரும் கீழே குதித்து விடுவார்கள்.

அந்த அபாய மணியை அழுத்தும்முன், பட்டனில் நான் கை வைத்திருக்கிறேன் என்று பைலட் அலறுவார். உடனே வீரர்கள் அனைவரும் தயாராகி விடுவார்கள். பின்னாளில், இது பயமூட்டுவதற்காக கூறப்படும் வசனங்களில் ஒன்றாகிவிட்டது.

முக்கியமாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள், சக போட்டியாளர்களைப் பயமுறுத்த, மக்களுக்கு எச்சரிக்கை விடுக்க இதை அதிகம் பயன்படுத்த தொடங்கினர். 1964 ஆம் ஆண்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன், தன்னை எதிர்த்துக் களமிறங்கிய குடியரசுக் கட்சி வேட்பாளர் பேரி கோல்ட் வாட்டர் அவர்களிடம் இப்படிக் கூறினார். ஒரு சிறந்த தலைவன், அந்த ட்ரிக்கரை இழுக்கவே கூடாது. அந்தப் பட்டனை அழுத்தினால் உலகமே அழிந்துவிடும் அபாயமுள்ளது.

வியட்நாம் போரின்போது, அமெரிக்கா முன்னாள் அதிபர் ரிச்சர்ட் நிக்சன் வடக்கு வியட்நாமை சேர்ந்தவர்கள் தன்னை ஒரு கோபக்காரனாக பார்க்க வேண்டுமென்றே விரும்பினார். இவருக்குக் கோபம் வந்தால், பட்டனை அழுத்தி விடுவார் என்றே அவர்களும் நம்பினர். இவ்வளவு ஏன், கடந்த 2016 அமெரிக்க அதிபர் தேர்தலில் கூட, ஹிலாரி கிளின்டன், ட்ரம்பின் விரல்களுக்கு அந்தப் பட்டனும், அவர் கைகளுக்கு நம் நாட்டின் பொருளாதாரமும் கிடைத்துவிடக் கூடாது என்றே பிரசாரம் செய்தார்.





### அணு ஆயுதப் போர் அது என்ன பாஸ் பட்டன்?

அணு ஆயுதம் என்றாலே ஒரு பட்டன்தான். அதைத் தட்டிவிட்டாலே போதும், எல்லா ஆயுதங்களும் உடனே தாக்கத் தொடங்கிவிடும். ஆயுதங்கள் அனைத்தும் முன்னரே தயார் நிலையில்தான் இருக்கின்றன. உங்கள் அனுமானம் இதுவென்றால் அந்த எண்ணத்தை முதலில் அழித்து விடுங்கள். இதில் சிறிதளவும் உண்மையில்லை. ஏனென்றால் அப்படியொரு பட்டன் எந்த அதிபரின் மேசையிலும் கிடையாது. அப்படியென்றால் அணு ஆயுதத்தை ட்ரம்ப் எப்படிதான் ஏவுவார்? அணு ஆயுத பலம் கொண்ட எல்லா நாடுகளுக்கும், அது கடைசி ஆயுதம் போலத்தான். அதற்கு உயிர்கொடுக்க ஒரு நாட்டின் தலைவன் பல சிக்கலான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ட்ரம்பை எடுத்துக் கொண்டால், முதலில் அணு ஆயுதத்தை ஏவுமாறு கட்டளையிடுவது ட்ரம்ப் தான் என்பதை உறுதி செய்ய வேண்டும். பின்புதான் மாற்றவை எல்லாம்!



இங்கே உண்மையில் பட்டன் என்று எதுவும் இல்லை. ஒரு கைப்பெட்டி வேண்டுமானால் இருக்கிறது. அந்தக் கைப்பெட்டி ட்ரம்ப் எங்கே போனாலும் கூடவே செல்லும். ட்ரம்ப் என்றல்ல, அமெரிக்க அதிபர் யாராக இருந்தாலும் அவரை இந்தப் பெட்டி பின்தொடர்ந்து செல்லும். அதிபரின் நேரடி கட்டளையின் கீழிருக்கும் ஐந்து இராணுவ உதவியாளர்களில் ஒருவர் அதை எப்போதும் தன் கையில் வைத்திருப்பார். 20.5 கிலோ எடையுள்ள அந்தக் கைப்பெட்டிக்குள் இருக்கிறது அணு ஆயுதத்தை விழிக்கச் செய்யும் வித்தை.

### அணு ஆயுதம் எப்படி இயக்கப்படும்?

அணு ஆயுதத்தை எப்படி இயக்குவது என்ற கையேடு மற்றும் இப்போதைய தொழில்நுட்பத்தின் படி இருக்கும் ஆயிரம் அணு ஆயுதத்தையும் வைத்து எந்தெந்த இடங்களை அமெரிக்கா தாக்க முடியும் என்ற விவரம் ஆகிய இரண்டும் இந்தப் பெட்டியில் இருக்கும். இதை இயக்க, அதிபராக இருக்கும் மனிதரிடம் ஒரு 'கோட்' கொடுக்கப்பட்டிருக்கும். அதை அவர் பதிவு செய்தால் மட்டுமே அணு ஆயுதங்களை ஏவ முடியும். இந்தக் கோட் என்பது ஒரு கார்டில் பதியப்பட்டிருக்கும். அந்த கார்டின் ரகசிய பெயர் பிஸ்கட் என்கிறார்கள்.

### அமெரிக்காவின் அலட்சியம்

எல்லாம் சரி, இதை உண்மையாகவே அமெரிக்கா தன் பெரிய பலமாக நினைத்துச் செயற்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் அதன் வரலாறு பதில் தருகிறது. அமெரிக்க இராணுவத்தில் உயர் பதவி வகித்த ஜெனரல் ஹென்றி ஷெல்டன் அவர்கள் 2010 ஆம் ஆண்டு தன் சுயசரிதையை வெளியிட்டார்.

இதில் ஓர் இடத்தில், இந்த பிஸ்கட் குறித்து ஒரு ரகசியத் தகவலை அம்பலப்படுத்தினார். அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன், தன் ஆட்சிக் காலத்தின் இறுதியில் பிஸ்கட் கார்டை தொலைத்து விட்டார் எனவும், ஆனால் அதைப் பல மாதங்கள் யாரிடமும் கூறாமல் இருந்தார் எனவும் ஹென்றி குறிப்பிட்டுள்ளார்.

### ட்ரம்ப்

அமெரிக்க அரசமைப்பில் ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது என்றால் அது பின்வரும் விஷயம் தான். அங்கே ஜனாதிபதி எனப்படும் அதிபர் வைக்கும் கட்டளை தான் சாசனம். அவர் அணு ஆயுதத்தைத் தன் தனிப்பட்ட கார ணங்களுக்காக ஏவ நினைத்தால் கூட யாராலும் தடுக்க முடியாது. காங்கிரஸ், இராணுவம், மேல் சட்டசபை உறுப் பினர்கள் யாரும் எதிர்த்து கேள்வி கேட்க முடியாது. அதிபர் செய்யும் ஒரு சிறிய தவறு கூட அங்கே பெரிய பாதிப்பை ஏற்படுத்தலாம்.

### வடகொரியாவில் எப்படி?

அமெரிக்காதான் ஆபத்தானது என்ற முடிவிற்கு நீங்கள் வருமுன், வடகொரியாவின் நிலையையும் பார்த்து விடுவோம். அது தன்னந்தனியாக வெளியுலக தொடர்பிலிருந்து விலகியே இருப்பதால் அதன் அணுசக்தி திட்டம், கொள்கைகள், அணு ஆயுதங்களின் தற்போதைய நிலையென்ன, எதுவும் யாருக்கும் தெரியாது. அதன் அதிபர் கிம் ஜோங் உன் ஊடகங்களுக்குக் கூறுவதே வேத வாக்கு. சில மாதங்களுக்கு முன்பு, பசிபிக் தீவுகளில் ஒன்றான குவாம் என்ற அமெரிக்க பிரதேசத்தை அணு ஆயுதம் கொண்டு தாக்கப் போகிறேன் என்று எச்சரிக்கை விடுத்தார். வடகொரியாவின்ஏவுகணைகள் கண்டம் விட்டு கண்டம்தாண்டி அமெரிக் காவை அழிக்கும் சக்தியுடையது, நொடியில் எல்லாவற்றையும் பஸ்பமாக்கி விடுவேன் என்றெல்லாம் பயமுறுத்தினார். ஆனால், உண்மையில் இதற்கெல்லாம் வாய்ப்பில்லை. அவர் மேசையில் நியூக்ளியர்பட்டன் இருக்கிறதா என்பதும் சந்தேகமே.

அணு ஆயுதப் போர் என்ற முடிவு எடுத்தபின்பு, ஏவுகணைகளைத் தயார்படுத்தவே பல மணி நேரங்கள் தேவை. காரணம், அணு ஆயுதங்கள் அனைத்தும் திரவ ரொக்கெட் எரிபொருள் கொண்டு இயங்குபவை. அந்த எரி பொருளை நிரப்பி ஏவுகணையை எப்போதும் தயார் நிலையில் எல்லாம் வைத்து கொண்டிருக்க முடியாது. வேண்டியபோது அதை நிரப் புவது மட்டுமே சாத்தியம். இதனால் கிம் கூறுவது வெறும் பயமுறுத்தும் செயல் என்றே எடுத்துக் கொள்ள முடியும்.

அணு ஆயுதங்கள் வைத்து ஒரு பிரபலமான ஜோக் உண்டு. ஏலியன்கள் கூட்டம் ஒன்று இந்தப் பிரபஞ்சத்தில் அவர்களை விட அறிவில் சிறந்த ஜீவராசிகள் உண்டா எனத் தேடுதல் வேட்டை நடத்துகிறது. பூமியை வந்தடைந்த பின்பு, மனிதர் களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, முக்கியமாக அணு ஆயுதங் களைப் பார்த்தபின்பு, ஆஹா! நம்மை விட அறிவில் சிறந்தவர்கள் இவர்கள்! என்று நினைத்துக் கொள்கின்றது. சிறிது நேரம் பூமியை வட்டமடித்து பின்னர், அதில் ஓர் ஏலியன் இப்படிச் சொல்கிறது.



நிச்சயம் இவர்கள் புத்திசாலியாக இருக்க முடியாது. அவர்களின் அணு ஆயுதங்கள் அனைத்தும் அவர்களின் பூமியை நோக்கிச் செல்லும் வகையில் தான் இருக்கின்றன.

அவர்களே தங்கள் கிரகத்தின் பல்வேறு இடங்களைக் குறி –வைத்து காத்திருக்கிறார்கள். இவர்களை விட மடையர்கள் யாருமில்லை. நாம் கிளம்பலாம்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்னேஸ்வரன் ஐயா!

# இலட்சுமண ரேகை கடக்கும் தருணமிது

ஸ்ரிவன் புஸ்பராஜா.க

கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் அவர்களே! நீங்களாகவே உங்களைச் சுற்றி வரைந்திருக்கும் இலட்சுமண ரேகையை கடந்து தமிழ் மக்களின் எதிர்கால இருப்பினை உறுதி செய்வதற்கு தீர்க்கமான முடிவெடுக்கும் தருணமிது. இதனைத் தவறவிடின் சம்பந்தன் – சுமந்திரன் குழுவின் தமிழினத் துரோகத்தை விஞ்சியதான வரலாற்றுப் பழியை நீங்கள் ஏற்கும் நிலை உருவாகும் என்பதனையும் இத் தருணத்தில் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உண்மை கசப்பானதாகத்தான் இருக்கும். கசப்பானதாக இருக்கின்றது என்பதற்காக உண்மையை உரைக்காது மௌனித்திருக்க முடியாது. அவ்வாறு நாமும் மௌனித்திருந்தோமேயானால் வரலாறு என்றென்றும் மன்னிக்காது.

உங்கள் அரசியல் பிரவேசத்திற்கு வழியேற்படுத்திக் கொடுத்தார்கள் என்ற ஒற்றை மட்டுமே கருதி, சம்பந்தன் – சுமந்திரன் கூட்டணி செய்யும் தமிழினத் துரோகத்தைப் பொறுத்துக் கொள்வதற்கோ, தமிழரசுக் கட்சியின்– எதேச்சதிகாரப் போக்கினைக் கண்டுகொள்ளாதிருக்கவோ முடியாது. அவ்வாறான மன நிலையில் தொடர்ந்தும் இருப்பீர்களேயானால் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தமாகிவிடும்.

சம்பந்தன் – சுமந்திரன் கூட்டணியோ, தமிழரசுக் கட்சியோ உங்களை தமிழ் அரசியல் களத்தில் அறிமுகப்படுத்தியிருக்கலாம். ஆனால், இன்று நீங்கள் ஏற்றிருக்கும் உயர் மதிப்பு நிலையானது விடுதலை வேணவா சுமந்துநிற்கும் எமது மக்களின் தார்மீக ஆதரவுத் தளத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதே மறுக்க முடியாத பேருண்மையாகும்.

நம்பி நம்பி ஏமாந்து போகும் தமிழரின் தலைவிதி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் காலத்தில் திருத்தி எழுதப்பட்டிருந்தது. இருந்தும் பிராந்திய, உலக வல்லாதிக்க சூழமைவுக் கேற்றவாறு தமிழர்களின் பாதுகாப்பான இருப்பினை உறுதிசெய்யும் நோக்கில் ஆயுதங்களை மௌனிக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

இதுதான் தருணம் என்பதாக மனித நேயம் போதிக்கும் பிராந்திய, உலக நாடுகள் தமிழர்களின் பேரழிவை விழி திறந்தஉறக்கநிலையில்நின்றுவேடிக்கை பார்த்தன. அது போதாதென்று நடந்த இனப்படுகொலைக்குக் காரணமானவர்களை இந்தக் கணம்வரை பாதுகாக்கும் முனைப்பில் ஈடுபட்டு வருகின்றமை அந்தந்த நாடுகள் கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் நேர் விரோதமான நிலைப்பாடாகும்.

நீதி நியாயத்தை நிலைநாட்ட வேண்டிய சர்வதேச சமூகம் நல்லிணக்கம், நல்லாட்சி, அபிவிருத்தி என்ற மதிமயக்க நிலையில் நின்று பாதிக்கப்பட்ட எமது அபிலாஷைகளை தியாகம் செய்யுமாறு நிர்ப்பந்தித்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களது கண்மூடித்தனமான சரணாகதி அரசியல் அணுகுமுறையே இதற்கெல்லாம் முழுக்க முழுக்க காரணமாக அமைந்துள்ளது.

நீதிக்கான செயற்பாடுகளை காரணம் காட்டி காலத்தை இழுத்தடித்தார்கள். காலத்தைக் கடத்திய பின்னர், இனிமேல் நடந்தவற்றைபேசி என்ன ஆகப்போகின்றது தருவதை வாங்கிக் கொண்டு வாழப்பழகிக் கொள்ளுங்கள் என்ற ரீதியில் தரம்தாழ்ந்து போதிக்கின்றார்கள். இன்னும் கொஞ்சக் காலம் இப்படியே கடந்தோமேயானால் தருவதை சத்தமில்லாது வாங்கிக்கொள்ளுங்கள். இல்லையென்றால் அதுவும் கிடைக்காது என்று மிரட்டாத குறையாக உபதேசிப்பார்கள்.

### கோவணத்தையும் கூட உருவி எடுக்கும் நிலையில்...

இவ்வாறான இக்கட்டு நிலையில் தமிழர்களைக் கொண்டுவந்து நிறுத்தியது போதாதென்று தமிழர்களின் மானத்தை மறைக்க இருக்கும் கோவணத்தையும் உருவியெடுக்கும் விதத்தில் ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசமைப்பு திருத்தத்தை ஏற்றுள்ளனர் த.தே.கூட்டமைப்பின் தலைவர்கள்.

தமிழ் மக்களின் நிலைப்பாட்டிற்கு நேர் விரோதமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் விரோதப் போக்கிற்கு மத்தியில் ஒரேயொரு ஆறுதலாக இருப்பது உங்களது நிலைப்பாடு மாத்திரமே. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தியதான உங்கள் நிலைப்பாடே தாயக அரசியல் வெளியை ஆக்கபூர்வமான நிலையில் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இருந்த போதிலும் தமிழ் மக்களின் நிரந்தர இருப்பை உறுதி செய்ய வேண்டுமாயின் நீங்கள் தீர்க்கமான முடிவொன்றைக் கால தாமதமின்றி விரைந்து எடுத்தேயாக வேண்டும். ‘கழுவிற நீரில் நழுவிற மீனா’ இருந்தது போதும். உங்கள் தயக்கத்தை எம்மால் உணர முடிகின்றது. சம்பந்தன் சொல்கின்றமை போன்று பேரதிசயம் நடக்க இருந்து அதை நீங்கள்கெடுத்துவிட்டதான பழிச்சொல்லை ஏற்காதிருப்பதற்காகவே பட்டும் படாமலும் இருந்து வருகின்றீர்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

> நீங்கள் மௌனம், தயக்கம் காட்டி கடக்கத் தவறினால் பேரனர்த்தம் ஏற்பட்டுவிடும்...

### வரலாற்றுப் பழியை சுமக்க நேரிடும்

சம்பந்தன் – சுமந்திரன் கூட்டணியின் பழிச்சொல்லிற்கு பயந்தோ, தயங்கியோ இவ்வாறுச் இருந்தீர்களேயானால்வரலாற்றுப் பழியைச் சுமக்க நேரிடும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அறுதியிட்டு நிறுதட்சனமாக உரைக்கின்ற ஒரே காரணத்திற்காகவேதமிழ்மக்கள்உங்களை ஆதரித்துநிற்கின்றார்கள்என்பதை நீங்கள் உணர்ந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகின்றோம்.



தமிழ் மக்களின் நலன்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் செயற்பட வேண்டிய நிலையில் பௌத்த சிங்கள பேரினவாத அரசு மற்றும் பிராந்திய உலக வல்லரசுகளின் நலன்களுக்கு ஒத்திசைவான போக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் குறித்தான வாதப்பிரதிவாதங்கள் இன்று அர்த்தமற்றதொன்றாகிவிட்டது.

### தருணம் வந்து விட்டது.

மக்கள் மாற்றம் குறித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ள இவ்வேளையில் நம்பிக்கைக்குரிய தலைவராக விளங்கிவரும் நீங்கள் துணிந்து தெளிவான முடிவெடுக்கவேண்டிய தருணம்வந்துவிட்டது. உங்களால் எதுவும் கெட்டுவிடக் கூடாதென்று நீங்கள் காட்டும் தயக்கம் உங்களை நம்பி நிற்கும் தமிழர்களை மீளமுடியாத பேராபத்தில்கொண்டு போய் தள்ளி விடும் என்பதை நினைவில் நிறுத்தி நல்லதொரு முடிவை விரைந்து எடுத்திட வேண்டும்.

சம்பந்தன், சுமந்திரன், மாவை, சிறிதரன், அடைக்கலநாதன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாக உள்ளவர்களையும் ஏற்று அங்கீகரித்து தமிழ் மக்களின் அரசியல் தலைமையென்ற அங்கீகாரத்தை வழங்கியது அவர்கள் மீதான தனிப்பட்ட அபிமானத்தினாலோ அல்லது அவர்களது அரசியல் ஆளுமையின்பாற்பட்டோ இல்லை. (23 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

2017ம் ஆண்டு ஏவிளாம்பிவருடம் கார்த்திகை திங்கள் 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஸப்தமித்திதி காலை 9.51 வரை பின்னர் அஷ்டமி நட்சத்திரம் அவிட்டம் பகல் 3.04வரை பின்னர் சதயம் மரணயோகம் பகல் 3.04 வரை பின்னர் சுபயோகம் ராகுகாலம் மாலை 4.18 முதல் 5.45 வரை சுபநேரம் காலை 9.19 முதல் 10.48 வரை திவசம் செய்ய வேண்டியதிதி கார்த்திகை மாத வளர்பிறை அஷ்டமி பிறந்தநட்சத்திர வழிபாடு அவிட்டம்

**சந்திராட்டமநாள்** : அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**19.11.2017 25.11.2017**

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

## மேஷம்:

மேடராசியினருக்கு யோகமான வரம் பணபலம் பெருகும் குடும்பத்தில் உற்சாகம் உண்டாகும். பொன், பொருள், சேர்க்கையும், ஆடை ஆபரண சேர்கையும் கிடைக்கும். தொழில் மேன்மை பெறுவார்கள். ஆக வழியால் சிலருக்கு வீடு, காணி கிடைக்கும் திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்புகள் உண்டாகும் சிலருக்கு தொழில் விஷயமாக வெளிநாடு செல்ல யோகம் உண்டாகும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் முன்னேற்றமடையும்.

## ரிஷபம்:

ரிஷபராசியினருக்கு சமபலன்ள் காணப்படுகின்றன. பொருளாதாரத்தில் ஓரளவு பலன்கிட்டும் தொழிலில் கவனமுடன் செயல்படவேண்டும் உடல் நலனில் கவனம் செலுத்தவேண்டும் குடும்ப பிரச்சனை முடிவுக்கு வரும் மாணவர்கள் கல்வியில் தடைகள் உணடாகும் உத்தியோகத்ர்களுக்க வேலை சுமையும் அலைச்சலும் அதிகரிக்கும் வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும் பெண்களு குடும்பசெலவுகளைசமாளிக்கமுடியாமல் நகைகள் அடைவு வைக்க வேண்டிவரும் கொடுக்கல்,வாங்கலில் கவனம் தேவை.

## மிதுனம்:

மிதுனராசியினருக்கு ஆக்க பூர்வ வாரம் பொருளாதாரத்தில் உயரும் எதிர்பாராத தொடர்புகளும் வெளிநாட்டு சந்திப்புகளும் உண்டாகும் மாணவர்கள் மேலும் வளர்ச்சியடைவார்கள் குடும்பத்தில் இணைந்து செய்யும் தொழில் சிறப்பாக அமையும் பெண்கள் முயற்சி செய்தால் தொழில்க்கடன் வீடு வாங்க கடன் பெறும் வாய்ப்பு அமையும் வியாபாரிகளுக்கு உழைப்பிற்கு தகுந்த வருமானம் கிட்டும் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரயின் கட்டுப்பாடு தளரும் ஊக்கமுடன் திறமையை வெளிப்படுத்தவார்கள்

## கடகம்:

கடகராசியினருக்கு அலைச்சல் மிகுந்த வாரம் தொழில் ரீதியாக நிறைய அலையவேண்டிவரும் பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவீர்கள் சிலர் கொடுத்த கடனை திருப்பி கொடுக்க அலைந்து திரிவார்கள் சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள் தொழிலாளர்கள் வேலை தேடி அலைவார்கள் சிலர் உடல் நலகுறைபாடால் மருத்துவரின் உதவி நாடுவார்கள் பெண்கள் கூலி தொழில் செய்ய விரும்பி வங்கியின் உதவியை வேண்டுவார்கள்.

## சிம்மம்:

சிங்கராசியினருக்கு சமபலன் காணப்படுகின்றது வருமானம்சுமாராக இருக்கும் பணம் பற்றாக்குறையால் கடன்படுதல் பிரச்சனைகளுக்க தீர்வே காணமுடியாமல் தடுமாறுதல் போன்ற நிகழ்வுகள் உண்டாகும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்து பணிசெய்யமுடியாமல் இடையூறுகள் விளையும் செலவினங்கள் அதிக்கும் வியாபாரத்தில் தெதாழிலாளர் பற்றாக்குறையால் இவர்களே வேலையைச் செய்யவேண்டிவரும் கலைஞர்களுக்கு முயற்சிகளால் நல்ர பலன் கிட்டும்

## கன்னி:

கன்னிராசியினருக்கு யோகமான வாரம் பணபலம் அதிகரிக்கும் குடும்பத்தில் அன்யோனயம் அதிகரிக்கும் வியாபாரத்தில் அமோகலாபம் வரும் செய்யும் தொழில் முன்னேற்றமடையும் சொந்தவீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும் வாகனயோகமும் உண்டாகும் சிலர் இருக்கும் வீட்டைத்திருத்தி நவீனப்படுத்தவார்கள் சகோதரவழியால் நன்மைகள் உண்டாகும் அரசாங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு கௌரவபதவிகள் தேடிவரும் சிலருக்கு உத்தியோக உயர் கிடைத்து வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

## துலாம்:

துலாராசியினருக்கு விருத்தியான வாரம் பணபுழக்கம் தாராளமாக இருக்கும் குடும்பஉளவில் அன்பு, பாசம் உண்டாகும் ஏற்றமான வாழ்க்கைக்கு இவர்களின் தொழில் பயனுள்ளதாக அமையும் அரசகாரியங்கள் அனுகூலமாக இருக்கும் வயாபாரம் அபிவிருத்தி அடையும் பெண்களுக்கு சுயதொழில் நன்றாக இருக்கும் மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள் சகோதர உதவி வலுப்படும் இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள் கொடுக்கல் வாங்கலில் சுமூகநிலை உண்டாகும்

## விருச்சிகம்:

விருச்சிகராசியினருக்கு சலனம் மிகுந்த வாரம் பொருளாதாரத்தில் சில தடைகளும் சிக்கலும் வரும் எந்த வரவும் அலைந்துதிரிந்தால்தான் வரும் குடும்பத்தில் குழப்பங்கள் உண்டாகும் உதவி செய்ய மனம் இருந்தாலும் உடல் ஒத்துழைக்காது இனம் புரியாத கவலையில் மூழ்கி மனதளர்ச்சியுடன் காணப்படுவார்கள் வர்த்தகத்தில் பொருளாதாரத்தில் சமமாக இருக்கும் புத்திரர்களால் சில சங்கடங்கள் நேரலாம். மாணவர்கள் கல்வியில் தரமான முன்னேற்றமடைவார்கள்.

## தனுசு:

தனுசுராசியினருக்கு மத்திமமான வாரம் பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும் எடுக்கும் கருமங்கள் தீவிர முயற்சியின் மேல் அனுகூலமாக இருக்கும் தொழிலில் போட்டிகளைத்தாண்டி ஓரளவு வருமானம் பெறுவார்கள் உறவினர்கள் நண்பர்களால் செலவுகள் உண்டாகும் பொது விடயங்களில் தலையிடுவதால் பணம் விரயமாகும் வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்

## மகரம்:

மகரராசியினருக்கு நன்மையான வாரம் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் முயற்சிகளுக்கு பலன் கிட்டும் உன்னதமான பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்ப்பார்புகள் அமையும் அரசாங்க ஆதரவும் அதிகாரிகளின் நட்பும் நன்மை தரும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும் ஆரம்ப கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் உண்டாகும் உத்தியோகத்தர்களுக்கு புதிய பதவிகள் சலுகைகள் கிட்டும் சகோதரஉறவு வலுவடையும்

## கும்பம்:

கும்பராசியினருக்கு அதிஷ்டமான வாரம் தலைலாபம் அதிகரிக்கும் திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும் குடும்பத்தில் ஒற்றுமைஉணர்வு அதிகரிக்கும் பூர்வீக சொத்துகள் கைக்கு வந்து சேரும் அரசவழியால் சிலருக்கு வீடு காணி என்பன வந்து சேரும் வேலைதேடுவோருக்கு திறமைக்கு தகுந்த வேலை கிடைக்கும் பெண்களுக்கு திடீர் திருமணவாய்ப்பு உண்டாகும் சிலர் வெளிநாடு சென்று வேலை பார்க்கும் வாய்ப்பை அடைவார்கள்

## மீனம்:

மீனராசியினருக்கு கவலையானவாரமாகும் பணவரவு குறையும் குடும்பபிரச்சனை அதிகர்க்கும் உறவினர்கள் ஒருவரின் துக்கசெய்தி கேட்க நேரும் செய்யும் தொழில் இடைஞ்சல்கள் உண்டாகும் உத்தியோகத்தினருக்கு வேலைச்சுமை பொறுப்புகள் அதிகர்க்கும் உடல் நலம் பாதிப்படைவதால் மருத்துவ செலவுஅதிகரிக்கும் தாயாரின் உடல் நலம் மோசமடையும் பெண்களுக்கு குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும். தொழிலில் மனஉழைச்சலும் உண்டாகும்==

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹிட்லரின் வதை முகாமில் பூத்து மலர்ந்த அமரத்துவ காதல்!

இரத்தக் களறிக்கு நடுவில் இதயத்தில் காதல் மலருமா? வதை முகாமில் யாருடைய இதயமாவது காதல் இன்பத்தை அனுபவிக்க முடியுமா? உயிர் பிழைத்தால் போதுமென்று இறுதி நிமிடங்களை அச்சத்துடன் கழிக்கும் நிலையில், கண்முன் கொத்துக்கொத்தாக மக்கள் இறப்பதை காணும்போது காதல் உணர்வு இதயத்தில் ஏற்படுமா?

இதுபோன்ற கேள்விகளுக்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும். ஆனால், காதல் என்பது வரையறைகளுக்குள் அடங்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஹிட்லரின் வதை முகாமில் பூத்த காதலை அமரக்காதல் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

ஜேர்மனியில் யூதர்களுக்கு எதிரான ஹாலோகாஸ்ட் படுகொலை நடவடிக்கைகளின்போது, யூதர்களை அடைத்து கொடுமைப்படுத்திக் கொல்ல பல வதை முகாம்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் மிகப்பெரிய வதைமுகாம் அவுஷ்விட்ஸ் வதைமுகாம், ஜேர்மனி வசம் இருந்த தெற்கு போலந்தில் அமைந்திருந்தது. நாஜிக்களின் உளவு அமைப்பான எஸ்.எஸ், ஐரோப்பா முழுவதிலும் இருந்து யூதர்களை பிடித்து வந்து இங்கு அடைத்து சித்திரவதைச் செய்வார்கள்.

முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்ட உடனேயே பலர் நச்சுவாயு அறைகளில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். வேறு சிலரோ சில மாதங்கள் வரை வதை முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களின் தலைமுடி மழிக்கப்பட்டு, ஆடைகள் களையப்பட்டு அரையாடையுடன் இரவும் பகலும் கடுமையான வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். உயிர் வாழ்வதற்கு போதுமான உணவு மட்டுமே வழங்கப்பட்டது.

வதை முகாம்களில் இருந்த குழந்தைகள் பெற்றோர், உற்றார் உறவினரிடமிருந்து, பிரிக்கப்பட்டதோடு, அரை வயிறு உணவு கொடுக்கப்பட்டு பசியுடனே வைக்கப்பட்டனர். இதனால் பலவீனமான குழந்தைகளால் வேலை செய்ய முடியாது. அவர்கள் நச்சுவாயு நிரப்பப்பட்ட அறைக்கு அனுப்பப்பட்டு கொல்லப்படுவார்கள்.

ஹிட்லரின் அவுஷ்விட்ஸ் வதை முகாம் பல ஆண்டுகள் தொடர்ந்து செயற்பட்டது. 1945ஆம் ஆண்டு, இரண் டாம் உலகப் போரின்போது சோவியத் ஒன்றியத்தின் படைகள் அவுஷ்விட்ஸை கைப்பற்றிய பிறகு வதை முகாம்கள் நிரந்தரமாக மூடப்பட்டன.

பெயரைக் கேட்டாலே அச்சம் விளைவிக்கும் அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் கைதிகள் தங்களது பெயர்களால் அல்ல, எண்களால் அடையாளம் காணப்படுவார்கள். கைதிகளின் கைகளில் அவர்களின் அடையாள எண்கள் பச்சைக் குத்தப்படும்.



வதைமுகாமில் இருந்த 32407 என்ற ஒரு கைதியின் வாழ்க்கையை அண்மையில் உலகிற்கு வெளிக்கொண்டு வந்திருக்கிறது , 'The Tattooist of Auschwitz' என்ற புத்தகம். வதை முகாமில் கைதி எண் 32407 ஆக பச்சைக் குத்தப்பட்டவரின் இயற்பெயர் லுட்விக் லேல் எய்சன்பர்க் (Ludwig Lale Eisenberg). யூதரான இவர், 1916ஆம் ஆண்டு ஸ்லோவாக்கியாவில் பிறந்தார்.

1942 ஏப்ரல் மாதம் லேலின் வீட்டிற்கு நாஜிப்படைகள் வந்தன. விவரம் எதுவும் தெரியாத நிலையில், நாஜிப் படையில் பணிபுரிய முன்வந்தார் வேலையில்லாமல் இருந்த லேல். தான் ராணுவத்தில் சேர்ந்துவிட்டால், குடும்பத்தினருக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்று அவர் தப்புக்கணக்குப் போட்டார்.

### ஹிட்லரின் கைதியான லேலின் பணி என்ன?

கைது செய்யப்பட்ட லேல் போலந்தில் இருந்த அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் அடைக்கப்பட்டு, கைகளில் 32407 என்ற எண் பச்சை குத்தப்பட்டது.

பிற கைதிகளுடன் வேலை செய்த லேல், வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் யூத கைதிகளுக்கு கட்டடங்களைக் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்.

வதைமுகாமுக்கு வந்த சில நாள்களுக்குள் நெருப்புக் காய்ச்சல் (டைஃபாய்டால்) பாதிக்கப்பட்ட லேலை, பிரான்ஸிலிருந்து அழைத்துவரப்பட்ட பேபன் என்ற யூத கைதி கவனித்துக்கொண்டார். கட்டுக்காவலில் இருக்கும்போது கட்டுப்பாடாக இருக்கவேண்டும் என்பதை பேபன் கற்றுக்கொடுத்தார்.

பணிக்கப்பட்ட வேலையை அமைதியாகச் செய்யும்படியும், யாரைப் பற்றியும் அதிகமாகப் பேச வேண்டாம் என்றும் அறிவுறுத்திய பேபன், பச்சை குத்தும் வேலையையும் கற்றுக்கொடுத்தார்.

ஒரு நாள் பேபன் திடீரென காணாமற் போய்விட்டார். ஜேர்மன், ரஷியன், பிரெஞ்சு, ஸ்லோவாக்கியன், ஹங்கேரிய மற்றும் போலந்து மொழி எனப் பல மொழிகள் பேசத்தெரிந்த லேலுக்கு பச்சை குத்தும் பணி வழங்கப்பட்டது.

பச்சை குத்தும் பொருள்கள் கொண்ட ஒரு பை அவருக்கு வழங்கப்பட்டு, பிற கைதிகளிடம் இருந்து பிரித்து வேறு அறையில் தங்க வைக்கப்பட்டார். தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்ட அவருக்கு மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதை விட அதிக உணவு கொடுக்கப்பட்டது.

### கைதிகளை வரிசைப்படுத்துவது யார்?

வதைமுகாமில் அடைக்கப்பட்ட பிற யூத கைதிகளைவிட லேலின் வாழ்க்கை சற்று மேம்பட்டிருந்தாலும் மரண பயம் எப்போதுமே அவரைச் சூழ்ந்திருந்தது. இரவு உறங்கச் செல்லும் கைதிகள் நச்சு வாயு செலுத்தப்பட்டு மீளாத்துயிலிலும் ஆழ்த்தப்படலாம்.

அருகிலுள்ள நச்சுவாயு அறையில் மக்கள் கொல்லப்படுகின்றமை தினசரி வாடிக்கை என்பதால் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்ததை அவர் அறிந்திருந்தார்.

நாள்தோறும் கூட்டம் கூட்டமாக கொண்டுவரப்படும் கைதிகளை அடையாளப்படுத்த, ஊசியால் அவர்களின் கையில் பச்சை குத்தி அவர்களின் அடிப்படை அடையாளத்தை அழிக்கும் வேலையைச் செய்தார் லேல்.

வதைமுகாமுக்கு வந்த உடனேயே பச்சை குத்தாமல் விடப்படுபவர்களின் இறுதி நாள் அது, அவர்கள் நச்சுவாயு அறைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

நாஜி தளபதி ஜோசப் மெங்கேலே அந்த வதைமுகாமிற்கு வரும் கைதிகளை வரிசைப்படுத்துவார். கொலைக் களத்திற்கு அனுப்பப்படுவார்கள், வேலைக்கு அனுப்பப்படுபவர்கள், வேலை வாங்குவதோடு அணுஅணுவாக சித்திரவதை செய்பவர்கள் என்று கைதிகளை தரவாரியாக வகைப்படுத்துவது அவர்தான்.

1943 ஆம் ஆண்டின் முடிவில், அந்த வதைமுகாமில் இருந்த அனைத்துக் கைதிகளுக்கும் பச்சை குத்தும் பணி முடிக்கப்பட்டது.

அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் பச்சைக் குத்தும் பணியில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த லேல், பச்சை குத்தும்போது குழந்தைகள் மற்றும் பெண்களின் கைகள் நடுங்குவதையும் பயம் நிறைந்த கண்களையும் தொடர்ந்து பார்த்து வந்த லேலின் மனம் துக்கத்தால் உறைந்துபோனது.



### கைதியின் மனதில் ஏற்பட்ட காதல்

இயந்திரத்தனமான வேலையில் ஈடுபட்டிருந்த லேல், 1942ஆம் ஆண்டு புதிய கைதிகளின் கைகளில் பச்சை குத்திக் கொண்டிருந்தபோது 34902 என்ற பெண்ணுக்கு பச்சை குத்தினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தாராளவாதக் கட்சி மற்றும் பசுமைக் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர்கள் டஸ்க் உடன் முரண்பட்டனர். "டஸ்கின் ஆவணத்தால் நான் முற்றிலும் அதிர்ச்சி அடைந்தேன்." என்று தாராளவாதக் கட்சியின் Guy Verhofstadt தெரிவித்தார். பசுமைக் கட்சியின் Ska Keller, "அவர் போலந்து, ஹங்கேரி மற்றும் செக் குடியரசு போன்ற ஆட்சேபகர்களின் கரங்களைப் பலப்படுத்துகிறார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது." என்று அவர் சீறினார்.**

அண்மையில் விவாதத்திற்கான மற்றொரு தலைப்பாக வெளியுறவுக்





கொள்கை இருந்தது. ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெலும் பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோனும் உக்ரேனில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்ஸ்க் சமாதான உடன்படிக்கை மீதான ஒரு மதிப்பீட்டை வழங்கினர். அதைத் தொடர்ந்து, ரஷ்யாவுக்கு எதிராக ஆறு மாதங்களுக்குத் தடையாணைகளை நீடிப்பதற்கு உச்சி மாநாடு உடன்பட்டது. இவற்றிற்குக் கூடுதலாக, அதில் பங்கெடுத்தவர்கள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்த முடிவைக் குறித்து விவாதித்தனர்.

உச்சி மாநாட்டில் பங்கெடுத்தவர்கள், அண்மையில், யூரோ மண்டலத்தில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து விவாதித்தனர். ஆனால், பெரிதும் சச்சரவுக்குரிய பிரச்சினை மீது எந்த முடிவுகளும் எடுக்கமுடியாது. ஜேர்மனில் காபந்து அரசு மட்டுமே உள்ளதால், பேர்லின் இதில் எந்த நிலைப்பாடும் எடுக்கமுடியாது உள்ளது.

இத்திட்டநிரலின் இறுதி விடயம் பிரிட்டன் வெளியேற்றம் மீதான பேச்சுகளாக இருக்கும். பிரிட்டிஷ் பிரதம மந்திரி தெரெசா மே ஐரோப்பாவிலிருந்து வெளியேறுவதற்கான பெரும்பாலான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட பின்னர், ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு இரண்டாம் கட்டப் பேச்சுகளைத் தொடங்கப் பரிந்துரைக்கும், இது பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான எதிர்கால உறவுகளைக் கையாளும். இதற்கு உச்சி மாநாட்டில் எந்த எதிர்ப்பும் இருக்காதென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இது எந்த விதத்திலும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை. "முதல் கட்டப் பேச்சுகள் நிறைவடைவதே துரிதமில்லா நிகழ்முறையாக நடக்கிறது. இடைமருவு காலகட்டத்தைத் தீர்மானிப்பதற்கும் இங்கிலாந்துடனான நமது எதிர்கால உறவுகளைத் தீர்மானிப்பதற்கும் நமக்கு வெறும் பத்தே மாதங்களே உள்ளன. என்று உச்சி மாநாட்டுக்கான அவரின் வரவேற்புரையில் டஸ்க் தெரிவித்தார். இதில் நேரத்திற்கு எதிராக வெறியோடு ஓட வேண்டியதாக இருக்கும்.'' என்றார்.

அந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்டவர்களைக் கருத்திற்கொண்டு பார்த்தால், ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நிலவும் ஒற்றுமையின்மை, பலவீனம் மற்றும் பிளவின் ஓர் உணர்வை அளவிட முடியும். அது ஓர் உலக சக்தியின் படைத்துறை அதிகாரிகளின் கூட்டம் என்பதைக் காட்டிலும் அதிகமாக ஓர் இராணுவ மருத்துவமனைக்கு ஒத்திருந்தது. அங்கே இருந்தவர்களில் எவரொருவரும் அழுத்தத்தின் கீழ் இல்லாமல் இல்லை என்ற நிலையில், அவர்களின் சொந்த நாட்டில் அவர்கள் அரசியல் உயிர் பிழைப்புக்கு போராடிக் கொண்டுள்ளனர் என்பதோடு, மக்களிடையே ஆழமாக மதிப்பிழந்துள்ளனர். போலந்து மற்றும் செக் பிரதம மந்திரிகள் அண்மையிலேயே அதிகாரத்திற்கு வந்திருந்தனர். ஆஸ்திரிய பிரதம மந்திரி விரைவில் பதவியில் இருந்து வெளியேற உள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தை ஐயுறவாதம் அல்லது முற்றுமுதலான எதிர்ப்புடன் பார்க்கும் தேசியவாதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**அதிக காலம் சேவையாற்றிய ஐரோப்பிய அரச தலைவராகப் 12 ஆண்டுகள் பதவியில் இருந்துள்ளவரும், ஜேர்மனியின் பொருளாதார பலத்தின் காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தில் நீண்டகாலமாக அதிகாரம் செலுத்தி உள்ளவருமான ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல், தற்போது வெறுமனே ஒரு காபந்து சான்சிலராக உள்ளமையால், எந்தவொரு முக்கிய முடிவுகளையும் எடுக்க முடியாது உள்ளார். அந்த அரச நெருக்கடி இன்னும் பல மாதங்களுக்கு இழுபறியில் செல்லக் கூடும். அத்தோடு, புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டால், அது மேர்க்கெல் வெளியேற்றப்படுவதில் கூடப் போய் முடியலாம்.**

கடந்த ஆண்டு தொடக்கத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுடன் பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலை வென்ற இம்மானுவல் மக்ரோன், பிரெஞ்சு மக்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் சற்று அதிகமானவர்களால் மட்டுமே இப்போது நம்பிக்கையோடு பார்க்கப்படுகின்ற நிலையில், தொடர்ந்து ஆதரவை இழந்து வருகிறார். நவபாசிசவாத தேசிய முன்னணிக்கு அப்பாற்பட்டு, பலமான முதலாளித்துவ எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பைப் புகழ்ந்துரைப்பவரும், ஒரு பலமான ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மக்ரோனின் இலக்கை வெளிப்படையாக எதிர்க்கும் ஒரு தலைவரான லோரோன் வோக்கியே (Laurent Vauquiesz), தேர்தெடுத்துள்ளது.

செக் குடியரசில் இருந்து வந்துள்ள Andrej Babis முதல்முறையாக ஓர் ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். செக் நாட்டின் ட்ரம்ப் என்றும் குறிப்பிடப்படும் இந்த வலதுசாரி வெகுஜனவாத பில்லியனர், அண்மையிலேயே பதவியேற்றார். அவர் ஒரு சிறுபான்மை அரசிற்குத் தலைமை கொடுக்கிறார். மில்லியன் கணக்கான ஐரோப்பிய ஒன்றிய நிதிகளை முறைகேடாக பயன்படுத்தியதற்காக அவர் கிரிமினல் குற்றச்சாட்டுக்களை முகங்கொடுத்து வருகின்றமையால், நாடாளுமன்றம் ஜனவரியில் அதன் நம்பிக்கை வாக்குகளை அவருக்கு வழங்குமா என்பதே ஐயத்திற்கிடமாக உள்ளது.

இதற்கு எதிர்விதமாக, ஆஸ்திரியாவின் கிறிஸ்டியன் கெர்னுக்கு இதுவே கடைசி ஐரோப்பிய ஒன்றிய மாநாடாக இருக்கும். நாடாளுமன்றத் தேர்தல்களில் சமூக ஜனநாயகக் கட்சி தோற்றதைத் தொடர்ந்து, பழமைவாத மக்கள்





கட்சி (OVP) மற்றும் அதிதீவிர வலதுசாரி சுதந்திரக் கட்சியின் (FPO) ஒரு கூட்டணி பதவி யேற்க உள்ளது. ஆஸ்திரியா அதை யடுத்து போலாந்து, செக் குடியரசு, ஹங்கேரி மற்றும் ஸ்லோவேகியா ஆகிய ஐரோப்பிய ஒன்றிய ஐயுறவுவாத வைஸ்கார்ட் நாடுகளுடன் நெருக்கமாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து பிரதம மந்திரி Mateusz Morawiecki உம் பதவிக்கு புதிது. அவருக்கு முன்பிருந்த Beata Szydlo போலவே, இவரும் ஆளும் சட்டம் மற்றும் நீதிக் கட்சி (PIS) இன் தலைவர் Jaroslaw Kaczynski இன் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். இவர் தான் திரைக்குப் பின்னால் இருந்து ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறார். Szydlo இற்கு எதிர்விதமாக, Morawiecki ஒரு நிதியியல் வல்லுநர் ஆவார். இவர் சர்வதேச நிதிய மூலதனத்தின் நம்பிக்கையைத் திரும்ப வென்றெடுப்பார் என்று கருதப்படுகிறது.

ஓராண்டுக்கு முன்னர் மத்தேயோ ரென்சியைப் பிரதியீடு செய்த இத்தாலிய பிரதம மந்திரி பாவுலோ ஜென்ரிலோனி, ஒருபோதும் தேர்தலைச் சந்திக்கவே இல்லை. ஜென்ரிலோனி மற்றும் ரென்சியின் ஜனநாயக கட்சி (PD) கருத்துக்கணிப்புகளில் மிகவும் மோசமான முடிவுகளைப் பெற்று, சில்வியோ பெர்லுஸ்கோனி தலைமையிலான ஒரு வலதுசாரி கூட்டணி மற்றும் நகைச்சுவையாளர் பெப்பே கிறில்லோ (Beppe Grillo) இன் ஐந்து நட்சத்திர இயக்கத்தை விட மிகவும் பின்தங்கி உள்ளது. மார்ச்சில் நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தல்களுக்குப் பின்னர் ரோமில் ஐரோப்பிய - ஒன்றியத்தின் மீது ஐயறவு கொண்ட ஓர் அரசாங்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்பானிய பிரதம மந்திரி மரீனோ ரஹோய் மட்டுமே பதவியில் தங்கியுள்ளார், இதற்கு சமூக ஜனநாயகக் கட்சியின் ஆதரவுக்குத் தான் நன்றி கூற வேண்டும். சமீபத்திய கட்டலான் சர்வஜன வாக்கெடுப்பு எடுத்துக்காட்டியதைப் போல, அதிகாரத்தில் இருப்பதற்காக அவர் பிரான்கோ சர்வாதிகாரத்தை நினைவூட்டும் எதேச்சதிகார ஆட்சி முறைகளில் தஞ்சம் அடைந்து வருகிறார்.

கிரேக்க பிரதம மந்திரி அலெக்சிஸ் சிப்ராஸ் தொழிலாள வர்க்கத்தின் பெரிய எதிர்ப்பை எதிர்கொண்டு வருகிறார். புரூசெல்ஸ் உச்சி மாநாட்டில் அவர் பங்கெடுத்திருந்த போதே, அவர் அரசின் சமூக செலவின குறைப்பு கொள்கைகள் மற்றும் ஒரு புதிய வேலைநிறுத்த - விரோத சட்டம் ஆகியவற்றிற்கு எதிராக கிரீஸில் 24 மணிநேர பொது வேலைநிறுத்தம் நடந்தது. ஏதென்ஸில் மட்டும், 20 ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கினர் எனப் பொலிஸ் குறிப்பிட்டது.


(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



**தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)**



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 73

**த.சிவசங்கர்**

1993 கவிதைப் போட்டியில் கலந்து கொண்டவன் இவன். ஆற்றலோடு கவிதை செய்தான். நடுவர்களாய் செயலாற்றிய கவிஞர் முருகையன், கல்வயல் குமாரசாமி ஆகியோர் இவனுக்கு முதற்பரிசு கொடுக்க மறுத்தனர். எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலும் இவனது திறமையை இனங்கண்டு கம்பன் விழா மேடையில், கவியரங்கில் இவனை ஏற்றினோம். அத்தொடர்பு பின்னர் அன்பாய் வளர்ந்தது. இவன் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன். தமிழார்வமும் அறிவும் இவனிடம் இயல்பாய் அமைந்திருந்தன. தமிழ் ஆர்வத்தைத் தாயிடமும், அறிவைத் தந்தையிடமும், சொத்தாய்ப் பெற்ற பொறுப்புள்ள பிள்ளை. பெற்றோரால் நல் வழியில் வளர்க்கப்பட்டவன். உண்மையானவன், முன்கோபி, செலவாளி, நடைமுறைப்படுத்தும் ஆற்றல் இல்லாவிட்டாலும் எதிர்காலம் பற்றி நிறையக் கற்பனை செய்வான். அப்போது விஞ்ஞான மாணவனாய், யாழ். பல்கலைக்கழகத்தில் இணைந்திருந்தான். பின்னர் கழகப் பிள்ளைகளில் ஒருவனானான்.

நவீன உலகத்தோடு தமிழைச் சமன் செய்ய வேண்டும் எனும் எனது விருப்போடு ஒத்துப் போபவன். மேற் காரணங்கள் அவனை எங்களோடு நெருங்கி உறவாட வைத்தன. பின்னர், 1995 இல் கழகத்தின் புதிய தலைவராய்ப் பொறுப்பேற்றான். தலைமைக்குரிய ஆளுமை அவனிடம் நிறைய இருந்தது. 1995 இடப்பெயர்வின் போது கொழும்பு வந்து கணினித் துறையில் ஈடுபட்டு மதிப்புச் சேர்த்தான். பின்னர் நடந்த கொழும்பு விழாக்கள் அனைத்திலும் முன்னின்று உழைத்தான். கழகத் தலைவனாய் இவன் விழா மேடைகளை இயக்கும் ஆற்றல் கண்டு பலரும் வியப்பர். அந்தச் செயற்பாட்டின் மூலமே, தனக்குப் பல இரசிகர்களைத் தேடிக் கொண்டவன் இவன். கொழும்பில் என் திருக்குறள் வகுப்பு மாணவியான சிவதேவியை, பல பிரச்சினைகளைச் சமாளித்து, என் நெறிப்படுத்தலில் பின்பு திருமணம் செய்தான். சமூக அக்கறையோடு செயற்பட்ட இவனும் மற்றவர் மேல் அன்பைப் பொழிந்த சிவதேவியும் ஒன்று சேர்ந்தால், இவனது வீடு மட்டுமன்றி, கழகமும் சமூகமும் பெரும் பயனெய்தும் எனக் கருதினேன். இவனது திருமண விடயத்தில் மூளையால் நிறையக் கணக்குப் போட்டேன். ஆனால், அக்கணக்குகள் எல்லாம் பெரும்பாலும் பிழைத்துப் போயின. தொழில், வாழ்வு, உறவு எனப் பல திசை ஈர்ப்புகளாலும் உலகியலோடு சமரசம் செய்து கொள்ள வேண்டி, இவனது வீடு தந்த நெருக்கடியாலும் இவனால் தமிழ்த்துறையில் முழுமையாய் ஈடுபட முடியாமற் போயிற்று. ஈடுபட்டிருப்பின், தமிழ்த்துறை, ஆளுமைமிக்க ஒரு வலிமையான கவிஞனைப் பெற்றிருக்கும். சிக்கலான விடயங்களை, அறிவார்ந்து சிந்திக்கும் எனது சங்கமத்தில் இவனும் ஒருவன். தேசத்தின் எதிர்காலம் பற்றி உணர்வுபூர்வமாய்ச் சிந்திப்பான். பொய்க்கலப்பில்லாதவன். சிறுமை கண்டு பொங்குவான். அவற்றைத் தீர்க்க விரிவாய்த் திட்டமிடுவான். பின் தனி வாழ்வின் வெற்றி நோக்கிய முயற்சியில் அவற்றை மறந்து போவான். இது இவனது குறை. புறத்தில் தன் கருத்தை உறுதிபடப் பதிப்பதில் உறுதியும் ஆவேசமும் கொண்டு செயற்படும் இவன், அகத்தில் அதனைச் சாதிக்க முடியாது தத்தளிப்பான். எதிரிகளின் முன் இவன் வீரன். உறவுகளின் முன் இவன் கோழை. அதுவும் அவன் அன்பின் வெளிப்பாடே. வாழ்க்கையின் அனைத்து விடயங்களையும் திட்டமிட்டுச் செயற்படுவதில் வல்லவன். அவனது நல்லியல்பால் மூளையால் அவன் இடும் திட்டங்களை, இதுவரை இறைவன் அங்கீகரித்து ஆசி செய்து வருகிறான். எப்போதும் அவ் ஆசி அவனுக்கு இருக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பேன். இன்பமோ, துன்பமோ, கழகம் எடுக்கும் முடிவைத் தனதாக்கி உறுதியாய்ச் செயற்படுவான். கழகச் செயற்பாட்டில் இவனது ஆளுமை முழுமையாய் வெளிப்படாமைக்கு என் ஆளுமையே காரணம் என்பதை அறிவேன். நான் இல்லாத இடத்து இவனது வீரியம் இன்னும் வெளிப்படும் என்பது என் நம்பிக்கை. என்னையோ, கழகத்தையோ எவரும் குறைசொல்ல விடமாட்டான். இவன் மட்டும் கழகத்திற்காய்த் தன்னை முழுமையாய் அர்ப்பணித்திருந்தால் நம் இனம் ஒரு நல்ல தலைவனைப் பெற்றிருக்கும். அப்படி அவன் ஆக வேண்டுமென்று பிரார்த்தித்தபடி இருக்கிறேன். என்னுடைய ஆளுமையின் பிரதிபலிப்பை இவனில் காண்பேன். எனது ராஜச குண விம்பம் இவனென்றால் அது மிகையில்லை. பிள்ளையாய் எனக்குத் துணை செய்து நிற்பவர்களில் இவனும் ஒருவன்.

★ ★ ★

**ச.மணிமாறன்**

இவன் 1993 இல் கழகத்தில் இணைந்தவன். பிரசாந்தனுடன் யாழ். இந்துவில் கற்றவன். பேச்சு, கவிதை, இசை, நாடகம் எனப் பல ஆற்றல்களும் வாய்த்தவன். இவனது தாயாரே இவனுடைய திறமைகளுக்கு அத்திபாரம் இட்டவர். போகப் பிரியன், இன்பத்துறையில் எளியன். புத்திக் கூர்மையில் என்னை வென்று வியப்படையச் செய்வான். ஆற்றல்கள் ஆயிரம் இருந்தும் ஒரு நிலைப்படாத மனநிலையால் ஒரு துறையிலும் சாதிக்க முடியாதவனாய் இன்றுவரை இருக்கிறான். இவன் புத்தி ஏதோ ஒன்றை எந் நேரமும் திட்டமிட்டுக் கொண்டேயிருக்கும். ஒன்றில் ஈடுபட்டு நிதானமாய் அதில் வெற்றி காண்பதன் முன் அடுத்தது பற்றித் திட்டமிட ஆரம்பிப்பான். முதல் திட்டமிட்டதை அரைவாசியில் கைவிட்டு விடுவான். இங்ஙனம் நிலையில்லாமல் இயங்குவது இவனது பெரிய குறை. ஒரு வேலையில் ஈடுபட்டால், வெள்ளமாய் அதனுள் பாய்வான். தன்னைப் போலவே மற்றவர்களும் அவ்விடயத்தில் ஈடுபட வேண்டுமென எதிர்பார்ப்பான். ஆனால், அவனது அந்த வேகத்தின் ஆயுள் சில நாட்களாய்த்தான் இருக்கும்.

1995 இல் கழகத்தின் புதிய செயலாளராய்ப் பொறுப்பேற்று சில காலமே இயங்கிப் பின் அப்பதவியை விட்டு வெளியேறினான். பிரசாந்தன் மேல், நான் தன்னை விட அதிக அன்பு செய்வதாய் குறைபட்டுக் கொள்வான். பிரசாந்தனது அன்புப் பலவீனத்தை சுயநலமாய் இவன் பயன்படுத்த நினைக்கும் போதெல்லாம் நான் குறுக்கிட்டுத் தடுப்பதாலேயே எனக்கு இப்பழி. நகைச்சுவை மிக்க இவனது பேச்சாற்றலால் கழக மேடையில் ஒரு முறை நடந்த, ‘‘இன்று சந்திக்கும் இவர்கள்’’ நிகழ்ச்சியில் பல அறிஞர்களும் பரிதவித்தனர். மெலியரெனின் மீக்கூறுவான். வலியரெனின் வழிமொழிவான். பலவீனமானவர்களைத் தன் வழிப்படுத்துவதில் வல்லவன். மற்ற எல்லோரது குறையையும் அழகாய் வரைவு செய்வான். ஆனால், தன் குறைகளை அறிய மாட்டான். சுயநலம் இவனது பெருங்குறைபாடு. தன்னைத்தான் வியப்பதில் சமர்த்தன். ஆனாலும், உண்மைச் சமூக உணர்வு மிக்கவன். இவன் ஆற்றல் மிக்க கவிஞனுங்கூட, இவனது கவிதைகளில் ஆச்சரியமான சிந்தனைகள் பதிவாகியிருக்கும். இசைத்துறை ஆற்றலும் இவனுக்கு இயல்பாய் வாய்த்திருந்தது. இவனது இலட்சியம் என்னைப் போல் ஆவது, அல்லது என்னை வெல்வது. வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக்கொண்டால், என்னைப்போல பத்துப் பேரை இவன் வெல்லலாம். ஆனால், இனி அது கடினமென்றே நினைக்கிறேன். துறை மாறித் தூரச் சென்றாலும் இன்றும் எங்கள்மேல் அன்போடிருப்பவன். இன்று திருமணமாகி இரண்டு குழந்தைகளுடன் நிற்கின்றான். இவனுக்கு வாய்த்த மனைவி கடவுளால் இவனுக்கு வழங்கப்பட்ட வரம். அந்த வரத்தின் பெறுமதி தெரியாதவன். தாயும் தாரமும் இவன் பெற்ற வரங்கள். சமயோசித புத்தியில் என்னைப் பிரதிபலிப்பவன். எனது தாமச குண விம்பம் இவன் எனலாம். நான் பிள்ளையாய் நேசிப்பவர்களில் இவனும் ஒருவன்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir


# உலக நாயகன் புரூஸ்லீ

## ‘அக்ஷன்’ ரசிகர்களை அதிர வைத்தவர்



ஒரு காலத்தில் இளைஞர்களின் கனவு நாயகனாக இருந்த விருப்ப நாயகன்தான் புரூஸ்லீ. இன்று தற்காப்புக் கலை இந்த அளவு பிரபலம் ஆனதற்கு ஒரே முக்கிய காரணம் புரூஸ்லீயாகத்தான் இருக்க முடியும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஓர் உண்மையே. புரூஸ் லீ சண்டையிடும் வேகம் பிரமிக்கத்தக்கது. இவரது கைகளும், கால்களும் எதிரியைத் தாக்கும் வேகத்திற்கு அன்றைய திரையுலக தொழில்நுட்பத்தால் கூட ஈடு கொடுக்க முடியவில்லை. பொதுவாக ஒரு வினாடிக்கு 24 கட்டங்கள் என்பதே கணக்கு. புரூஸ்லீயின் வேகத்துக்கு ஈடுகொடுப்பதற்கு ஒரு வினாடிக்கு 34 கட்டங்களாக மாற்றியமைத்தனர்.

புரூஸ் லீ 1940ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோ மாகாணம் சைனா நகரப் பகுதியில் உள்ள ஜாக்சன் ஸ்ட்ரீட் மருத்துவமனையில் லீ ஹோய் சுவென் மற்றும் கிரேஸ் என்ற தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

இவரது தந்தை ஒரு நடிகர். புரூஸ் லீக்கு அவரது பெற்றோர்கள் லீ ஜுன்பேன் எனப் பெயர் வைத்தனர். அந்த பெயர் அமெரிக்க மருத்துவமனையில் பணிபுரிந்த செவிலியரின் வாயில் நுழையவில்லை. எனவே, அந்த செவிலியர் செல்லமாக புரூஸ் எனக் கூப்பிட அதுவே பிறகு அவரது பெயராக நிலை பெற்றது.

புரூஸ்லீக்கு மூன்று மாதங்கள் ஆனபோது அவரது குடும்பம் ஹொங்கொங் வந்தது. 12 வயது வரை லா செல் கல்லூரியில் மேல் நிலைக் கல்வி பயின்றார் புரூஸ்லீ. பின்னர் புனித பிரான்சிஸ் சேவியர் கல்லூரியில் தனது படிப்பை தொடர்ந்தார். 1959 ஆம் ஆண்டு தனது பதினெட்டாம் வயதில் ஹொங்கொங் கேங்கஸ்டர் ஒருவரின் மகனை தாக்கினார் புரூஸ் லீ. இந்த சம்பவத்தால் பயந்துபோன அவரது தந்தை, புரூஸ்லீயை சான் பிரான்சிஸ்கோவிற்கு அனுப்பி வைத்தார்.

சீன வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றாலும் அமெரிக்காவில் பிறந்தவர் புரூஸ்லீ. அதன்பிறகு பாரம்பரிய கல்வி பெற சீனாவிற்கு அனுப்பப்பட்டார். தற்காப்புக் கலையை ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தலீ, சீனத் தற்காப்பு கலையை உலகம் முழுவதும் பரப்புவதற்கு பள்ளி ஒன்று தொடங்கினார். அவரது பள்ளியில் குங்பூ, கராத்தே, ஜுடோ, குத்துச் சண்டை போன்ற அனைத்து தற்காப்பு கலை வடிவங்களும் ஒன்றுசேர்த்து புதிய கலையை கற்றுக்கொடுத்தார்.

கராத்தே கலையுடன் சில நுணுக்கங்களைச் சேர்த்து புரூஸ் லீ உருவாக்கிய புதிய தற்காப்பு கலை அவரது பெயரிலேயே ‘புரூஸ்லீ குங்பூ’ என அழைக்கப்பட்டது. இதனைத் தத்தவப் பாடத்துடன் சேர்த்து ‘ஜே கேடி’ எனும் புதிய பயிற்சியை அறிமுகப்படுத்தினார். இதனை பயிற்றுவிக்க பல பள்ளிகளையும் திறந்தார். தற்காப்பு கலையின் உச்சத்தைத் தொட்ட புரூஸ்லீ, தத்துவம் முதுகலை படித்தவர். மேலும் இவர் ஆழ்ந்த தத்துவ ஞானம் உடையவர் என்பது நம்மில் பலருக்கும் தெரியாத ஒரு நிகழ்வே. தற்காப்புக் கலையை இன்று உலகம் முழுவதிலும் கொண்டு சென்ற இவர் குழந்தை நட்சத்திரமாக தொலைக்காட்சியிலும், திரைப்படத்திலும் நடித்திருக்கிறார்.

சண்டைக்கு புரூஸ் லீ அளித்த விளக்கம் ஒன்று. களத்தில் எதிரி இருக்கக் கூடாது. ஆனால், சண்டை நடக்கவேண்டும். ஒரு விறுவிறுப்பான நாடகம் போல சண்டை அமைய வேண்டும். போட்டிக் களத்தில் யார் வேண்டுமானாலும் எதிரியாக வரலாம், எப்படி வேண்டுமானாலும் தாக்கலாம் என்பதால் வேறு சிந்தனையோ, கனவோ இருக்கக்கூடாது. சண்டை குறித்து எந்த அச்சமும், பதற்றமும் இல்லாமல் சண்டைக்குத் தயாராக இருக்க வேண்டும். எதிரி தடுக்கும்போது தாக்கவும், எதிரி தாக்கும்போது தடுக்கவும் வேண்டும். சண்டை இல்லாத சண்டை தான் என் கனவு என்று சொன்னார் புரூஸ் லீ.

புரூஸ்லீயின் தந்தை ஒரு நடிகர் என்பதால் புரூஸ்லீயின் நடிப்பு வாழ்க்கை சிறு வயதிலேயே ஆரம்பமா னது. தனது 18 வயதிற்குள் 20 படங்களில் நடித்தார். அமெரிக்காவில் இருந்தபோது பேட்மேன் பட தயாரிப்பாளர் வில்லியம் டோசியர் பார்வையில் இவர் பட்டமை இவர் வாழ்க் கையின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. புரூஸ்லீ அமெரிக்காவில் இருந்தபோது ‘தி கிரீன் ஹார்னட்’, ‘அயர்ன் சைட்’, ‘ஹியர் கம் த பிரைட்சு’ ஆகிய தொலைக்காட்சித் தொடர்களில் நடித்தார்.

அமெரிக்காவில் இருந்து ஹொங்கொங் திரும்பிய இவருக்கு, கோல்டன் ஹார்வெஸ்ட் கம்பெனி தயாரிப்பாளர் ரேமண்ட் சௌ ஒரு படத்தில் நடிக்குமாறு ஒப்பந்தம் செய்து கொண்டார். ரேமண்ட் தயாரிப்பில் இவரது முதல்படம் 1971ஆம் ஆண்டு பிக்போஸ் என்ற பெயரில் வெளிவந்தது. வெளிவந்த இப்படத்திற்கு முன்பே ஹொங்கொங் முழுவதும் பிரபலமாகியிருந்தார் புரூஸ் லீ. பொக்சிங் சாம்பியனாகவும், 'Crawn Colony Cha Cha' சாம்பியனாகவும் அறியப்பட்டிருந்த நேரத்தில் இப்படம் வெளியானது. இந்த காலகட்டத்தில் புரூஸ்லீயின் குங்பூ ஹொலிவூட் சினிமாவில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இவரது அதிவேக சண்டைகளும் கண்களில் அவர்காட்டிய வெறியும் படத்தை மிகப்பெரிய அளவில் வெற்றி பெறச் செய்தது. ஆசியாவில் ஒரு கோடியே 20 லட்சம் டொலர்களை இப்படம் வசூல் பெற்றது.

அதனைத் தொடர்ந்து கடந்த 1972ல் வெளிவந்த ‘பிஸ்ட் ஒப் பியூரி‘ திரைப்படம் ஒன்றரைக் கோடி அமெரிக்க டொலர்களை வசூலித்து மிகப்பெரிய வெற்றியை மீண்டும் பெற்று தந்தது. அதே ஆண்டில் புரூஸ்லீ கதை எழுதி இயக்கிய ‘வே ஒப் தி டிராகன்’ திரைப்படம் புரூஸ்லீயின் புகழ் உலகளவில் கொண்டு சென்றதோடு அவருடன் சேர்ந்து குங்பூ கலையையும் பிரபலமடைய வைத்தது. ‘வே டூ த டிராகன்’ படத்தின் கிளைமாக்ஸில், தான் அமெரிக்காவில் இருந்தபோது சந்தித்த கராத்தே மாஸ்டர் சக்நாரிஸை புரூஸ்லீ பயன்படுத்தினார். ரோமில் எடுக்கப்பட்ட இப்படத்தின் கிளைமாக்ஸ் சண்டைக்காட்சியில் புரூஸ்லீயும் சக்நாரிஸும் மோதுகின்றமையை ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. அத்தனை ஆக்ரோஷமான அற்புதமான சண்டைக்காட்சி இது.

தன் இளம் வயதிலேயே எதிர் பாராத விதமாக மரணத்தைத் தழுவிய அவரால் சில படங்கள் மட்டுமே நடிக்க முடிந்தது என்றாலும், அவரது மிகப்பெரிய வெற்றிப் படம் உலகோர் அனைவராலும் மறக்க முடியாத திரைப்படம் ‘என்டர் த டிராகன்‘. இந்த படத்திற்கு ஏராளமான சிறப்புகளும் உண்டு. ஒட்டுமொத்த படமாக பார்க்கும்போது வித்தியாசமான காட்சி அமைப்பு, திடுக்கிடும் திரைக்கதை உத்தி, கண்களில் ஒற்றிக்கொள்ளும் ஒளிப்பதிவு, செவியைக் குளிர வைக்கும் இசை எதுவுமே இல்லையென்றாலும், நரம்புகள் முறுக்கேறச் செய்யும் சண்டை காட்சிகளால் ரசிகனைக் கட்டிப்போடச் செய்தது ‘என்டர் த டிராகன்’. இந்தப் படம் உலகெங்கும் உள்ள ஆக்சன் ரசிகர்களை அதிரவைத்தது.


புரூஸ் லீ என்று பெயர் மந்திரம் மாதிரி உச்சரிக்கப்பட்டது. இதனால் உலகைக் குலுக்கிய படங்களின் பட்டியலை சேர்ந்தது ‘என்டர் த டிராகன்’. இதன் வசூல் சாதனை அமெரிக்காவில் மட் டும் 8 லட்சத்து 50 ஆயிரம் டொலர்கள். ஆனால் அந்த வெற்றியை அவரால் பார்க்க முடியாமல் போனது.

தலை வலி என்று படுக்கச் சென்றவருக்கு தூக்க மாத்திரை ஒன்று கொடுக்கப்பட்டது. அதன்பின் அவர் எழுந்திருக்கவில்லை. பிறகு ஹொங்கொங் குயீன் எலிசபெத் மருத்துவமனையில் நினைவு திரும்பாமல் மரணத்தைத் தழுவினார். இன்றளவும் அவர் மரணம் ஒரு புரியாத மர்மமாகவே உள்ளது.

முப்பது வயதிலேயே புகழின் எல்லா சிகரங்களையும் தொட்டுப் பார்த்தவர், முன் கோபத்துடன் நடந்து கொண்டன, ஏராளமான எதிரிகளை அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. படத்தில் இவருடன் சண்டையிடுகிறவர்கள் மூக்கை உடைத்துக் கொள்வதும், பற்கள் பறி கொடுப்பதும் சாதாரணம். திரையில் இவ்வளவு ஆக்ரோஷமாக – இவ்வளவு உண்மையாக – நிகழ்த்திக் காட்டியவர் புரூஸ்லீக்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை என உறுதியாகக் கூறலாம்.



அவருக்கு மரியாதை செய்யும் வகையில் ஹொங்கொங் அரசு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவரது முழு உருவ வெண்கலச் சிலையை 46 லட்சம் செலவில் நிறுவியது. டைம்ஸ் பத்திரிகை கடந்த நூற்றாண்டின் சமூகத்தைப் பாதித்த சிறந்த 100 மனிதர்களின் பட்டியலில் புரூஸ்லீயையும் சேர்த்துள்ளது. ஒரு கலையை எப்படி நேசிப்பது, அது எங்ஙனம் உச்சத்துக்குக் கொண்டு செல்வது என்பதைக் கற்றுக் கொள்ளும் வண்ணம் அனைவருக்கும் அரிய ஆசானாகவே இன்னும் விளங்குகிறார் புரூஸ் லீ. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் பொருட்களில் உக்காத இயல்பைக் கொண்டது எது?
   1) இலைகள் 2) குசினிக் கழிவுகள்
   3) விலங்குகளின் எலும்புகள் 4) பிளாத்திக் கொள்கலன்கள்

4. நாம் சுத்தமாக இருப்பதால் எமக்குக் கிடைக்கும் நன்மையல்லாதது
   1) நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கலாம்
   2) கற்றலில் கூடிய கவனம் செலுத்தலாம்
   3) உடல் ஆரோக்கியம் பெறும்
   4) பிறர் எம்முடன் பழகத் தயங்குவர்

5. அதிகளவு கொழுப்புக் காணப்படும் உணவுப்பொருள்
   1) பயறு 2) உழுந்து 3) கௌபி 4) நிலக்கடலை

6. மொறட்டுவ பல்கலைக்கழக வேந்தராகவும் இங்கிலாந்து அரச வானியலாளராகவும் கழக அங்கத்தவராகவும் பணியாற்றிய பெரியார்
   1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 2) வண. எஸ்.மகிந்த
   3) சேர். டி.பி.ஜயதிலக்க 4) ஆதர் சீ.கிளார்க்

7. ஓடும் நீரைப் பயன்படுத்தி பிராணிகளைத் தோட்டத்திற்கு வராமல் விரட்டுவதற்கு அமைக்கப்படும் ஆக்கம்
   1) நீர்ச்சுழலி 2) காற்றாலை 3) நீர்ப்பிராக 4) நீர்ச்சில்லு

8. மயக்கமடைந்த ஒருவருக்குச் செய்யக்கூடாத முதலுதவி
   1) சூடான பானம் பருகக் கொடுத்தல்
   2) நோயாளி நன்கு சுவாசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குதல்
   3) முகத்தில் நீர் தெளித்தல்
   4) தட்டி எழுப்புதல்

9. எலஹரக் கால்வாயைக் கட்டுவித்த மன்னன்
   1) மகாசேனன் 2) தாதுசேனன் 3) காசியப்பன் 4) வசபன்

10. குற்றச் செயல்களைத் தடுத்தல், சட்டம் ஒழுங்குகளைப் பேணுதல் போன்றவற்றைச் செய்வது
   1) பிரதேச செயலகம் 2) மாவட்டத் தேர்தல் திணைக்களம்
   3) பொலிஸ் திணைக்களம் 4) பாராளுமன்றம்

11. கீரையைச் சமைக்கு முன் யாது செய்யவேண்டும்?
   1) வெட்டிய பின் கழுவுதல்
   2) உப்புக் கலந்த நீரில் நன்றாகக் கழுவி வெட்டுதல்
   3) வெந்நீரில் அவித்துக் கழுவுதல்
   4) குளிர்ந்த நீரில் கழுவுதல்

12. காதை மட்டும் பயன்படுத்தித் தகவல் பெற உதவும் ஊடகம்
   1) பத்திரிகை 2) ஒலிபெருக்கி 3) தொலைக்காட்சி 4) விளம்பரம்

13. தோசம் நீங்கப் பிரித்தோதிய நீரைத் தெளிக்கும் சம்பிரதாயத்துடன் தொடர்புபட்டவர்கள்
   1) இந்துக்கள் 2) கிறிஸ்தவர்கள் 3) இஸ்லாமியர்கள் 4) பௌத்தர்கள்

14. அசுத்த நீரினால் உண்டாகும் நோய்களின் தொகுதி
   1) மலேரியா, சின்னமுத்து, கண்டமாலை
   2) போலியோ, சின்னமுத்து, கண்டமாலை
   3) வயிற்றோட்டம், மஞ்சட்காமாலை, நெருப்புக்காய்ச்சல்
   4) [illegible], பெரிபெரி, ஸ்கேவி

15. மண்ணரிப்பைத் தடுக்கும் வழிகளில் பொருத்தமற்றது
   1) மூடுபயிர் வளர்த்தல் 2) கல்வேலி அமைத்தல்
   3) காடுகளை அழித்தல் 4) வரம்பு கட்டுதல்

16. கொழும்பு - கண்டி நெடுஞ்சாலையின் இலக்கம்
   1) A2 2) A1 3) A9 4) A10



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 6

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II நேரம்- 1 மணித்தியாலம் 45 நிமிடம்

1. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களிற்கான விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

   மலைப்பிரதேசங்களிலேயே தேயிலை செழிப்பாக வளரும். இப்பகுதியில் வளர்கின்ற தேயிலையே சுவையானது. அகன்று வளர்வதற்காக ஒரே மட்டத்தில் வெட்டிவிடப்படுவதனை கவ்வாத்து வெட்டுதல் என்பர். அகன்று வளரும் தேயிலைச் செடிகள் பல ஏக்கர்களில் செய்வதால் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் பசுமை படர்ந்து அழகாகக் காட்சியளிக்கின்றன.

   1) வினையடை மொழியை எழுதுக.
   ..................................................
   2) உவமையை எழுதுக.
   ..................................................
   3) அகன்று வளர்வதற்காக ஒரே மட்டத்தில் வெட்டிவிடுவதனை எவ்வாறு அழைப்பர்?
   ..................................................
   4) அஃறிணைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.
   ..................................................
   5) கிரி என்பதன் ஒத்த பதத்தினை எழுதுக.
   ..................................................
   6) நிகழ்கால வினைச்சொல்லொன்றை எழுதுக.
   ..................................................
   7) இரட்டைக் கொம்புடன் ஆரம்பமாகும் சொல்லை எழுதுக.
   ..................................................

   (7x1 = 7)

2. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.
   1) எறும்பு விரும்புவது .............................. (வெள்ளம் / வெல்லம்).
   2) அச்சத்தால் வருவது .............................. (கிளி / கிலி).
   3) நேற்றிரவு வீட்டிலே கணித பாடம் .............................. (படித்தேன் / படிக்கின்றேன்).
   4) இனிமேலும் நல்ல மழை .............................. (பெய்யும் / பெய்கிறது).
   5) குழந்தை நிமிர்ந்து இருக்கும் பருவத்தில் பாடப்படுவது .............................. (தாலாட்டு / சாய்ந்தாடம்மா).

   (5x1 = 5)

3. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொற்களைத் தெரிந்து கோடிட்ட இடங்களில் எழுதுங்கள்.
   1) மாலனும் வரதனும் பாடசாலைக்குச் .............................. (சென்றன / சென்றனர்)
   2) அரசர் நீரைச் சுவைத்துப் .............................. (பார்த்தார் / பார்த்தான்)
   3) நான் ஓவியம் .............................. (வரைகிறது / வரைகிறேன்)

   (3x1 = 3)

4. பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.
   1) கட்ட நீரில் துணியினைத்
      தோய்த்துத் தோய்த்துக் கல்லடி
      ..............................
      பையப் பையக் கொடுத்தனள்
   2) ஓடு மீன் ஓட ..............................
      வாடி இருக்குமாம் கொக்கு

   (2x1 = 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) சமரி ........................................ (அன்னாசியைக்கு / பன்னாசியைக்கு) வெளியே வந்து பார்க்கிறான்.
2) மனிதன் ஆரோக்கியமாக வாழ ........................................ (சூழலை சுகாதாரமுள்ள / சூழலை சுகாதாரமற்ற) சுற்றுச் சூழலில் வாழ வேண்டும்.
3) ஒற்றைக்காலில் நிற்றல் என்பதன் கருத்து ........................................ (நிலத்தில் கால் வைக்க முடியாது போதல் / ஒரு காலில் நிற்றல்).

(3x1 = 3)

6. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Please come to school every day.

........................................................................................................................

2) I have two books.

........................................................................................................................

(2x1 = 2)

7. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) மென்ன தே (B)போன்ன ........................................................................

2) கட உ பன் திபைக்கோ ........................................................................

(2x1 = 2)

8. பின்வரும் தமிழ் வாக்கியங்களின் கருத்தை சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.

1) எனக்குப் பேனை தாருங்கள். ........................................................................

2) உள்ளே வாருங்கள். ........................................................................ (2x1 = 2)

9) பின்வரும் தலைப்பை வாசித்துச் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு சொற்களுக்கு மேல் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

"எமது நாட்டின் பிரபல்யமான இடங்களில் ஒன்றான பேராதனைப் பூங்கா"

1) ........................................................................................................................

........................................................................................................................

2) ........................................................................................................................

........................................................................................................................

3) ........................................................................................................................


........................................................................................................................

(3x2 = 6)

- **தரப்பட்டுள்ள இடைவெளிகளில் விடையை எழுதுக.**


1. 23436 என்பதைச் சொற்களில் எழுதுக.

........................................................................................................................

2. 

வட்டத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.

........................

3. 
பந்துகளின் எண்ணிக்கையிலும் இரண்டு கூடிய எண்ணை உரோமன் எண்ணில் எழுதுக.

........................




வினாத்தாள் 6 பகுதி- II இன் தொடர்ச்சி...


4. தரப்பட்டுள்ள எண் கோலங்களின் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

1) 7, 14, 28, 56, ............
2) 45, 41, 37, 33, ............

5. தரப்பட்ட உருவிலுள்ளே எத்தனை செங்கோணங்களுள்ளன?



........................

6. 
உருவில் நிழற்றப்பட்ட பகுதியைப் பின்னமாகத் தருக.

........................

7. 1) $\frac{6}{9} - \frac{1}{3} =$ ............ 2) $\frac{6}{8} - \frac{2}{4} =$ ............

8. 12 தோடம்பழம் வீதம் 7 கூடைகளும் 15 தோடம்பழம் வீதம் 7 கூடைகளும் எல்லாமாக 14 கூடைகளிலும் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

........................

9. பேருந்து சுற்றுலா செல்வதற்கான பிரயாணிகளுடன் மு.ப 7.15 இற்குப் புறப்பட்டு 9 மணித்தியாலம் 25 நிமிடங்களில் சுற்றுலா நிறைவு பெற்றது எனின், சுற்றுலா முடிவடைந்த நேரத்தை 24 மணி நேரத்தில் எழுதுக.

........................

10. பிள்ளையின் நிறை 12kg 500g ஆகும். தந்தையின் நிறை பிள்ளையின் நிறையின் 5 மடங்காகும். தந்தையினதும் பிள்ளையினதும் மொத்த நிறை யாது?


........................

11. ஓர் இனிப்புப் பானப்போத்தல் 7 பேரை உபசரிக்கப் போதுமானது. 25 பேர்களை உபசரிக்கத் தேவையான இனிப்புப் பானப்போத்தல் எத்தனை?

........................

12. மாணவி ஒருத்தி சிறிய குளிர்பானப் போத்தலை நீரினால் முற்றாக நிரப்பி அந்நீரை வெற்றுப் போத்தல் ஒன்றினுள் ஊற்றினாள். இவ்வாறு 15 தடவை ஊற்றியதும் பெரிய போத்தல் நிரம்பியது. பெரிய போத்தலில் ஒட்டப்பட்டிருந்த கட்டுத்துண்டில் 1.5l எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்தகவலின்படி சிறிய போத்தலின் கொள்ளளவு யாது?

........................

13. 
1) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ........................
2) விளிம்புகளினதும் பக்கங்களினதும் கூட்டுத்தொகை யாது?

........................

14. ஒரு காணியின் நீளம் 12m அதன் அகலம் நீளத்தின் அரைவாசியாகும். காணியின் சுற்றளவு யாது?

........................

15. ஒரு பாடசாலைக்கு 105 வீதம் 6 பாடசாலைகளுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

........................

(15x2 = 30)

- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இலங்கை அரச இலச்சினையில் நெற்கதிர் அடையாளப்படுத்துவது
   1) செளபாக்கியம் 2) சுதந்திரமான நாடு
   3) தன்னிறைவு 4) நிலைத்திருத்தல்

2. ஒரு தயிர்ச் சாடிச்சட்டி பாவனையின் பின் அது சூழலுக்கு நேயமான விதத்தில் அமையச் செய்ய வேண்டியது
   1) நிலத்தில் கவிழ்த்து விடுதல்
   2) வெளியான இடங்களில் அழகாக அடுக்கி வைத்தல்
   3) இடவசதி குறைவான இடங்களில் பயிரிடப் பயன்படுத்தல்
   4) விற்பனைக்கு வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# ஒடுக்கப்படும் மக்களின்

## போராட்டங்களுக்கு குரல் கொடுத்தவர்

# சிவா

**சிவானந்தன் (1923–2018) அரசியலும் தனிப்பட்ட வாழ்வும் ஒன்றே எனும் தனது வாக்கிற்கமைய முடிந்தவரை வாழ்ந்த ஓர் ஆளுமையின் மறைவு**

**சமுத்திரன்**

சிவானந்தனின் மரணம் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிரான போராட்டங்களுடன்தன்னை அடையாளப்படுத்திய ஒரு பேரறிஞரின் மறைவென அவரை நன்கறிந்தோர் சர்வதேச ஊடகங்களில் பதிவு செய்துள்ளனர். நாம் எந்த மக்களுக்காகப் போராடுகிறோமோ அந்த மக்களுக்காகவே எழுதுகிறோம் எனும் கொள்கையைக் கடைப்பிடித்த சிவா, ஜனவரி மூன்றாம் திகதி தொண்ணூற்று நாலு வயதில் அவர் ஏறக்குறைய ஆறு தசாப்தங்களாக வாழ்ந்து வந்த லண்டனில் மறைந்தபோது விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்புவது சுலபமல்ல. அந்த ஆளுமைக்குள் ஆற்றல்மிக்க ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் இருந்தன என அவரைப் பற்றி நண்பர்கள் வியந்துரைப்பதில் ஆச்சர்யமில்லை.

கொழும்பில் இலங்கை வங்கியில் பதவி வகித்து வசதியுடன் குடும்பத்துடன் வாழ்ந்த சிவானந்தன் 1958இல் இடம்பெற்ற இனக் கலவரத்தின் விளைவாக லண்டனுக்குப் புலம்பெயர்ந்தார். அவர் அங்கு சென்றடைந்தபோது நொட்டிங்ஹில் எனும் பகுதியில் வாழ்ந்து வந்த கரீபிய கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரத்தின் நேரடிச் சாட்சியானார். ஓர் இனக்கலவரத்திலிருந்து தப்பி இன்னொன்றுக்குள் சென்றடைந்த தனது அநுபவத்தை இரட்டை ஞானஸ்நானம் (double baptism) என அவர் வர்ணித்துள்ளார். இந்த அனுபவமும் அவர் புகுந்த நாட்டில் வாழப்போகும் வாழ்க்கைமுறையைத் தேர்ந்தெடுக்க ஓர் உந்துதலாயிற்றுப் போலும்.

ஆங்கிலமொழி ஆற்றல், பல்கலைக் கழகப் பட்டம், வங்கியாளர் தொழில் அனுபவம் போன்ற தகைமைகளைக் கொண்டிருந்த அவர் போன்ற ஒருவரால் பிரித்தானியாவில் நமது காலனித்துவக்காலத் தாய் நாட்டில் ஒரு நல்ல வேலையைப் பெறுவது சுலபம் போல் பட்டிருக்கலாம். ஆனால், வேலை தேடுதலே அவருக்கு ஓர் அரசியல் அனுபவமாயிற்று. முன்பிருந்தே இடது சாரிப் போக்குடையவராய் இருந்த தனது முழுமையான புரட்சிகர மாற்றம் லண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின்னரே ஏற்பட்டதென அவர் பலதடவை கூறியமையை நான் கேட்டுள்ளேன்.

ஒரு நூலகராகப் பயிற்சி பெற்றபின் அரசாங்கத்தின் கொள்கை வகுப்புக்கு உதவும் அரச கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனமாயிருந்த இனங்கள் இடையிலான உறவுகள் நிறுவனத்தில் (Institute of Race Relations IRR _) நூலகராகப் பதவி ஏற்றார். இனப்பிரச்சினை பற்றிய அந்த நிறுவனத்தின் ஆய்வுகளையும் கொள்கை நிலைப்பாடுகளையும் அங்கு பணியாற்றிய ஒரு குழுவினர் ஆழமாக விமர் சித்தனர். சிவானந்தனே இந்தக் குழுவின் பிரதான சிந்தனையாளர். இடதுசாரிகளான இந்தக் குழுவினரின் கருத்தில் அரசாங்க உதவியில் தங்கியிருக்கும்வரை அந்த நிறுவனத்தால் சுதந்திரமாக இயங்கமுடியாது. தனது இடதுசாரிச் சகாக்களின் ஒத்துழைப்புடனான போராட்டத்திற்கூடாகச் சிவானந்தன் IRR-N அரசாங்கத்தின் பிடியிலிருந்து முற்றாக விடுவித்து அதை நிறவாதத்திற்கு எதிரான மற்றும் மூன்றாம் உலகின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவான நிலையமாக மாற்றியமைத்தார். புதிய IRR இயக்குநராகப் பதவி ஏற்றபின்னர், இனமும் வர்க்கமும் (Race and Class) எனும் சர்வதேச சஞ்சிகையையும் வேறு சில முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் சேர்ந்து ஆரம்பித்தார். அதன் கொள்கையையும் சுதந்திரத்தையும் மதித்து ஏற்றுக்கொள்ளும் அமைப்புக்களின், தனிமனிதரின் உதவியுடன் IRR இன்றுவரை வெற்றிகரமாக இயங்கிவருகிறது.

சிந்திப்பதற்காகச் சிந்திப்பதில் அர்த்தமில்லை, செயற்படுவதற்காகச் சிந்திக்க வேண்டும் எனத் தன் அறிவுரீதியான நடைமுறையை வகுத்துக் கொண்டார். மெய்யியலாளர்கள் உலகைப் பலவிதமாக விளக்கியுள்ளார்கள். ஆனால், உலகை மாற்றுவதே முக்கியமானதெனும் மாக்சின் பிரபலமான வார்த்தைகளை நினைவூட்டுகிறது. சிவானந்தனின் செயற்பாட்டை நோக்காகக் கொண்ட எழுத்துப்பணி. பிரித்தானியாவில் இன (நிற) அடிப்படையில் ஒடுக்கப்பட்டு வர்க்கரீதியில் மோசமாகச் சுரண்டப்பட்ட கறுப்பினத் தொழிலாளர்களின் இவர்கள் ஆபிரிக்க, ஆசிய மற்றும் கரீபிய நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் உரிமைப் போராட்டங்களின் பேச்சாளனாக, எழுத்தாளனாக விளங்கினார் சிவா.

அதே காலத்தில், இனமும் வர்க்கமும் ஒன்றை யொன்று ஊடறுத்துச் செல்லும் புறநிலை யதார்த்தத்தைக் கூர்மையாக இயங்கியல் ரீதியில் அவதானித்துக் கோட்பாட்டு மயமாக்கிப் புதிய விவாதங்களுக்கு மேடை அமைத்தார். இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப்பின் பிரித்தானியாவின் பொருளாதார மீள் நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்கும் மேலதிக தொழிலாளர் பெருமளவில் தேவைப்பட்டனர். இந்தப் பற்றாக்குறையை நிரப்புவதற்கு பிரித்தானியா தனது முன்னைய காலனி நாடுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தது. இது அந்த நாட்டுக்கு மிகவும் மலிவான ஊதியத்திற்கு வேலைசெய்யும் உழைப்பாளர்களைக் கொடுத்தது. இது பிரித்தானியாவின் போருக்குப் பின்னான அபிவிருத்திக்குப் பெரிதும் உதவியது. முதலாளித்துவ பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குகந்த தொழிற்படையின் போதாமையை நிரப்புவதற்கேற்ற வகையில் நாட்டின் குடிவரவுக் கொள்கை அமுல்படுத்தப்பட்டது. இந்த மக்களின் தொழிலாற்றும் சூழல் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் அதே நாட்டின் வெள்ளைத் தொழிலாளர்களின் நிலைமைகளைவிட மோசமாக இருந்தன. இவர்களின் குடியேற்றமும் பல கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.

வெள்ளையர்கள் செய்ய விரும்பாத தொழில்களே பெரும்பாலும் கறுப்பர்களுக்குக் கிடைத்தன. காலனித்துவ காலத்தில் ஆரம்பித்த இனரீதியான தொழிற்பிரிவு (racial division of labour) போருக்குப்பின் பிரித்தானியாவில் நடைமுறைக்கு வந்ததென விளக்கிய சிவா, இந்தக் கறுப்பு மக்களின் உரிமைப் போராட்டம் தனியே வர்க்கப் போராட்டம் மட்டுமல்ல, இருக்கும் சமூக அமைப்பில் அதற்கு ஓர் இனப்பரிமாணமும் உண்டெனக் கூறினார்.

கறுப்பர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களையும் நிறவாதக் கலவரங்களையும் அவர் தலைமைதாங்கிய IRR ஆவணப்படுத்தியது. பிரித்தானியாவில் கறுப்பினத்தவர்கள் நிறுவனமயமாக்கப்பட்ட நிறவாதத்திற்காளாகிறார்கள் என வாதாடிய அவர், இனமும் வர்க்கமும் (race and class) ஒன்றை ஒன்று ஊடறுத்த வண்ணமிருக்கும் யதார்த்தமே அந்த மக்களின் போராட்டத்தை வரையறுக்கும் புலமாகிறது என ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டினார்.

சிவானந்தனின் வாதம் சகல சமூக முரண்பாடுகளையும் ஒற்றைப் பரிமாணப் பார்வையில் வர்க்க அடிப்படை வாதத்திற்குள் குறுக்கி விடுவோருக்குப் பிரச்சினையாயிருந்தது. ஆனால், அவர் பயன்படுத்திய ஊடறுத்தல் (intersection) கோட்பாடு யதார்த்தத்தின் சிக்கல் மிகுந்த இயக்கப் போக்குகளை முழுமையாக அறிய உதவியது.

முதலாளித்துவ உலக மயமாக்கலின் அரசியல், பொருளாதாரப் போக்குகள் மற்றும் கலாசாரத் தாக்கங்கள் பற்றியும் அவை ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் போராட்டங்களுக்கு எழுப்பியுள்ள சவால்கள் பற்றியும் பல ஆய்வுக் கட்டுரைகளை வரைந்தும் பகிரங்க உரைகளை நிகழ்த்தியும் உள்ளார். நவதாராள வாதத்தின் எழுச்சியின் விளைவான சந்தை அரசு (market state) பற்றியும் சமகால ஏகாதிபத்தியத்தின் புதிய போக்குகள் பற்றியும் ஆழ ஆராய்ந்துள்ளார். நிறவாதம் என்பது சமூக பொருளாதார அமைப்பு மற்றும் அரசியல் கலாசாரம் ஆகியவற்றிற்கு வெளியே தனியாக இயங்கும் ஒன்றல்ல. அது அவற்றுக்குள்ளே குவிந்திருப்பதால் அவை மாற்றமடையும்போது நிறவாதத்தின் நடைமுறைப்போக்கும் மாற்றமடைகிறது. இன்றைய தகவல்யுக மூலதனத்தின் ஏகாதிபத்தியம் முன்னைய ஆலைத் தொழில்யுக ஏகாதிபத்தியத்திலிருந்து வேறுபட்டது. நிறவாதத்தின் அமைப்பு ரீதியான வெளிப்பாடுகளும் இதற்கேற்ப மாற்றமடைகின்றன. உலக மயவாதமே (globalism) இன்றைய ஏகாதிபத்தியத்தின் வரைவிலக்கணமாகிறது. ஆகவே, இருபத்தியோராம் நூற்றாண்டின் நிறவாதம் பற்றிய ஆய்வினை உலகமயமாக்கலின் அமைப்புக்களின் ஆய்விலிருந்தே ஆரம்பிக்கவேண்டும் எனும் கருத்தை முன்வைக்கிறார். அவரது எழுத்துக்களும் பேச்சுக்களும் விவாதங்களையும் சர்ச்சைகளையும் கிளப்பத் தவறவில்லை. நானும் சில தடவைகள் அவருடன் முரண்பட்டு விவாதித்துப் பயனடைந்திருக்கிறேன். 1980 களுக்குப் பின் எழுந்த மாக்சிய செல்நெறிகள் தொடர்பாக அவருக்கும் அவரது நீண்ட கால மாக்சிய நண்பர்கள் சிலருக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன.

(23ஆம்பக்கம்பார்க்க...)

**உரிமைக்காக போராடியவர்களின் பேச்சாளனாக, எழுத்தாளனாக விளங்கிய பேரறிஞர் அவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் 33 ஆவது ஆண்டு நினைவு நாள்

06 ஜனவரி 1985 அன்று வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்துவந்த இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் உதவியாளர்களும் பொதுமக்களும் என 10 பேரின் 33 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு 06 ஜன வரி 2018 அன்று வங்காலையில் திருப்பலியுடன் நடைபெற்றது.


# காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.


## பயணத்தில் செபங்களோடு இணைந்திருங்கள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் தென் அமெரிக்காவின் சிலி மற்றும் பெருநாடுகளுக்கு மேற்கொண்டுள்ள திருத்தூது பயணத்திற்கு செபிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். சிலி மற்றும் பெரு நாடுகளில் நான் மேற்கொள்ளும் திருத் தூதுப்பயணத்தில் உங்கள் செபங் களோடு என்னுடன் இணைந்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன் என அழைப்பு விடுத்து திருத்தந்தை தன் டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார்.

# லில்லி நலவாழ்வு இல்லத்தை யாழ். ஆயர் திறந்து வைத்தார்

152, பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கில் நவீன வசதிகளுடன் அழகுற அமைக்கப்பட்டுள்ள லில்லி நலவாழ்வு இல்லத்தை (லில்லி கெயர் ஹோம்) யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 15 ஜனவரி 2018 அன்று சம்பிரதாயபூர்வமாக ஆசீர்வதித்து திறந்து வைத்தார். லில்லி நலவாழ்வு இல்லம் வாழ்வைக் கொண்டாட என்ற விருது வாக்குடன் முதியோரின் நலன்களைக் கவனிக்க அமைக்கப்பட்ட ஓர் இல்லமாகும்.



யாழ்புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கைச் சேர்ந்த அமரர்களான திரு. திருமதி தேவசகாயம் மோ கிறேஸ் லில்லி தம்பதியினரின் ஞாபகமாக பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அவர்களின் மகன் சாள்ஸ் அழகரட்ணம் தேவசகாயம் என்பவர் இந்த லில்லி நல வாழ்வு இல்லத்தை உரிமையாளராக இருந்து நிறுவியுள்ளார்.

யாழ். ஆயரை காப்பாளராகக் கொண்ட மேற்படி கட்டடப் பணிகளை ஏ.ஜீவா போல் அ.ம.தி. அடிகளார் மேற்பார்வையிட்டு நிறைவேற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. 3 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரிய வெளியில் நல்ல விளைச்சலுக்குரிய செம்மண் மற்றும் வற்றாத இனிய குடிதண்ணீர் கொண்ட கோப்பாய் மண்ணில் 30 அறைகளுடன் ஐரோப்பிய நாடு களில் உள்ளது போன்று அனைத்து நவீன வசதிகளும் கொண்டதாக லில்லி நலவாழ்வு இல்லத்தை அமைத்துள்ள சாள்ஸ் அழகரட்ணம் தேவசகாயம் பாராட்டப்பட வேண்டியவர்.




குளிரூட்டப்பட்ட அறைகள், வைபை மற்றும் தொலைக்காட்சி வசதி, அமைதியாக இளைப்பாறக் கூடிய அழகிய அறைகள், சுகாதாரமான சுற்றுச்சூழல் - மெல்லிய காற்று எப்போதும் வீசிக் கொண்டிருக்கும் இயற்கை - பூ மரங்களும் பயன்தரும் வாழை மரங்களும் நிறைந்து தரும் குளிர்மை என லில்லி நல வாழ்வு இல்லத்தை வர்ணித்துக் கொண்டே போகலாம்.

முதியோர் தங்குமிட பராமரிப்பு, தங்கள் வீட்டில் இருக்கும் போதே நடமாடும் பராமரிப்பு, முதிய பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தங்கும் தங்குமிட வசதி, மகாநாட்டு மண்டபம் எனப்பல வசதிகளை ஒரே இடத்தில் கொண்டதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள லில்லி நலவாழ்வு இல்லத்தின் முதற் கட்ட பணிகள் நிறைவாகியுள்ளன. தொடர்புகளுக்கு தொலைபேசி 0212232262 lilycarehome.com.

## உண்மையின் எண்ணங்கள்

### கோப்பாய் லில்லி நலவாழ்வு இல்லம்

152, பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கில் அமைக்கப்பட்டு யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டுள்ள லில்லி நல வாழ்வு இல்லம் (லில்லி கெயர் ஹோம்) யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒரு புதிய முயற்சியாகும். காலமாற்றத்திற்கு ஏற்ப வாழ்வை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்திற்கு ஏற்ற விதமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



பெரிய வீட்டில் கூட்டுக்குடும்பமாக தாத்தா, பாட்டி என்று வாழ்ந்த காலம் மாறிவிட்டது. இனப்போர், பொருளாதாரம் என பல விடயங்கள் நிமித்தம் மக்கள் புலம்பெயர்ந்தமையால் முதியோரைப் பராமரிப்பது பெரும் சிரமமாகியுள்ளது. முதியவர்கள் பலர் வெளிநாட்டுக்குச் சென்றாலும், அங்கு தரப்படும் வசதிகளைப் பெற்றாலும் அங்கு வாழ்வது அவர்களுக்குப் பல வழிகளிலும் கடினமாகவே உள்ளது.

பிள்ளைகள் தம் பெற்றோரை இங்கு மகிழ்வாக வைத்திருக்கவே விரும்புகின்றனர். இந்த நிலையில் வெளிநாடுகளில் இருப்பது போன்று இங்கு அமைதியாகத் தம் இறுதிக் காலத்தை செலவு செய்ய லில்லி நலவாழ்வு இல்லம் வழி வகுக்கும் என நம்பலாம்.



## வலைத் தொழிற்சாலைக்கு ஆஸி.பிரதிநிதிகள் வருகை


மெல்போர்ண் ஆஸ்திரேலியாவிலிருந்து திருமதி சுமி பிரபாகரனுடன் அவருடைய நண்பர்கள் 20 பேரும் 08 ஜனவரி 2018 அன்று நெவாட் மீன்பிடிவலை தொழிற்சாலையைப் பார்வையிட்டார்கள்.

திருமதி சுமி பிரபாகரன் தொழிற்சாலை உருவாக்கத்தின் திட்ட வரைவை உருவாக்கியதில் மிக முக்கிய பங்குவகித்தமையுடன் அதற்கான நிதி உதவிகளை ஆஸ்திரேலியா, விக்ரோரியா அரசாங்கத்திடமிருந்து 2005 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பெற்றுக்கொள்வதற்கு முக்கியமான காரணமாகவும் இருந்துள்ளார்.

## 'நன்றி' எனும் வார்த்தையை அதிகம் நாம் பயன்படுத்துவோம்

பொங்கல் செய்தியில் யாழ். ஆயர் வழிகாட்டல்

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது பொங்கல்தின வாழ்த்து செய்தியில் 'நன்றி' என்ற வார்த்தையை அதிகம் பாவிக்கத் தொடங்குவோம் என வேண்டியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கும் போது, அநேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்து விடுகிறோம். இது அவர்கள் பணி, இது அவர்கள் கடமை, இதற்காக பணம் செலுத்தப்படுகின்றமையால் அவர்கள் இதைச் செய்யவேண்டுமென என்கின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கிறது.

'நன்றி' என்ற வார்த்தையை இனிவருங்காலத்தில் அதிகம் பாவிக்கத் தொடங்குவோம். பொதுப் பணியை செய்வோருக்கும் என்றும் நன்றி சொல்வோம்.

இது அவர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்புடன் செயலாற்ற உதவும். அனைவரும் இவர்களின் உதவியையும் மதிப்பையும் பெற இது வழிவகுக்கும் - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உலகில் அனைவருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஏறத்தாழ ஐந்து ஆண்டு கள் ஆகியுள்ள வேளை எங்களின் உடன் பிறப்பில் ஒருவர் திருத்தந்தையாகப் பணியாற்றி வருவது எங்களுக்குக் கிடைத்த பெரும் பேறு என்று ஆர்ஜென் டீனா நாட்டு கத்தோலிக்க ஆயர்கள் கூறியுள்ளனர்.

இவ்வுலகில் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்து வின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் அனைத்து நாடுகளிலும் திருத்தந்தை பிரான் சிஸ் அவர்களுக்குக் கிடைத்துவரும் ஆதரவு பெருகி வருகின்றது என்றும் உல கின் பெரும்பாலான கிறிஸ் தவர்கள் மற்றும் நன்மனம் கொண்ட மனிதர்கள் திருத் தந்தையை எடுத்துக்காட்டாகப் பேசிவருகின்றனர் என்றும் ஆர்ஜென்டினா நாட்டு கத்தோலிக்க ஆயர்கள் கூறியுள்ளனர்.

## 3 லட்சம் செபமாலைகள் பெருவில் கைதிகள் தயாரிப்பு

### திருத்தந்தை விஜயத்தை ஒட்டி

திருத்தந்தை பிரான்சிஸ் பெரு நாட்டுக்கு மேற்கொள்ளும் திருத் தூதுப் பயணத்தை முன்னிட்டு அந் நாட்டின் பன்னிரண்டு சிறைகளிலுள்ள கைதிகள் மூன்று லட்சம் செபமாலைகளைத் தயாரித்துள்ளனர். பெரு நாட்டின் திருத்தூது பயணத் தயாரிப்புகளில் அந்நாட்டின் கைதிகளையும் ஈடுபடுத்தும் நோக்கத்திலும் இத்திருத் தூதுப் பயணத்திற்கு ஆகும் செலவுகளுக்கு உதவும் வகையிலும் லீமா உயர் மறைமாவட்டத்தின் ஒத்துழைப்புடன் பெரு நாட்டின் தேசிய சிறை சீர்திருத்த நிறுவனம் செபமாலைகள் தயாரிக்கும் பணிகளில் கைதிகளை ஈடுபடுத்தியது. இந்தச் செபமாலைகளை விற்ற பணத்திலிருந்து கிடைக்கும் தொகை இவற்றைத் தயாரித்த கைதிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்று திருத் தந்தையின் லீமா திருத்தூதுப் பயணத் தயாரிப்புகளுக்குப் பொறுப்பான லூயிஸ் கஸ்பார் அடிகளார் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ''ஆசிரியர் பிரம்பைத் தவிர்த்தால் மாணவன் வாழ்க்கை பாழாகும்''

## உளர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

சந்தியடியில் வாத்தியார், ஏரம்பர், ஜீவன், ரூபன், பேப்பர்தம்பி, கச்சான் விற்கும் செல்லாச்சி என எல்லோரும் கூடியிருந்தனர்.

''ஆளாளுக்கு எங்களை வாட்டியெடுக்கினம் என்று பார்த்தால், ஆண்டவனும் வதைச்சு எடுக்கிறதெண்டு முடிவுசெய்திருக்கிறான். இல்லையென்றால் பின்னேரக்கையிலையே இந்த மாதிரி பனிக்குளிர் நடுங்க வைக்குமே?'' என்று வம்பளப்பை ஆரம்பித்தார் ஏரம்பர்.

'இதுக்கெல்லாம் அடுத்தவையிலை ஏன் பழியைப் போடுறியள்? 'வெந்ததைத் தின்று போட்டு விதி வந்தாச் சாவம்' என்று சூடு சுரணை இல்லாமல் இருந்தால் வாறவன் போறவன் எல்லாம் ஏறிமிதிப்பாங்கள்தானே. அரசியல் என்றாலும், அன்றாட நிர்வாகமென்றாலும் நாங்கள் அக்கறை எடுத்து சரிபிழை பார்த்து தலையிட வேணும். அதை விட்டிட்டு இப்பிடி கடவுள் செயல் என்று இருக்கக்கூடாது'' என்று அதட்டிச் சொன்னாள் செல்லாச்சி.

அப்போது பேருந்துக்குக் காத்து நின்ற ஒரு யுவதி , செல்லாச்சியிடம் கச்சான் வாங்கினாள். அவளைப் பார்த்த ஏரம்பர், ''பிள்ளை நீர் பரத்தாரின்றை மகள்தானே? பல்கலைக்கழகத்திலை படிக்கிறீர் என்று அப்பா சொன்னவர். கனநாளாவீட்டை நின்று போட்டு போனகிழமைதான் நீர் பல்கலைக்கழகத்துக்குப் போனனீர் என்றும் சொன்னவர். அதுக்கிடையிலை நீர் என்ன திரும்பவும் இங்கை வந்து நிற்கிறீர்?'' என்று வியப்புடன் கேட்டார்.

அதற்கு அந்த யுவதி எதுவும் சொல்லாமல் சோகமாகச் சிரித்து விட்டுக் கச்சானை வாங்கிக்கொண்டு சென்றார்.

அப்போது செல்லாச்சி, ''படிக்கப் போனவைதங்களுக்குள்ளை அடிபட்டு ஆஸ்பத்திரியிலை கிடக்கினம். படிப்பிக்கச் சம்பளம் வாங்கிறவை எல்லாத்தையும் இழுத்து மூடிப்போட்டு சும்மா இருக்கினம். பிள்ளைகளைப் பெத்து வளர்த்து ஆளாக்கி, படிப்பிச்சுப் பல்கலைக்கழகம் அனுப்பிப்போட்டு, பிள்ளை பட்டதாரியாகித் தலையெடுத்துக் குடும்பத்தையும் தங்களையும் காப்பாத்தும் என்று கனவுகாணிற பெத்ததுகளுக்குத்தான் வயிறு பத்தி எரியுது.'' என்று கோபமாகச் சொன்னாள். .

இதற்கு ரூபன், ''பல்கலைக்கழகத்துக்குள்ளை அடிபட்டுச் சீரழியிறது போதாதெண்டு, வெளியிலை இருக்கிற கடையிலை பருப்பும்பாணும் வாங்கிற பொடியளை கடைக்குள்ளை புகுந்து அடிக்கிற அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டு போகுது. விட்டால் இனிமேல் வீடுகளுக்குள்ளையும் புகுந்திடுவினம் போலை இருக்காம்.'' என்றான்.

இதைக்கேட்டுக்கைபேசியிலிருந்து தலைநிமிர்ந்த ஜீவன், ''கிட்டடியிலை இரவு பல்கலைக்கழக வீதியில் சண்டை பிடிச்ச பல்கலைக்கழக மாணவர்களைப் பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லையாம். பொலிஸார் வந்து கெஞ்சிக் கூத்தாடியும் முடியாமல் போய்த்தானாம் அதிரடிப்படையைக் கூப்பிட்டவை. அந்தப் படை வந்த பிறகுதான் ஒருமாதிரி நிலைமை கட்டுப்பாட்டுக்கை வந்ததாம்.'' என்றான்.

''அடிபட்டது தங்கடை ஆக்கள் என்றவுடனே சும்மா விட்டிட்டுப் போயிட்டினம் போலை இருக்கு.'' என்றார் ஏரம்பர்.

இதைக்கேட்டு ஆத்திரமடைந்த வாத்தியார், ''இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இப்பிடிச் சிங்களவன் - தமிழன் விளையாட்டு விளையாடப் போறியள். பேராதனைப் பல்கலைக்கழகத்திலை பகிடிவதையிலை ஈடுபட்டவை என்று பத்துக்கும் மேற்பட்ட மாணவரை ஒரே அடியாத் தூக்கி வெளியிலை விடிற துணிவு அங்கே இருக்கிறவர்களுக்கு இருந்ததுதானே. பல்கலைக்கழகத்துக்குள்ளை வந்திட்டால் எல்லோரும் மாணவர்கள்தான். அவைக்குள்ளை இனமத வேறுபாடு எதுவும் கிடையாது. இனமதரீதியிலான கழகங்கள் அல்லது சங்கங்களை பல்கலைக்கழகங்களுக்குள் அனுமதித்ததுக்குக் காரணம், கலாசார பண்பாட்டு நிகழ்வுகளைக் கொண்டாடும் போது மற்றைய இனமத மாணவர்களும் அதனைத் தெரிந்து கொண்டு நல்லிணக்கம் ஏற்படத்தான்.'' என்றார்.

அப்போது செல்லாச்சி, பேப்பர்தம்பியைப் பார்த்து, ''உங்கடை ஆக்களும் ஊடகங்களிலை பெரும்பான்மையின மாணவர்கள் என்று போடுறதை நிப்பாட்ட வேணும். 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்' என்றுதானே போடவேணும்.'' என்றாள்.

இதைக்கேட்டு பேப்பர்தம்பி, ''அது சரி, கடைசியிலை செய்யிறது எல்லாத்தையும் செய்து போட்டு ஊடகவியலாளர் தலையிலை சுகமாகப் பழியைப் போடுங்கோ. உள்ளுக்குள்ளை இருக்கிற தமிழர் சிங்களவர் விளையாட்டை முதலிலை நிப்பாட்டுங்கோ.'' என்றான்.

''தம்பி விவரமாகச் சொன்னால் தானே தெரியும்.'' என்றார் ஏரம்பர்.

யதார்த்தத்தைச் சொல்லத் தொடங்கினான் பேப்பர்தம்பி.

''இலங்கையில் சிங்களவர் ஒருவர் தலைமைப் பொறுப்பில் இருந்தால், அவர் எவருக்கும் தனது தேசப்பற்றை நிரூபிக்க வேண்டிய தேவை கிடையாது. ஆனால், ஒரு சிற்றூழியராக இருக்கும் தமிழருக்குக் கூட இலங்கை அரசமைப்புக்கு விசுவாசமானவர் என்று காட்ட வேண்டிய நெருக்கடி இருக்கிறது. இதனால்தான் கொழும்பில் ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிற தமிழரால் அவருக்குத் தெரிந்த இன்னொரு தமிழரைக் கண்டவுடன் ஓடி வந்து உதவி செய்ய முடிவதில்லை. அப்படி ஒரு தமிழர் வந்து உதவி செய்கிறார் என்றால், அவர் திகட்டத்திகட்ட தனது இராஜவிசுவாசத்தைக் காட்டி விட்டார் என்று அர்த்தம். பல்கலைக்கழகத்தில் இருப்பவர்கள் இதற்கு விதிவிலக்கு இல்லையே.'' என்று சொல்லி விட்டு மூச்சு வாங்கினான்.

இதைக் கேட்ட ஜீவன், ''ஆனால், அரசுக்கு விசுவாசம் காட்ட சிங்கள மாணவருக்குச் சலுகைகள் காட்டுவது ஒரு பக்கம் என்றால், தங்களது பதவிப் போட்டிகளுக்காகத் தமிழ் மாணவர்களின் ஆதரவைப் பெற, அவர்கள் எதைச் செய்தாலும் நடவடிக்கை எடுக்கத் தயங்குவது இன்னொரு பக்கம். இத்தனைக்கும் மிகச் சில மாணவர்களால்தான் முழுப் பல்கலைக்கழகத்துக்கும் இடையூறு ஏற்படுகிறது. அவர்களை எதிர்க்கவும் முடியாமல், படிப்பை முடிக்கவும் முடியாமல் மற்றவர்கள் மனதுக்குள் பொருமுகிறார்கள் என்பதுதான் உண்மை.'' என்றான்.

''உண்மைதான்'' என்ற செல்லாச்சி, ''இதிலை கஷ்டப்பட்ட குடும்பத்துப் பிள்ளைகள்தான் பாவம். இவங்கள் வருசத்திலை பாதி நாள்கள் பல்கலைக்கழகத்தை மூடி விட்டால் படிப்பை முடிக்கிற காலம் இழுபட்டுப் போகும். அதாலை அறை வாடகை முதல் எல்லாச் செலவுகளும் அதிகமாகும். பிள்ளைகளுக்கும் வயசும் கூடிக் கொண்டே போகும். இப்பெல்லாம் அரசாங்க வேலை 'ஆடிக்கொருக்கா அமாவாசைகொருக்காதானே' கொடுக்கிறாங்கள். செல்வாக்கு இருக்கிறவை எப்பிடியும் தங்கடை பிள்ளைகளை ஒன்றுக்குள்ளை நுழைச்சுப் போடுவினம். மற்ற தாய்தகப்பன் என்ன செய்வினம்?'' என்று கவலைப்பட்டாள்.

''போன சனிக்கிழமை பல்கலைக்கழகத்திலை பாடசாலை மாணவர்களுக்கு நிகழ்வு ஏதோ நடந்தது. அதற்கு வீதி வழியாக மாணவர்கள் பலரும் ஆசிரியர்களுடன் போனார்கள். அங்கிருந்த கடையொன்றிற்கு வந்த ஒருவர் இதைக் கண்டு 'பல்கலைக்கழகத்துக்கு ஏன் பாடசாலை மாணவர்கள் போகினம்?' என்று கேட்டாராம். அந்தநேரம் கடைக்கு முட்டை வைக்க வந்தவர் பகடியாக 'பல்கலைக்கழகத்திலை அடிக்கடி மோதல்கள் நடப்பதால் வகுப்புகள் நடக்காமல் கதிரை, மேசை எல்லாத்திலையும் தூசி படியுதாம். அதுதான் பள்ளிக்கூடப்பிள்ளைகள் விரிவுரை மண்டபங்களைப் பயன்படுத்தட்டும் என்று விட்டிருக்கினம்' என்றாராம். இதுதான் பல்கலைக்கழகம் பற்றிய பொதுமக்களின் நிலைப்பாடு.'' என்றான் ரூபன்.

மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டு விட்டு, தொண்டையைச் செருமியபடி கதைக்கத் தொடங்கினார் வாத்தியார்.

''மேலைநாட்டில் 'பிரம்பைத் தவிர்த்தால் மாணவன் கெட்டுப்போவான்' (Spare the rod and spoil the child) என்று சொல்வார்கள். ஆரம்பப்பாடசாலை முதல் உயர்கல்வி வரை மாணவர்களுக்கு எப்போதும் பயம் கலந்த மரியாதை இருக்க வேண்டும் என்பது மேலைநாடுகளில் ஒரு கட்டாயத் தேவையாகக் கடைப்பிடிக்கிறார்கள். இளமையும், அந்த வயதுக்கே உரிய துறுதுறுப்பும் சேரும் போது, எல்லா மாணவர்களுக்கும் கட்டுப்பாடுகளை மீறுவதிலும், எல்லை தாண்டுவதிலும் ஆர்வம் இருக்கவே செய்யும். ஆனால், அந்த எல்லை மீறுதல் என்பது கல்வி நிறுவனத்தையே நடத்த முடியாமல் போகும் போது தண்டனை என்பதை நிர்வாகம் கையில் எடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. தண்டனையால் ஏற்படும் வலி அல்லது விளைவு என்பது பயத்தை ஏற்படுத்தி அந்த மாணவன் அல்லது மாணவியை ஒழுக்கநெறிக்கு வழிப்படுத்துகிறது. தண்டனையாலும் வழிப்படுத்த முடியாதவர்களை அங்கிருந்து அகற்றுவதன் மூலம் மற்றைய மாணவர்களின் கல்வி பாழ்படாமல் செய்ய முடியும்.'' என்றார் வாத்தியார்.

அப்போது ரூபன், ''பல்கலைக்கழகமோ பாடசாலையோ வெறும் புள்ளிகள் வாங்கும் இயந்திரத்தை உற்பத்திசெய்து என்னபயன்? நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படக்கூடிய நல்ல குடிமக்களைத்தானே உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்க பயம் கலந்த மரியாதை தேவைப்படுவது தவிர்க்க முடியாதுதான்.'' என்று சொன்னான்.

அதற்கு செல்லாச்சி, ''ஆனால் சில இடங்களிலை இந்தப் பயம் கலந்த மரியாதையை வைச்சு, நாசமறுவாங்கள் பொம்பிளைப்பிள்ளைகளைச் சீரழிக்கிறாங்கள். அவங்களுக்குத் தண்டனையும் கிடையாது. பயமும் கிடையாது'' என்று புறுபுறுத்தாள்.

பேப்பர்தம்பி, ''தண்டனையே கூடாது என்றால், ஒழுக்கக்கேடான ஓரிரு மாணவர்களுக்கு பயமே இல்லாது எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஆகி விடும். அத்தோடு தண்டனை பற்றிய பயத்தால் ஒழுக்கமாக நடக்கும் மற்றைய மாணவர்களும் தவறுகள் செய்ய ஊக்கப்படுத்துவதாகிவிடும்.'' என்றான்.

இதற்கு வாத்தியார், ''முன்னெப்போதையும் விட கைபேசி, இணையம் என்ற வசதி வாய்ப்புகளை அதிகம் பெற்றுள்ள இன்றைய தலைமுறையிடம் ஒழுக்கக்கேடுகளும் அதிகரித்திருப்பதைச் சொல்லத்தான் வேண்டும். இந்த நிலையில் செல்வாக்கும் அரசியல் பின்புலமும் சேர்ந்துகொள்ள மாணவர்களைக் கண்டிக்கும் ஆசிரியர்கள் முதல் விரிவுரையாளர்கள்வரை தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கிறது. இவற்றையெல்லாம் தவிர்த்து கல்வி நிறுவனங்கள் நாட்டுக்கு நல்ல குடிமக்களை உருவாக்க, இறுக்கமான நடவடிக்கைகள் அவசியமாகிறது. அப்படிநடவடிக்கைகள் எடுக்கப்படும் போது, சம்பந்தப்பட்டவர்களுக்கு பொதுமக்கள் மட்டுமல்லாது ஊடகங்களும் தமது ஆதரவை வழங்க வேண்டும்.'' என்றார்.


அப்போது பேப்பர்தம்பி, ''வணிகமயமாகிவிட்ட சமூகத்தில் பலவிதங்களில் ஒழுக்கக்கேடுகள் பரவிவிட்டன. இவற்றைத்தவிர்க்கும் வகையில் கல்வியாளர்கள், சமூகவியலாளர்கள், சட்டத்துறையினர் போன்றவர்கள் கலந்து கதைத்து இறுக்கமான தீர்வொன்றைக் காண்பது அவசியம்.'' என்றான்.

அதற்கு வாத்தியார், ''அதிக மதிப்பெண்களையும், சம்பாத்தியத்தையும் விட, மாணவருக்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகவும் முக்கியம் என்பதை அனைவரும் உணர்ந்தால் எல்லாமே ஒழுங்காகும். ஆனால் நாங்கள் இதையெல்லாம் கதைக்கிறதுக்காக மாணவர்களை எங்களுக்கு எதிராகத் தூண்டி விடாமல் இருக்க வேணும். இப்ப இதுகளுக்கெல்லாம் கூடப் பயப்பட வேண்டியிருக்கே'' என்று சொல்லி விட்டு எழுந்து நடந்தார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர். கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

சந்தியடி அமைதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

நேற்று பேப்பரில ஒரு செய்தியைப் படிச்ச நேரம் தொடக்கம் மனசு சரியா அந்தரப்பட்டுக் கொண்டு நிற்குது பாருங்கோ!

நாங்கள் எல்லாம் ஒரு காலத்தில 'தமிழன் எண்ட பெருமையோடை அந்தத் தமிழன் ஆர்...? எவன்...? எண்டதையும் உந்த ஊருலகம் முழுக்க வெளிப்படுத்திக் காட்டி வாழ்ந்தனாங்கள்... எண்டதை நினைக்க உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போகுது பாருங்கோ!

ஆனா - இண்டைக்கு எங்கட தமிழ் இனத்துக்குள்ள நடக்கிற சில சீத்துவக்கேடுகள் கலாசாரச் சீரழிவுகளைப் பார்க்கேக்கை உந்த வன்னிப் போர் எண்டது எண்டு வராமல் இருந்திருந்தால் நல்லது போலத் தெரியுது.

ஏனெண்டால் பாருங்கோ! உந்தப் போர் ஒண்டு வந்துபோனதால புலிகளின்ர பிடியிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றியிருக்கிறம்; அந்தப் புலியளிட்டையிருந்து தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் குடுத்திருக்கிறம்... எண்டு தென்னிலங்கை அரசுகள் வாயில கண்டபடி பொச்சடிச்சுத் திரிஞ்சாலும், எங்கட சனத்துக்கு இன்னமும் விடுதலை கிடைச்ச பாடாயில்லை எண்டது தான் உண்மை!

உதாரணத்துக்கு எவ்வளவோ காரணங்களைச் சொல்லலாம்; சொல்லிக் கொண்டே போகலாம்!

முந்தநாள் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி - சாந்திபுரம் பிரதேசத்தில இருக்கிற பாடசாலையில படிக்கிற கொஞ்சப் பொடிப் பிள்ளையள் செய்த பரிசுகேடான காரியமொண்டைப் பேப்பர்காரன் மோப்பம் பிடிச்சு உந்தப் பேப்பர் வழியப் போட்டுவிட நாறிப் போன சங்கதியளோடை இதுவும் நாறிப் போய்க் கிடக்குது இப்ப.

அது என்னெண்டால் பாருங்கோ! பள்ளிக்குடப் பொடியள் பதினொரு பேர் ஒரு செற்றாகச் சேர்ந்து தண்ணியடிக்கவும் வேறை விரும்பத்தகாத செயற்பாட்டிலையும் ஈடுபட்டுக் கொண்டிருக்கேக்கை, ஆரோ இதைக் கண்டிட்டு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரியளுக்குப் போட்டுக் குடுத்திட்டினம். அவையளும் உடன வந்து அப்பிடியே அவையளை அள்ளிப் போட்டுக்கொண்டு போய் கோட்டில பாரப்படுத்த, நீதவானும் பெடியளின்ர தாய் தேப்பனைக் கூப்பிட்டு நல்ல காரசாரமா புத்திமதி சொல்லி எச்சரிக்கை பண்ணி விட்டிருக்கிறார்.

விசயம் இந்தளவோடை முடிஞ்சுதெண்டாலும், இந்தச் சம்பவத்தையும், நாங்கள் கடந்த காலங்களில ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள்ளை இருந்துகொண்டு, எந்த அடிப்படையுமற்ற வசதி வாய்ப்புக்களுமின்றி வாழ்ந்த வாழ்க்கையோடையும் ஒப்பிடேக்கை மனசு ஓவெண்டு... குழுறி அழத்தான் விரும்புது பாருங்கோ...

குப்பிப் போத்தலிலை மண்ணெண்ணெய் திரியில விளக்குக் கொளுத்திப் படிச்சுப் பாஸ் பண்ணின எங்கட பிள்ளையள் எங்கை? பள்ளிக்கூடத்துக்கு 'கட்' அடிச்சுப் போட்டுப் போத்தலும் - தண்ணியுமா றோட்டு வழியத் திரியுற இப்பத்தே பள்ளிக்குடப் பிள்ளையள் எங்கை?

இண்டைக்கு எங்கட பிள்ளையள் இந்த நிலைக்கு வாறதுக்குக் காரணமே இந்த நாட்டு ஆட்சியாளர்கள் தான் கண்டியளே? புலிகளிடமிருந்து தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் குடுத்தலும், இப்ப படிக்கிற பொடியளில பல பேர் போத்திலும் தண்ணியுமாகத் திரியிறதைத்தான் சுதந்திரம் எண்டு சொல்லப் போகினமோ?

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழிய எண்டுதான் சொல்ல வேணும். ஏனெண்டால் பாருங்கோ... முந்தி பிரபாகரன்ர ஆட்சியதிகாரம் நிலவேக்கை, படிக்கிற எந்தவொரு பள்ளி மாணவனும் குடிச்சு, வெறிச்சு ஆடித் திரிஞ்சதில்லை. ஆனா, இண்டைக்குப் பள்ளிக்கூடப் பொடியள் தங்களுடைய பாதை மாறிப் போதைக்குள்ள புகுந்து நிற்குதுகள் எண்டால், இந்தக் குடிகள் எவ்வழி அதே போலத்தான் அரசனும் அவ்வழியாக இருப்பான். போதாக்குறைக்கு பொம்புளையளும் 'பார்' நடத்தலாம்; வேலை செய்யலாம்... எண்டும் உங்கை சனம் பறைஞ்சதுகள்.

நான் என்ன சொல்ல வாறன் எண்டது உங்களுக்கு விளங்குதே?

கதிரையில இருப்பவன் சரியாக இருப்பானாகில், சிரைப்பவன் சினந்து கொள்ள மாட்டான்... என்ன நான் சொல்லுறது சரிதானே?

# ஹிட்லரின் வதை முகாமில்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கைகளில் பச்சைக் குத்துவதில் கைதேர்ந்த லேலுக்கு அந்த அனுபவம் வித்தியாசமானதாக இருந்தது. ஊசியால் குத்திய அந்தப் பெண் கைதிக்கு பச்சை குத்திக் கொள்வதால் ஏற்பட்ட வலியால் கைகள் நடுங்கியது. ஆனால், ஊசியால் பச்சை குத்திய லேலின் கைகள் ஏன் விதிர் விதித்தன?

லேலின் கண்கள் கைதியின் கண்களை சந்தித்ததும், இரு ஜோடி கண்களும் சிறைப்பட்டன. சிறைக்குள் இருந்த இரு கைதிகளின் இதயங்களும் சிறைப்பட்டன. லேலின் மனம் கவர்ந்த கைதி 34902 என்று அடையாளப்படுத்தப்பட்டார் கீதா.

**இந்த காதல் கதை இத்தனை நாள் ஏன் மறைக்கப்பட்டது?**

லேல் மற்றும் கீதாவின் காதல் கதையை அடிப்படையாகக் கொண்டு ஆஸ்திரேலிய திரைப்படத் தயாரிப்பாளர் ஹீதர் மோரிஸ் 'The Tattooist of Auschwitz' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த காதலர்களை சந்தித்த மோரிஸ், வதை முகாமில் சிறைப்பட்டிருந்த அவர்களின் கதையை திரைப்படமாகத் தயாரிக்க முடிவு செய்தார். இந்த அற்புத காதல் கதையைத் தனக்குள்ளேயே ரகசியமாக வைத்திருந்த லேல், தான் நாஜிக்களின் ஆதரவாளராக கருதப்படலாம் என்று அஞ்சினார்.



அன்பான தம்பதிகளாக வாழ்ந்த இந்தக் காதலர்களின் கதை மிக அண்மையிலேயே இந்த உலகிற்குத் தெரிய வந்தது

கைதியாக கட்டாயத்தின் பேரில் பச்சைக் குத்தும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார் என்பதை உலகம் புரிந்துகொள்ளுமா என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது.

இந்த உண்மையை வெளியே கூறவேண்டாம் என்று கீதா தடுத்தார். கீதா 2003இல் தனது மரணத்திற்கு முன்னர் மரணக் குகையில் மலர்ந்த காதலைப் பற்றி உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்று விரும்பினார் லேல்.

காதல் மனைவியின் கட்டளைக்கு கட்டுப்பட்டிருந்த லேல், அவர் காலமான பிறகு காலத்தை கடந்து நிற்கும் தங்கள் காதல் கதை உலகிற்குத் தெரியவேண்டும் என்பதால் ஹீதரிடம் தங்களது அதிசய காதல் கதையைத் தெரிவித்தார்.

34902 என்ற கைதி எண்ணை கீதாவிற்கு பச்சைக் குத்தவேண்டும் என்ற தகவல், கீதாவின் பெயரை லேலுக்குத் தெரிவித்தது. அவுஷ்விட்ஸ் முகாமிற்கு அருகில் பிர்கெங்கோ வதைமுகாமில் இருந்த கீதாவுக்கு லேலே, தனக்கு பாதுகாவலாக இருந்தவர்களின் உதவியுடன் கடிதங்களை அனுப்பினார்.

கீதாவை அக்கறையுடன் கவனித்துக் கொண்டார் லேல். பிற கைதிகளுக்கு உணவு குறைவாக வழங்கப்பட்டாலும் முக்கிய பணியில் ஈடுபடுத்தப்பட்ட லேலுக்குப் போதுமான அளவு உணவு வழங்கப்பட்டது. தனது உணவை மிச்சப்படுத்தி அதை கீதாவிற்கு அனுப்புவார். லேலின் காதல் பசி கீதாவின் பசியை மட்டுமல்ல, அவருடன் இருந்த சக கைதிகளின் பசியையும் ஆற்றியது.

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் நீடித்த காதல், 1945இல் நாஜிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு பிரிந்தது. வதைமுகாம்களிலிருந்து வேறோர் இடத்திற்கு கைதிகள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

தனது காதலியின் பெயர் கீதா ஃபுர்மானோவா என்பதைத் தவிர வேறு எந்த தகவலும் லேலுக்கு தெரியாது. சோவியத் இராணுவம் அவுஷ்விட்ஸ் வதை முகாமிலிருந்து கைதிகளை விடுவித்த போது, செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்த தனது ஊருக்குச் சென்றார். வதைமுகாமின் கசப்பான நினைவுகளுக்கு மத்தியில் அவரது



மனதில் கீதாவின் நினைவு மட்டுமே சுகானுபவமாகப் பதிந்திருந்தது. எப்படியாவது கீதாவைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று உறுதிபூண்டு அலைந்து திரிந்தார் லேல்.

யூத கைதிகள் அன்பளிப்பாக கொடுத்த சில ஆபரணங்கள் லேலிடம் இருந்தன. அதில் சிலவற்றை விற்ற லேல், தனது ஊருக்கு குதிரை வண்டியில்செல்வதற்கானகட்டணத்தைச்செலுத்தினார். தனது சகோதரி கோல்டியையும் கண்டுபிடித்தார்.

**கீதா-லேல் தம்பதிகள்**

பிரிந்த காதலர்கள் இணைந்தது எவ்வாறு?

தனது ஊரிலிருந்து கிளம்பி ஸ்லோவாக்கியாவின் ப்ரதிஸ்லாவா நகரத்திற்குச் சென்ற லேல், அந்த ஊர் ரயில் நிலையத்தில் காலை முதல் மாலை வரை வந்து செல்லும் ரயில்களை கண்காணிப்பார். கீதாவைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று அவர் நம்பினார்.

லேலின் தவிப்பைப் பார்த்த ரயில் நிலைய அதிகாரி, செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்திற்கு சென்றால் முயற்சி வெற்றிபெறலாம் என்று கூறிய ஆலோசனையையும் செவிமடுத்தார்.

குதிரை வண்டியில் வழக்கம்போல் ரயில் நிலையத்திற்குச் செல்லும் வழியில் கீதாவை பார்த்துவிட்டார் லேல். முயற்சி திருவினையாகி, திருமணத்தில் முடிந்தது.

கீதாவும் தன்னைத் தேடிக் கொண்டிருந்தமையைப் பிறகு அறிந்துக் கொண்டார் லேல். வதை முகாமில் பிரிந்த இரண்டு இதயங்களும் ரயில் நிலையத்திற்கு செல்லும் பாதையில் சந்தித்துக் கொண்டன.

மனமொத்த காதலர்கள் 1945 ஒக்ரோபர் மாதம் திருமணப் பந்தத்தில் இணைந்தனர். சோவியத் யூனியன் ஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தது, கைதி எண் 32407, கைதி எண் 34902 என்ற அடையாளம் மாறி இருவரும் தங்களது இயற்பெயர்களைப் பெற்றார்கள்.

லேல் – கீதா தம்பதிகள் துணிக்கடை ஒன்றைநடத்திநிம்மதியானவாழ்க்கையை வாழ்ந்தார்கள். உண்மையான ஆனந்தம் என்ன என்பது மரணங்களுக்கு மத்தியில் உயிர்த்தெழுந்த காதலை அனுபவித்த இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால், ஆனந்தமான வாழ்வும் அஸ்தமித்தது, மீண்டும் ஒருமுறை சிறைவாசத்தை எதிர் கொண்டார்கள் தம்பதிகள். இஸ்ரேலுக்கு உதவ பணம் அனுப்பியது தேசத்துரோகமாகக் கருதப்பட்டதால், அவர்களுடைய தொழிலை முடக்கிய அரசு இருவரையும் சிறையில் அடைத்தது. ஹிட்லரின் வதைமுகாமில் இருந்து உயிரோடு வெளியே வந்த இவர்களுக்கு சிறை வாசம் எம் மாத்திரம்? சில நாளகளுக்குப் பிறகு சிறையிலிருந்து தப்பிய இருவரும் வியன்னாவுக்குச் சென்று, அங்கிருந்து பாரிஸுக்குச் சென்றார்கள். இறுதியாக, ஐரோப்பாவில் இருந்து வெகு தொலைவிற்கு சென்றுவிட்டனர்.

ஆஸ்திரேலியா சென்ற அவர்கள் அங்கு புது வாழ்க்கையை, புது ஜவுளிக்கடையை தொடங்கினார்கள். கீதா ஆடை வடிவமைப்பில் ஈடுபட்டார். தங்கள் ஒரே மகனுக்கு கேரி என்ற பெயரிட்டார்கள்.


மெல்போர்னில் வாழ்ந்தபோது பல முறை கீதா ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்டாலும், லேல் மீண்டும் அங்கு செல்லவில்லை. நாஜி முகாமில் பச்சைக் குத்தி படையினருக்கு உதவியவர் என்ற ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்று அவர் அஞ்சினார். இந்த ரகசியத்தை வெளியில் தெரிவிப்பது ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் தங்கள் காதல் கதையைத் தெரிவிக்க வேண்டாம் என்று கீதாவும் அன்புக் கட்டளை இட்டிருந்தார்.

வதைமுகாமில் ஏற்பட்ட காதலை நாஜி படையினருக்குத் தெரியாமல் மறைத்த காதலர்கள், பிரிவு, சந்திப்பு, சிறைவாசம், என பல தடைகளைக் கடந்து அன்பான தம்பதிகளாக வாழ்ந்த கதை காதலர்களின் மரணத்திற்குப் பிறகே உலகிற்கு தெரியவந்துள்ளது. 2003ஆம் ஆண்டு கீதா காலமாக, 2006ஆம் ஆண்டு லேல் அவரைப் பின் தொடர்ந்தார்.

இருப்பது சிறையே ஆனாலும், அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 வயதைக் கடந்த பெண்களுக்கு எலும்பு தேய்மானம் வரக்காரணங்கள்



35 வயதைக் கடந்த பெண்களுக்குத்தான் இடுப்புவலி, முதுகு வலி, மூட்டுவலி எனப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றமை வழக்கம். இதற்கு காரணம், எலும்பு தேய்மானம்.

35 வயதைத்தாண்டியதும் எலும்பு தேய்மானம் ஏற்படுகின்றது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். எதனால் எலும்புத்தேய்மானப் பிரச்சினை வருகிறது. அதற்கு என்ன தீர்வு என்பதை பற்றி விரிவாக பார்க்கலாம்.

எலும்பு தேய்மானத்துக்கு முக்கிய காரணம், உடல் உழைப்பு இல்லாததே. அந்தக் காலத்துப் பெண்கள் நன்றாக ஓடி, ஆடி வேலை செய்தனர். ஆனால், இப்போது, துணி துவைக்க, சட்னி அரைக்க, மாவு அரைக்க எல்லாவற்றுக்குமே இயந்திரங்கள் வந்துவிட்டன. அத்தோடு, வீட்டு வேலைகள் செய்வதற்கு ஆள்களையும் வைத்துக்கொள்கிறார்கள். இதனால் உடல் இயக்கம் இன்றி இருப்பதால், கல்சியம் (சுண்ணாம்புச்சத்து) கிரகிக்கப்படுவது பாதிக்கப்பட்டு, எலும்பு தேய்மானம் அடைவதற்கு முக்கியக் காரணமாகிவிடுகிறது.

தண்ணீர் போத்தலைக் கையில் வைத்துக்கொண்டு மேலே, கீழே தூக்கி கைகளை இயக்குவதால், தோள்களுக்கு வலுசேர்க்கும். தோப்புக்கரணம் போடுவது, கால்களுக்கு வலு சேர்க்கும்.

அதோடு ஏரோபிக் போன்ற உடற்பயிற்சிகளையும் செய்ய வேண்டும் அல்லது குறைந்த பட்சம் 20 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். எலும்புகளை உறுதியாக வைத்துக்கொள்ள விட்டமின் 'டி' உதவுகிறது.

அதனால், காலை நேரங்களில், வாரத்தில் மூன்று நாள்கள் மிதமான வெயிலில் 15 நிமிடங்களாவது இருப்பது நல்லது. இதன் மூலம் எலும்பு தேய்மானத்தைத் தடுக்கலாம்.



## தாய்ப்பால் கொடுக்கும்போது கோபம் வேண்டாம்!

கோபத்தின் உச்சத்தில் இருக்கும் தாய் தன் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தால் அந்த கோப உணர்ச்சியால் ஏற்படும் கெடுதல்கள் அந்த பாலையே நஞ்சாக்கி, குழந்தை இறக்கும் வாய்ப்பை கூட ஏற்படுத்துகிறதாம். எனவே தாய்மார்கள் பாலூட்டும் போது அமைதியான சூழ்நிலையில் தாய்ப்பாலுட்ட வேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள்.

கோபம் என்பது ஓர் உணர்வு. எரிச்சல், மனக்கடுப்பு, வருத்தம், சீற்றம், ஆத்திரம், ஆவேசம், பெருஞ்சினம் இவை எல்லாம் கோபத்தின் பெருவகைகள். கோபம் என்பது ஒரு சில இடங்களில் அவசியம்தான் அதேசமயம் எதற்கு எடுத்தாலும் கோபம், எப்போதும் கோபம் என்று இருக்கக் கூடாது.

கோபம் ஏற்படும்போது மனதை அமைதியாக வைத்திருக்கப் பழக வேண்டும். கோபம் வரக்கூடாது. வந்தாலும்கூட நீண்ட நேரம் இருக்கக் கூடாது. அவ்வாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கோபம் உடனே மறைந்து விட வேண்டும். திரும்ப திரும்பப் பேசியதைப் பேசி கேட்பவரையும் கோபத்தின் உச்சிக்கு கொண்டு சென்று தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது.

கோபத்தால் நம்முடைய சக்தி வீணாகிறது. நரம்பு மண்டலம் முழுவதும் சீர்குலைகிறது. உடல் பதறுகிறது. உடலில் சோர்வு ஏற்படுகிறது. மறுபடியும் உடல் தன்னிலைக்கு வர பல மணி நேரங்கள் ஆகின்றன. எனவே, உங்கள் உடலை நோய்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவும். தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும் கோபம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

கோபம் வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் நம்முடைய மூச்சுக்காற்றை கவனிக்க வேண்டும். மூச்சு உள்ளே போவதையும், வெளியே வருவதையும் சில நிமிடங்கள் கவனித்து வந்தீர்களானால் கோபம் வராது வந்தாலும் அடங்கிவிடும் என்கின்றனர் நிபுணர்கள்.

## கண்களுக்கு சொட்டு மருந்தா? அவதானம் தேவை

கண்களில் பெண்கள் சொட்டு மருந்துகளைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். கண்களில் பாதிப்பு ஏற்படும் போது அதைச் சரிசெய்வதற்கு திரவ நிலையில் உள்ள சொட்டு மருந்துகளைப் பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது.

ஆனால், அதுபோன்ற சொட்டு மருந்துகளைப் பயன்படுத்தும்போது கவனமாக இருக்க வேண்டும் என்று இங்கிலாந்து மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். அந்நாட்டில், சொட்டு மருந்து பயன்படுத்தும்போது ஏற்பட்ட ஓர் அசம்பாவிதத்தைத் தொடர்ந்துதான் மருத்துவர்கள் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.



64 வயதான ஒரு பெண், சொட்டு மருந்துக்குப் பதில் தவறுதலாக நகப்பூச்சை கண்ணில் விட்டிருக்கிறார். இதனால் அவரது பார்வைத் திறன் மங்கி, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இதுபோன்ற குழப்பங்களுக்குக் காரணம், சொட்டு மருந்துகள் அடைக்கப்பட்டு வரும் புட்டிகளைப் போலவே வேறு சில திரவப் பொருள்கள் அடைக்கப்படும் புட்டிகளும் இருப்பதாகும்.

நகப்பூச்சு, சில வகை பசைகள் இதுபோல சிறு புட்டிகளில் அடைக்கப்பட்டு வருவதால் சொட்டு மருந்தைக் கண்ணில் இடும்போது கவனமாகச் செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

அதிலும் சொட்டு மருந்துகளைப் பயன்படுத்துவோர் பெரும்பாலும் முதியவர்களாக இருப்பதாலும் தவறு நேர்ந்து விடுகிறது. எனவே சொட்டு மருந்துப் புட்டிகளின் வடிவத்தை மாற்ற வேண்டும் என்று இங்கிலாந்து மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மருந்து வியத்தில் எங்கேயும், எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்!



## பெண்களின் சில செயல்கள் ஆண்களுக்கு பிடிக்காதாம்!

**உங்கள் நிறத்திற்கு ஏற்றது போல லிப்ஸ்டிக் போடுங்கள். அடர்த்தியான நிறங்களில் அதிகமாக லிப்ஸ்டிக் போடுவது ஆண்களுக்குப் பிடிக்காது.**

பெண்களுக்கு ஆண்களுக்கும் இடையே இயற்கையாகவே ஈர்ப்பு இருந்தாலும், பெண்கள் செய்யும் ஒரு சில விடயங்கள் ஆண்களுக்குப் பிடிப்பதில்லை. அவ்வாறாக உள்ள பெண்களிடம் ஆண்கள் சற்றுத் தள்ளியே இருக்கின்றார்கள். அப்படி பெண்கள் செய்யும் எந்த விடயங்கள் ஆண்களுக்கு பிடிப்பதில்லை என்பதைக் காண்போம்.

சில பெண்கள் பஷன் என்ற பெயரில் தங்களது தலைமுடியை கலைத்து விட்டு கொண்டு சிக்குகள் விழுந்து இருப்பது ஆண்களுக்கு பிடிப்பதில்லையாம். தலைமுடியைச் சுத்தமாக வைத்திருக்கும் பெண்களை தான் ஆண்களுக்கு பிடிக்கிறதாம்.

முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மற்றும் சுருக்கங்களை மறைக்க நீங்கள் அதிகமாக பவுண்டேசன் கிரீம்களை உபயோகித்து மேக்கப் போடுவது ஆண்களுக்கு பிடிக்காதாம்.

கண்ணுக்கு மை அழகு தான். ஆனால் நீங்கள் தரமற்ற கண் மைகளைப் பயன்படுத்தவில்லை என்றால் அது அழகை சீரழித்துவிடும். திட்டுத்திட்டாக தெரியும் கண் மைகள் அழகாக இருக்காது. கண்கள் பொலிவிழந்து காணப்பட்டால் அது ஆண்களுக்குப் பிடிக்காது.

உங்கள் நிறத்திற்கு ஏற்றது போல லிப்ஸ்டிக் போடுங்கள். அடர்த்தியான நிறங்களில் அதிகமாக லிப்ஸ்டிக் போடுவது ஆண்களுக்குப் பிடிக்காது.

மிதமான வாசனையைத் தரும் வாசனை திரவியங்களை மட்டுமே பயன்படுத்துங்கள். அளவுக்கு அதிகமான வாசனைத் திரவங்களைப் பயன்படுத்துவது அருகில் இருப்பவருக்கு அசௌகரியத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இருந்து லெபனான் சென்ற 10 அகதிகள் பனிப் புயலில் சிக்கிச் சாவு!





பெய்ரூட், ஜன.21

உள்நாட்டுப் போரால் பாதிக் கப்பட்டுச் சிரியாவில் இருந்து லெபனான் நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது பனிப் புயலில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டுப் போர் தீவிரமாக நடைபெற்று வரும் சிரியாவில் உள்ள பொதுமக்கள் பலர் உயிருக்குப் பயந்து அண்டை நாடான லெபனானுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

அவ்வகையில், சமீபத்தில் சிரியாவில் இருந்து ஒரு குழுவினர் புறப்பட்டு லெபனான் நோக்கிச் சென்றனர்.

அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலையில் சிரியா-லெபனான் இடையே உள்ள பனிமலையைக் கடந்து சென்றபோது பனிப்புயலில் சிக்கிக்கொண்டனர்.

இதுபற்றிய தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் மற்றும் லெபனான் இராணுவத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது 9 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

6 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பனிப்புயலின்போது கடுங் குளிரைத் தாங்க முடியாமல் 2 குழந்தைகள், 6 பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் என மொத்தம் 10 பேர் இறந்தமையை லெபனான் இராணுவம் உறுதிப் படுத்தியுள்ளது.

அகதிகளைக் கடத்த முயன்றனர் என சிரியாவைச் சேர்ந்த இரண்டுநபர்கள்மஸ்னாஎல்லை அருகே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ப)

## வைரமுத்துவை கொலை செய்ய பா.ஜ.க. திட்டம்?

சென்னை,ஜன.21

தபால்கர், கௌரி லங்கேஷ் வரிசையில் கவிஞர் வைரமுத்துவையும் படுகொலை செய்ய பா.ஜ.கவினர் திட்டமிட்டுள்ளனர் என மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகி கூறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மனித நேய மக்கள் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராக பணியாற்றி வருபவர் சையது.



தமிழகத்தில் ஆண்டாள் தொடர்பான சர்ச்சை பூதாகரமாக வெடித்து வரும் நிலையில்சிவகங்கையில் அவர் பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

அதில், எழுத்தாளர் கள்தபோல்கர், கௌரி லங்கேஷ்போன்றவர் கள்படுகொலை செய்யப்பட்ட வரிசையில் வைரமுத்துவையும் கொலைசெய்ய பா.ஜ.கவினர் திட்டம் தீட்டியுள்ளனர். அப்படி ஒரு நிலை வைரமுத்துவிற்கு ஏற்படுமேயானால், அவரை மனித நேய மக்கள் கட்சியினர் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆண்டாள் தொடர்பான சர்ச்சை பெரிய அளவில் பேசப்பட்டு வரும் நிலையில் சையது இவ்வாறு பேசியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

## ஒரே முறை இரத்தப் பரிசோதனை மூலம் 8 விதமான புற்றுநோயைக் கண்டறியலாம்!

மியாமி,ஜன.21

ஒரு ரத்தப் பரிசோதனை மூலம் கர்ப்பபை, கல்லீரல், வயிறு, கணையம் என 8 விதமான உடல் உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டுபிடிக்கலாம் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய் அதன் அறிகுறி மூலம் கண்டுபிடிக்கப்படுகிறது. அதை துல்லியமாக கண்டறிய பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தற்போது அதை மிக எளிதான ரத்த பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடியும். அதுவும் ஒரு பரிசோதனையின் மூலம் கர்ப்பபை, கல்லீரல், வயிறு, கணையம், நுரையீரல், மார்பக பெருங்குடல், உணவுக் குழாய் என 8 விதமான உடல் உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோயை கண்டுபிடிக்க முடியும்.




இதற்கு குறைந்தபட்சம் 500 டொலர் செலவாகும். இந்த ஆய்வை அமெரிக்காவின் மியன்மாரில் உள்ள ஜான்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக நிபுணர்கள் நடத்தி கண்டுபிடித்துள்ளனர்.

இரத்தப் பரிசோதனை மூலம் ஆயிரம் நோயாளிகளிடம் புற்றுநோய் உள்ளமையை 70 வீதம் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மோடியுடன் கருத்து வேறுபாடு இல்லை

சென்னை,ஜன.21

பிரதமர் மோடிக்கும், தமிழக அரசுக்கும் அல்லது எனக்கும் இடையே எந்த தனிப்பட்ட கருத்து வேறுபாடும் இல்லை என துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் டில்லியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது பிரதமர் மோடியை சந்திக்காதமை ஏன்? கருத்துவேறுபாடா? என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு ஓ.பன்னீர்செல்வம் பதில் அளிக்கையில்,




பிரதமர் மோடிக்கும், தமிழக அரசுக்கும் அல்லது எனக்கும் இடையே எந்தத் தனிப்பட்ட கருத்துவேறுபாடும் இல்லை. இனி மேலும் ஏற்படாது - என்றார்.

டில்லி சென்ற ஓ.பன்னீர்செல்வம், பிரதமர் மோடியை சந்திக்காமல்திரும்புகின்றமை இதுவேமுதல் முறையாகும். இதற்கு முன் கடந்த ஒக்ரோபர் மாதம் டில்லியில் பிரதமர் மோடியை 30 நிமிடங்கள் சந்தித்து தமிழக அரசின் கோரிக்கைகள் தொடர்பாகப் பேசினார். இப்போது அவர் பிரதமரை சந்திக்காமலேயே திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவில்10 நாள்களுக்கு முன் இறந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தது



ஜொகனஸ்பேர்க்,ஜன.21

தென்னாபிரிக்காவில் சுமார் 10 நாள்களாக இறந்த நிலையில் பிணவறையில் வைக்கப்பட்டிருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்த அதிர்ச்சியான சம்பவம் நடந்துள்ளது.

தென்னாபிரிக்காவின் தாம்போ மாவட்டத்தில் தயிசி கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 9 மாத கர்ப்பிணி நோய் நிலையினக்குப் முன்னர் இறந்து விட்டார்.

நிறை மாத கர்ப்பிணி திடீரென உயிரிழந்த சம்பவம் உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்களை கடும் சோகத்தில் ஆழ்த்தியது. தொடர்ந்து முறைப்படி சடங்கு, சம்பிரதாயங்கள் மரணமடைந்த பெண்ணின் குடும்பத்தினர் நடத்தினர். இறுதியில் அப்பெண்ணின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக பிணவறையில் வைக்கப்பட்டது.

சிறிது நேரம் கழித்து பிணவறையில் உள்ள பணியாளர்கள் பெண்ணின்உடலைஎடுப்பதற்காகஅருகில் சென்றுள்ளனர். அப்போது இறந்த பெண்ணின் கால்களுக்கு இடையே சிசு ஒன்று இறந்த நிலையில் இருந்துள்ளது. இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்தபணியாளர்கள் உடனடியாக உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மருத்துவர்கள் தரப்பில் கூறுகையில், ஆபிரிக்காவில் இதுவரை இப்படியொரு சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், இறந்த உடலில் நுண்ணுயிரிகளின் செயற்பாட்டால் இச்சம்பவம் நடந்திருக்கலாம். இல்லையென்றால் இறப்பிற்கு பின்பு தசையில் ஏற்படும் தளர்வு காரணமாக குழந்தை வெளியில் தள்ளப்பட்டிருக்கலாம். இது இயற்கையான மற்றும் அபூர்வமான நிகழ்வுதானே தவிர இதற்கு அமானுஷ்ய சக்திகள் காரணம் என்று கூறமுடியாது. எனக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP RUSSIA 2018

# இலங்கை வரும் FIFA உதைபந்து கிண்ணம்

உலகக் கிண்ணஉதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணம் நாளை மறுதினம் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

இந்த வெற்றிக் கிண்ணத்தை ஆறு கண்டங்களைச் சேர்ந்த 51 நாடுகளுக்கு எடுத்துச் சென்று ரசிகர்கள் முன்னிலையில் காட்சிப்படுத்துவது ஏற்பாட்டாளர்களின் நோக்கமாகும்.

தொடர்ந்து 150 நாள்கள் வெற்றிக் கிண்ணம் பல நகரங்களுக்குக் கொண்டு செல்லப்படும். உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத்தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை மாதம் 15ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெறவுள்ளது.

# இந்திய அணியை வீழ்த்துவதே இலக்கு

## ரபடா கருத்துத் தெரிவிப்பு

கடைசி டெஸ்டிலும் இந்திய அணியை தோற்கடித்து வெள்ளையடிக்க விரும்புகிறோம் என்று தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் ரபடா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் காஜிசோ ரபடா நேற்று முன் தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

வேகப்பந்து வீச்சில் எந்த மாதிரி விளையாடவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அதே சமயம் இந்திய வேகப்பந்து வீச்சு மீதும் மரியாதை வைத்துள்ளோம். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறவேண்டும் என்பதே நோக்கம். அதனால் கடைசி டெஸ்டிலும் இந்திய அணியை தோற்கடித்து வெள்ளையடிக்க விரும்புகிறோம்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி விராட்கோஹ்லியைத் தான் அதிகமாகச் சார்ந்து இருக்கிறது. அதுபோன்று நாங்களும் சில வீரர்களைத் தான் நம்பி இருக்கிறோம். இந்திய அணியில் தரமான வீரர்கள் இல்லை என்று சொல்லமாட்டேன். ஆனால், அவர்களில் விராட்கோஹ்லியே அதிக மான ஓட்டங்கள் குவிக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

கோஹ்லிக்கு எதிராக நான் உற்சாகமாகப் பந்து வீசி வருகிறேன். இப்போது அவர் உலகின் சிறந்த வீரர் விருதுக்கு தேர்வாகி இருக்கிறார். சிறந்த வீரருக்கு எதிராகப் பதற்றமின்றி பொறுப்புணர்வோடு பந்து வீசுவது முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.





# இலங்கை பார்வையற்றோர் கிரிகெட் அணி 3 ஆம் இடம்

2018 பார்வையற்றோர் வெற்றிக் கிண்ணக் கிரிகெட் போட்டியில் இலங்கைப் பார்வையற்றோர் கிரிகெட் அணி மூன்றாம் இடத்திற்குத் தெரிவாகியுள்ளது.

இந்தப் போட்டி ஐக்கிய அரபு இராச்சியத்தில் அச்வு மன்னில் நடைபெற்றது. இறுதி சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது.

இந்தத் தொடரில் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் இன்று சாஜா நகரில் மோதுகின்றன. இந்தப் போட்டித் தொடரில் பங்காளதேஷ், நேபாளம், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அணிகளும் பங்கு கொண்டன.

பார்வையற்றோருக்கான இந்த வெற்றிக் கிண்ண கிரிகெட் தொடர் இந்த வருடம் 5 ஆவது முறையாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# 2017 ஆம் ஆண்டுக்கான ICC விருதுகள் அறிவிப்பு

2017ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்திய அணியின் அணித்தலைவர் விராட் கோஹ்லி 2017ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



ஐ.சி.சியின் ஓராண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை இந்திய வீரர்கள் தொடர்ந்து பெறுகின்றமை இதுவே முதல் முறையாகும்.

இதற்கு முன் சென்ற ஆண்டுக்கான சிறந்த கிரிகெட் வீரர் விருதை ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியிலும் விராட் கோஹ்லி இடம்பெற்றுள்ளார், இரண்டிலும் அவரே கப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ரி- 20இல் ஐ.சி.சியின் சிறந்த செயல்திறன் வீரருக்கான விருது இந்திய வீரர் யுவேந்திர சஹாலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு ஓவரில் 37 ஓட்டங்கள் சாதனை படைத்த வீரர்



தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஜேபி டுமினி, முதல் தர கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் முதல் தர போட்டியில், கேக் கோப்ராஸ் அணிக்காக டுமினி விளையாடி வருகிறார்.

இந்த நிலையில், நைட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 240 ஓட்டங்கள் இலக்கை விரட்டியது கோப்ராஸ் அணி. அந்த அணியில் களம் இறங்கிய டுமினி, 36 ஆவது ஓவரில் எடி லெயி வீசிய பந்துவீச்சை சிதறடித்தார்.

முதல் நான்கு பந்துகளை சிக்ஸர்களாக விளாசிய டுமினி, ஐந்தாவது பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். கடைசிப் பந்தை பவுண்ரிக்கு அவர் விளாசிய போது, நடுவர் அந்தப் பந்தை No ball என்று அறிவித்தார். இதனால் மீண்டும் ஆறாவது பந்தை எதிர்கொண்ட டுமினி, அதனை இம்முறை சிக்ஸராக மாற்றினார்.


இதன் மூலம் ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் சேர்த்து, உள்ளூர்ப் போட்டி வரலாற்றிலேயே ஒரே ஓவரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

சிறப்பாக விளையாடிய டுமினி 37 பந்துகளில் 70 ஓட்டங்களை குவித்து, கோப்ராஸ் அணியின் வெற்றிக்கு வித்திட்டார். (ப)

# கோஹ்லிக்கு பதிலடி கொடுத்த தென்னாபிரிக்க அணித் தலைவர்

தென்னாபிரிக்காவிடம் தொடரை இழந்த பின்னர் பேட்டியளித்த விராட் கோஹ்லி, தென்னாபிரிக்கா எத்தனை போட்டிகளில் இந்தியாவில் வெற்றிக்கு அருகில் வந்துள்ளனர் என்று தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், தென்னாபிரிக்க அணித்தலைவர் டுபிளிசிஸ், உள்நாடு அல்லாத வெளிநாடுகளில் எங்கள் வெற்றி விகிதம் உலகிலேயே சிறந்தது, ஏனெனில் நாங்கள் தீவிரமாகவே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம்.



ஆனால், மைதானம் உள்ளிட்ட சூழ்நிலைகள் சில வேளைகளில் தீவிரமாக உள்ளது. இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள், எங்களது சுழற்பந்து வீச்சாளர்களை விட அபாரமாகத் திகழ்ந்த சூழ்நிலையிலும் கூட, இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறியுள்ளனர்.

இந்தத் தொடரில் கடினமான சில தருணங்கள் இருந்தன. எனினும், எங்களது வீரர்கள் ஓட்டங்கள் குவிக்கவோ, விக்கெட்டுகளை வீழ்த்தவோ தவறவில்லை.

5 நாள்களோ அல்லது 4 நாள்களோ, இதைப்போல அனைத்து காரணிகளும் நமக்குக் கிடைத்தால் அது நல்லது. நியூலேண்ட்ஸில் முதல் நாள் காலை கடினமாக இருந்தது. அதன் பிறகு, மைதானத்தின் தன்மை மாறியது.

பின்னர், கடைசி நாளில் மைதானம் மீண்டும் கடினமாக மாறியது. பந்துக்கும், மட்டைக்கும் இடையே கடும் போட்டி நிலவ வேண்டும், அதில் வெற்றி பெற போராட வேண்டும். கடந்த முறை, இந்தியத் தொடர்களில் இருந்து நிறைய பாடங்கள் கற்றுக் கொண்டோம்.

அடுத்த முறை நாங்கள் அங்கு ஆடும்போது, கடந்த முறையை விட நல்ல போட்டியளிப்போம் எனத் தெரிவித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கேகாலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நாட்டின் பொருளாதார விடயங்களை முகாமைத்துவம் செய்யும் விவகாரத்தை கடந்த மூன்று ஆண்டுகளாக நான் ஐக்கிய தேசியக் கட்சி அரசுத் தரப்பிடம் விட்டு வைத்திருந்தேன். அது முடிந்து விட்டது. இப்போதிலிருந்து நாட்டின் பொருளாதார விடயங்களைக் கையாளும் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டு விட்டேன்." – என்று அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

"இதற்காக, தேசிய பொருளாதார கவுன்ஸில் ஒன்றை மூன்று மாதங்களுக்கு முன்னரே நான் நியமித்திருந்தேன்.

"இப்போது பொருளாதார நிர்வாக விடயங்களை நானே நேரடியாக ஏற்றுக் கொண்டுள்ளமையால் உள்நாட்டு முதலீட்டாளர்கள் தங்களது தாய் நாட்டை கட்டியெழுப்புவதற்காகத் துணிந்து என்னுடன் இணையுங்கள் என்று நான் அழைக்கிறேன்.

''இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாக விரைந்து உயர முடியும். ஆனால் ஊழல் அரசியல்வாதிகள் அதற்கு இடைஞ்சலாக உள்ளனர்.'' – என்றார் ஜனாதிபதி சிறிசேன.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனை விவகாரத்தில் பெரும் தொகை நிதி மோசடி செய்யப்பட்டிருப்பதான தகவல்கள் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்த அறிவிப்பை ஜனாதிபதி நேற்று விடுத்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## எந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறமையானதாக சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்படும். எந்த வழக்கும் இனிமேல் ஆகக் கூடியது மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கப்படவேண்டும். அது சட்ட ரீதியாகக் கட்டாயமாக்கப்படும்.

– இப்படி நேற்று முன்தினம் ஹோமகமவில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் வைத்து அறிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சட்டத்துடன் தொடர்புடையோர் வழக்குகளை வேண்டுமென்றே இழுத்தடிப்பதற்கு இடமில்லாத வகையில் சட்ட முறைமை மாற்றியமைக்கப்படும் என்றார் அவர்.

## வயோதிப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை அவர்களின் வீட்டுக்கு சென்ற தொழிலாளி ஒருவர், இருவரும் கொலை செய்யப்பட்டிருக்கின்றமையைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

ஒருவரின் சடலம் வீட்டின் நுழைவு வாயிலுக்கு அருகிலும் பெண்ணின் சடலம் வீட்டுக்கு பின்புறமும் கிடந்த நிலையில் மீட்கப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

யார், எதற்காக இந்தக் கொலைகளைச் செய்தனர் என்பது குறித்த தகவல்கள் தெரியவரவில்லை. போத்தல பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றம் சுமத்தியுள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது என்பது சரித்திரத்தில் நடக்காத ஒன்று. தமிழரசுக் கட்சி சார்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதகமான செயலில் ஈடுபட்டுள்ளனர்.

40 ஆயிரம் கோடி ரூபா பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எமது சொத்துகள், கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்காக நிதி ஒதுக்கீடு செய்யுங்கள் எனக் கோராமல், வெறுமனே ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 2 கோடி ரூபா எனப் பேரம் பேசி ஒட்டுமொத்த வரவு – செலவுத்திட்டத்துக்கும் ஆதரவு பெற்றுள்ளனர்.

இந்தச் செய்தியை நான் போகுமிடமெல்லாம் கூறிவருகின்றேன். இன்று ஒரு மாதமாக கூறிவருகின்றேன். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் இதை மறுக்கவில்லை.

16 பேரில் என்னைத் தவிர்ந்த ஏனைய 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் தலைமையிலான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தலா 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இயலுமாயின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இதனைப் பகிரங்கமாக மறுக்கட்டும் என நான் சவால் விடுக்கிறேன். – என அவர் தெரிவித்துள்ளார்.

## ரணிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கூட்டு எதிரணியின் ஒத்துழைப்பையும் பெறுவோம். அதன் மூலம் ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்புவோம்."

– இப்படி எச்சரிக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி.

வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றி பெறும் என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒத்துழைப்புடன் ஐ.தே.கட்சி தனித்து ஆட்சி அமைக்கக் கூடியதாக இருக்கும் எனத் தாம் நம்புகின்றார் என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் –

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி புதிய அரசியல் பயணம் ஒன்றை ஆரம்பிப்பார் என்றும் –

அதற்கு ஐ.தே.கட்சியும், கூட்டு எதிரணியும் கூட ஒத்துழைப்பு வழங்கும் என்றும் –

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வலிமை மிக்க – மூத்த – அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது. (உ)

## யானையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குகிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கெகிராவ நீதவான் நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்தப்படவுள்ளார் என மொரகொட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கடுகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து யாழ் நோக்கிச் சென்ற கடுகதி ரயில் ஓமந்தை ரயில் நிலையத்தில் சுமார் 2 மணி நேரம் தரித்து நிற்கவேண்டியேற்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த போராட்டத்தின் பிரதான ஏற்பாட்டாளர் மகேஸ்வரன் –

சுமார் 300 வருடங்கள் பழைமை வாய்ந்த எமது கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியை ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கும்போது தற்காலிகமாக மூடுவதாகத் தெரிவித்தனர். எனினும் இரவோடு இரவாக ரயில் நிலையத்தை எமது வீதியை மூடி அமைத்தனர்.

கடந்த 7 வருடங்களாக நாம் இவ் வீதியைத் திறந்து விடுமாறு பிரதமர் மற்றும் ரயில்வே திணைக்கள அதிகாரிகள் என பலரிடமும் கோரிக்கை விடுத்து வந்தோம்.

எனினும் எவரும் செவி சாய்க்கவில்லை. அதற்குப் பதிலாக சுமார் 3 கிலோமீற்றர் தூரம் சென்று சுற்றி வரவேண்டிய வீதியையொன்றைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு மாறு தெரிவிக்கின்றனர். அது கூட செப்பனிடப்படாத வீதி. இதனால் மாணவர்கள், கர்ப்பிணி தாய்மார் உட்பட நாம் அனைவரும் கடந்த 7 வருடங்களாக அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றோம். எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையிலேயே நாம் இப்போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். – எனத் தெரிவித்தார்.

100 மேற்பட்டவர்கள் ரயில் பாதையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் கொழும்பில் இருந்து யாழ்நோக்கி சென்ற கடுகதி ரயில் ஓமந்தை ரயில் நிலையத்தில் சுமார் 2 மணி நேரமாக தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதில் பயணித்த பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

இந் நிலையில் சம்பவ இடத்திற்கு வவுனியா பிரதேச செயலாளர், பொலிஸார் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சமரசப் பேச்சு நடத்தினர். நீண்ட இழுபறியின் பின்னர், தற்காலிகமாக இந்தப் போராட்டத்தைக் கைவிடுவதற்குப் போராட்டக்காரர்கள் இணங்கினர்.

இதனையடுத்து ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது. (உ)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை இப்படி தரம் தாழ்த்துவது நாட்டையும், மக்களையும் தரம் தாழ்த்துவதற்கு ஈடானது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடை பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்க வெட்கமாக இருப்பதாக அமைச்சர்கள் கூறுகின்றனர். அமைச்சர்கள் ஜனாதிபதியை அசௌகரியத்திற்கு உள்ளாக்கி வருகின்றனர். இது தலையை தடவி விட்டுக் குட்டுவது போலாகும்.

குட்டு வாங்கிக்கொண்டு ஜனாதிபதி நலமாக இருக்கின்றார். ஜனாதிபதி பதவி தரம் தாழ்த்தப்படுவதானது நாடும் மக்களும் தரம் தாழ்த்தப்படுவதற்கு ஈடானது. – எனவும், மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாகவே தேர்தல் மேடைகளில் விடயங்களைப் புரட்டிப் போட்டு எடுத்து எகத்தாளம் பண்ணும் மஹிந்த ராஜபக்ஷ இந்த விவகாரத்தையும் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

பல கட்சிக் கூட்டின் அரசு இது. அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் எதிரெதிர் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூட.

அத்தகைய அமைச்சரவையில் இடம்பெறும் எந்த விவகாரமும் இரகசியமாகப் பேணப்படும் என எதிர்பார்த்தல் அது பேதமை.

அதுவும் தனது அமைச்சரவை சகாக்களோடு முரண்பட்டுக் கொண்டு ஜனாதிபதி வெளிநடப்புச் செய்தார் என்றால் அந்தச் செய்தி செக்கன் கணக்குகளுக்குள் பரவி விடும் சூழ்நிலைதான் அங்கு இருந்தது.

உடனே அது பரவியும் விட்டது.

எனினும், பிரதமரும் ஏனைய மூத்த அமைச்சர்களும் ஒருவாறு ஜனாதிபதியை தாஜா பண்ணி, சமாளித்து, அமைச்சரவைக் கூட்டத்துக்குக் கூட்டி வந்து கூட்டத்தை நடத்தி முடித்தனர்.

எல்லாம் சுமுகமாகி விட்டது என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். அதனால் ஜனாதிபதியின் வெளிநடப்புச் செய்தியை அப்படியே மூடி மறைக்க முயன்றார்கள் அரசுத் தரப்பினர். அதுதான் எதிரணிக்கு வாய்ப்பாகி விட்டது.

அடுத்தநாள் அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து ஊடகவியலாளர்கள், பிய்த்து எடுத்தனர். அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனரத்ன இந்த விடயத்தில் முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைத்தார். அதனால் சேற்றில் புதைந்தார்.

*''ஜனாதிபதி கோபித்துக் கொண்டு போகவில்லை. வெளிநடப்புச் செய்யவில்லை. அவர் கூட்டத்தின் இடையில் வெளியே நியமை உண்மைதான். ஆனால் அது இயற்கைக் கடன் கழிக்கத்தான்."* – என்றார் ராஜித சேனரத்ன. அவர் கூறிய பதிலை வசமாகப் பிடித்துக் கொண்டார் மஹிந்தர்.

அடுத்த நாள் கொழும்பு விகாரமாதேவி மைதானத்தில் நடந்த தமது அணியின் பிரசாரக் கூட்டத்தில் இந்த விடயத்தை வைத்துக் கொண்டே அவர் ஒரு கலக்குக் கலக்கி விட்டார். அவரது நையாண்டிகலந்த பேச்சு சிங்கள மக்கள் மத்தியில் நன்கு எடுபட்டிருக்கின்றது.

மனிதனின் சிறுநீர்ப்பையை ஆங்கிலத்தில் 'யூறின் பிளாடர்' என்பார்கள். பொதுவாக 'பிளாடர்' என்பது சிறுநீர்ப் பையைத்தான் குறிக்கும்.

''அது என்ன ஜனாதிபதி, அமைச்சரவைக் கூட்டத்தை விட்டு வெளியேறி முப்பது நிமிடங்களாக இயற்கைக் கடன் கழித்திருக்கின்றார். அவ்வளவு நேரம் கழிப்பதாயின் அவரிடமிருப்பது சாதாரண பிளாடர் அல்லது பெரிய (தண்ணீர்) டாங்கா (தாங்கியா)?" – என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் மஹிந்தர்.

பெற்றோருடன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு ஓடும் சிறுவனைச் சமாளித்து, தாஜா பண்ணி, சமாதானம் கூறி, திருப்பிக் கூட்டி வருவது போல, சிறு பிள்ளைத் தனமாக ஜனாதிபதி நடத்தப்பட்டுள்ளார் எனவும் மஹிந்தர் விசனித்திருக்கின்றார்.

மஹிந்தரின் இந்தக் கிண்டலினால் விசனமடைந்த ஜனாதிபதி மைத்திரி, அடுத்த நாள் தாம் பங்குபற்றிய பிரசாரக் கூட்டத்தில் "அமைச்சரவையில் நான் ஓர் உபதேசம் வழங்கி விட்டு, இப்படி ஓர் அரசாங்கத்தை நடத்த முடியுமா என்று ஆராய்ந்து தீர்மானியுங்கள் எனக் கூறிவிட்டு தேநீர் குடிக்கவே சென்றேன்.." – என்று சமாளித்திருக்கின்றார்.

தமக்குத் தேவையான தேநீரை அமைச்சரவைக் கூட்டத்துக்கே அழைத்துப் பெற முடியாமல், இடை நடுவில் தாமே எழுந்து சென்று தேநீர் குடித்து விட்டு வரவேண்டிய நிலையில்தான் நமது ஜனாதிபதி இருக்கின்றார் என்றால் அவரின் நிலைமை பரிதாபத்துக்குரியதுதான்...!

-மின்னல்

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரும்புலிகள் தமது இலக்கு நோக்கி நகரும்போது எதிர்ப்படைக்கு அது தெரியாத வகையில் இருப்பதற்காக அவர்கள் இவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

இறுதி யுத்தம் நடைபெற்று எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவாகிய போர்த்தளபாடங்களை புதுமாத்தளன் பகுதியில் இராணுவத்தினர் தற்பொழுதும் காட்சிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அவர் தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ இன்னும் வடக்கே வருகைதரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வலைத்தளங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி நடனமாடியுள்ளார்.

இதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விருந்தொன்றில் நடனமாடிய காட்சிகள் இணையத்தளத்தில் வெளியாகியிருந்தன.

பிரதமரின் அத்தை முறை உறவினரான பிரபல நடிகை ஐராங்கனி சேரசிங்கவின் விருந்தொன்றில் கலந்துகொண்ட பிரதமர் அவருடன் நடனமாடும் காணொளி இணையத்தளத்தில் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தமையை அடுத்து –

நல்லாட்சி அரசுக்குள் மீண்டும் நெருக்கடியும், குழப்பமும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன எனக் கொழும்பில் சில அரசியல் வட்டாரங்கள் நேற்று நள்ளிரவு காலைக்கதிருக்கு தகவல் வெளியிட்டன.

ஏற்கனவே நல்லாட்சி அரசின் பிரதான பங்காளி கட்சிகளான சு.க. – ஐ.தே.க. இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் மோசமாக வெளிப்பட்டது என்பதும் –

இதனால் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச்செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, பின்னர் பிரதமருக்கு ஏனைய அமைச்சர்களும் நீண்ட நேரம் பேசி, தஜா பண்ணி, சமரசம் செய்து அழைத்து வந்த நிலைமையைச் சமாளித்தனர் என்பது தெரிந்ததே.

ஜனாதிபதியின் நேற்றைய பகிரங்க அறிவிப்பை அடுத்து ஐ.தே.கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் கொதித்துப் போயிருக்கின்றனர் என்றும் –

அவர்களின் அழுத்தத்தினால் இவ்விடயம் தொடர்பில் தீவிர நடவடிக்கை அல்லது முடிவு ஒன்றை இன்று அல்லது நாளை எடுத்து, அதனைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தள்ளப்பட்டுள்ளார் என்றும் – அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கப்படும் மக்களின்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிவாவின் படைப்பிலக்கியப் பங்களிப்பும் அவருடைய அரசியலுடன் நெருங்கிய தொடர்புடையது. பல சிறு கதைகளை எழுதிய அவர் 1997 இல் பிரசுரிக்கப்பட்ட When Memory Dies எனும் ஒரு நாவலை மட்டுமே எழுதினார். சர்வதேசப் பரிசு பெற்ற பிரபலமான இந்த நாவல் இலங்கையின் மூன்று சந்ததிகளின் வாழ்க்கையை அந்த நாட்டின் அரசியல் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து தரும் ஒரு கலைத்துவமான படைப்பு. அவருக்கே உரிய கவித்துவம் மிக்க உரைநடையில் எழுதப்பட்டது. அவரதும் அவர் அவதானித்து உள்வாங்கிய வேறு பலரதும் வாழ்க்கை அநுபவங்கள் அவரின் படைப்பின் மூலவளங்களாயின.

இந்த நாவலுக்கான ஆய்வினை அவர் நீண்ட காலமாகச் செய்துவந்தார் என்பதை நான் அறிவேன். பிரிட்டிஷ் காலனித்துவ காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலான இலங்கையின் அரசியல், சமூக வரலாற்றாய்வுகளை, அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் போராட்டங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டினார். இனப்பிரச்சினை மற்றும் இனங்களுக்கிடையிலான உறவுகள் பற்றி ஆராய்ந்தார். இலங்கைக்குப் பல பயணங்களை மேற்கொண்டார்.

1970 ஆண்டுகளில் பலதடவைகள் இலங்கை வந்த போது தவறாது யாழ்ப்பாணம்வருவார். அங்கே அவருடைய சொந்த ஊரான சண்டிலிப்பாயில் வாழ்ந்த உறவினர்களைப் பார்க்கச் செல்வார். 1976இல் அவரை முதல்

**‘சிந்திப்பதற்காகச் சிந்திப்பதில் அர்த்தமில்லை; செயற்படுவதற்காகச் சிந்திக்க வேண்டும்’**

முதலாகக் கொழும்பில் சந்தித்தேன். அந்தச் சந்திப்புக்கு முன்னர் கொழும்பில் வாழ்ந்து வந்த அவருடைய இளைய சகோதரர் இரகுநாதனின் நட்புக் கிடைத்தது. அவரே என்னைச் சிவாவுக்கு அறிமுகம் செய்தார். தன்னுடன் யாழ்ப்பாணம் செல்ல அழைத்தார். நான் சம்மதித்தேன். அந்தப் பிரயாணத்தின்போது அவரது வாழ்க்கை வரலாறு, லண்டனில் அவரின் அரசியல் செயற்பாடுகள் பற்றிப் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். தனது வேர்களை இழக்க விரும்பவில்லை அவற்றை உயிருடன் தொடரவைக்கும் தண்ணீருக்காகவே தனது பயணங்கள் என்றார்.

1977இல் மீண்டும் இலங்கை வந்தார். அந்தத் தடவை நானும் நண்பர் சுசில் சிறிவர்த்தனாவும் அவருடன் யாழ் சென்றோம். நாட்டுக்கு வந்த போதெல்லாம் அவர் வடக்கிலும் தெற்கிலும் எழுத்தாளர்களையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் சந்திப்பதில் மிகவும் ஆர்வமாயிருந்தார். இந்த வகையில் 1977 ஜூலை மாதம் யாழ் சென்றபோது ஏற்பட்ட அநுபவங்கள் மறக்க முடியாதவை. வடக்கிலே தமிழ் இளைஞர்கள் மத்தியில் தேசிய விடுதலை அலை எழுந்துவந்த காலம் அது. சிவாவும் சுசிலும் அதைப்பற்றி நேரடியாக அறிய விரும்பினர். சில தனிநபர்களையும் குழுக்களையும் சந்தித்து மாறிவரும் வடக்கு அரசியல் நிலைமைகள் பற்றி உரையாடினாம்.

அந்த யாழ்ப்பாணப் பயணம் சிவாவிற்கு இலங்கைத் தேசிய இனப் பிரச்சினையில் கூடுதலான அக்கறையை ஏற்படுத்தியது என நம்புகிறேன். நாம் கொழும்புக்குத் திரும்பிய பின் நடந்த சம்பவங்கள் அந்த அக்கறையை மேலும் ஆழமாக்கியது எனவும் நம்புகிறேன். 1977 ஆவணியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமோக வெற்றியைத் தொடர்ந்து வந்த தமிழர் மீதான வன்செயல்களை நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. கொழும்பில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சமடைந்தனர். அப்போது சிவா வெள்ளவத்தையில் இரகுநாதன் வீட்டில் தங்கியிருந் தார்.

அவர் இடம்பெயரவில்லையாயினும் அந்த



நாள்களின் காட்சிகள் அவருக்கு 1958ஐ நினைவூட்டின. தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை பற்றி அவரும் நானும் நமது சிங்கள நண்பர்களுடன் நீண்ட உரையாடல்களில் ஈடுபட்டோம். 1983 இற்குப் பின் அவர் இலங்கை அரசின் இனவாதத்தன்மை பற்றியும் தமிழ் மக்கள் இனரீதியில் ஒடுக்கப்படுவது பற்றியும் எழுதினார்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனிலிருந்து வெளிவரும் சஞ்சிகையான New Left Review இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றிச் சிவா வழங்கிய ஒரு நீண்ட செவ்வியைப் பிரசுரித்தது. அதில் அவர் இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாற்றைத் தனது பார்வையில் ஆதாரங்களுடன் விளக்குகிறார்.

தமிழர்மீதான இன ஒடுக்கல், இனச்சுத்திகரிப்பு மற்றும் பிரச்சினையின் தீர்வுக்கான முயற்சிகளின் தோல்விகள், இடதுசாரிக் கட்சிகளின் சீரழிவு மற்றும் JVP 1971இல் தெற்கிலே நடத்திய ஆயுதக் கிளர்ச்சி ஆகியவை பற்றித் தன் கருத்துக்களைத் தருகிறார். தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றிக் கூறும்போது விடுதலைப் புலிகளினதும் மற்றைய இயக்கங்களினதும் சீரழிவு பற்றி விவரிக்கிறார். அதிகாரத்திலுள்ள சிங்கள மேனிலையாளர் இலங்கை அரசைக் கொலம்பிய அரசு போன்று ஆயுதக் கிளர்ச்சிக்கெதிரான அரசாக (counter insurgency state) மாற்றி யுள்ளார்கள்.

இதனால் தமிழர் மட்டுமன்றி சிங்களவர்களும் அவலத்துக்குள்ளாகப் போகிறார்களென அஞ்சுகிறார். நாட்டின் எதிர்காலம் இருள் மயமாயுள்ளது என அபிப்பிராயப்படும் சிவா சில நம்பிக்கைக் கீற்றுகளையும் காண்கிறார். விடுதலைப்புலிகளின் முன்னாநாள் ஆதரவாளர்கள் சிலர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பற்றி அரசியல்ரீதியில் சிந்திக்க முற்படுகின்றமை நம்பிக்கை தரும் சில சிறிய முளைவிடும் விதைகளின் ஓர் உதாரணமெனக் கருதுகிறார்.

இந்தக் கட்டுரையை முடிக்க முன் ஒரு நினைவுகூரல். When Memory Dies நாவலை எழுதிக் கொண்டிருந்தபோது அதன் சில பகுதிகளை IRR ஐ அவரது சகாக்களுக்கும் நண்பர்களுக்கும் சிவா வாசித்துக் காட்டுவார். அந்த நிகழ்வுகள் ஒரு சிலவற்றில் பங்குபற்றும் வாய்ப்புஎனக்கும்கிடைத்தது. அவரின் கவித்துவ மிக்க வரிகளை அவர் உணர்ச்சி பொங்க வாசிக்கின்றமையைக் கேட்பது ஒரு மறக்க முடியாத அநுபவம். சில சந்தர்ப்பங்களில் நானுட்படக் கேட்டுக் கொண்டிருந்தோரில் பலர் கண் கலங் கினோம். அந்த நாவல் நினைவு மரணிப்பது பற்றியது. வரலாறென்பதே மறதிக்கெதிராக நினைவின் போராட்டமெனும் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறேன். சிவானந்தனின் எழுத்துக்கள் மறதிக் கெதிராக நினைவுகளையும் அடக்கு முறைக்கும் சுரண்டலுக்குமெதிராகக் கிளர்ச்சியையும்தூண்டுவன. வாசகர் அவற்றால் ஆகர்சிக்கப்படுவர், அவற்றின் சமகாலப் பயன்பாடுபற்றி, குறைபாடுகள் பற்றி விமர்சிப்பர், விவாதிப்பர். இதற்கூடாக அவரின் பங்களிப்பு புதிய தோர் உலகினைத் தேடும் போராட்ட இலக்கியங்களின் ஓர் அங்கமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை. ★

# விக்னேஸ்வரன் ஐயா!

# இலட்சுமண ரேகை கடக்கும் தருணமிது

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் முன்னிறுத்தி வந்த தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டின் அடித்தளத்தில் தமிழர்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுக்கப் பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவர்களை மக்கள் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

ஆனால், மேற்குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு வேட்டு வைக்கும் விதமாகச் செயற்பட்டு வருவதன் காரணமாகவே எந்த மக்களால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டார்களோ அந்த மக்களாலேயே நிராகரிக்கப்படும் அவலத்தை சந்தித்து நிற்கின்றார்கள். உங்களுக்கு முன்னர் நீண்ட அரசியல் பாரம்பரியம் கொண்ட இவர்களுக்கான அங்கீகாரமும் நிராகரிப்பும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் சார்ந்தே தீர்மானிக்கப்பட்டு வருகின்றது என்பது வரலாறு கூறி நிற்கும் பேருண்மையாகும்.

தாயக அரசியல் வெளியில் மாற்றுத் தலைமை ஒன்றிற்கான தேவை உணரப்பட்டு நீண்ட நாள்களாகிவிட்ட நிலையில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தல் அதற்கான சூழமைவை ஏற்படுத்தியிருந்தது. அருமையான இச்சந்தர்ப்பம் முளையிலேயே கருகிப்போனது மட்டுமல்ல பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக இந்திய வல்லாதிக்கத்தின் கண்ணசைவில் செயற்படும் கூட்டிணைவு ஒன்றின் உருவாக்கத்திற்கும் வழிவகுத்துள்ளது.

நடந்த இவை அனைத்திற்கும் உங்கள் கனத்த மௌனமே வழிசமைத்துள்ளது என்பது கசப்பான உண்மையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக தமிழ் மக்கள் பேரவையை தமிழ் மக்கள் ஆதரித்து நிற்கும் நிலையில் அதில் அங்கம்வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவுடன் உருவாக்க முயற்சித்திருந்த மாற்றுத் தலைமை என்பது கானல்நீராகிப் போனது உங்களால் தான் என்பதை முதலில் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**நீதியரசரே வேண்டாம் இந்த மௌனம் தயக்கம்**

உங்கள் அர்த்தமற்ற தயக்கம், குழப்பம் விடுத்து தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதான நிலையில் திடமான முடிவொன்றை எடுத்திருந்தால் தாயக அரசியல் தடுமாற்றம் கண்டிருக்காது என்பதை ஆணித்தரமாக கூறமுடியும்.

இந்தப் பின்னணியில் தாயக அரசியல் வெளி மீண்டும் தமிழினத் துரோகிகளின் கைகளுக்குள் சென்றுவிடும் பேராபத்து சூழ்ந்துள்ளது. இவ்வாறான குழப்பத்திற்குள் மக்கள் வாக்களிக்கச் செல்லாது அமைதியாகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் சரியான முடிவெடுக்காது மௌனமாக இருப்பது தவறுக்கு துணை போவதற்கு நிகரானது என்பதை நன்கு அறிந்த நீங்கள் தொடர்ந்தும் மௌனமாக இருப்பது பெரும் வரலாற்றுத் தவறாகிவிடும்.

**நம்புகின்றனர் மக்கள்**

நொடிந்துகொண்டு போகும் தமிழ் மக்கள் பேரவையைப் பலப்படுத்தி பேரவையின் கொள் கையுடன் இணைந்து செயற்படும் கட்சியை நோக்கி உங்கள் சுட்டுவிரலைக் காட்டுங்கள். ஒரு பலம் வாய்ந்த மக்கள் சக்தி கொண்ட தமிழ்த் தலைவர் ஒருவராலேயே இன்றைய இடைவெளியை நிரப்ப முடியும். அந்த முனைப்பும் சக்தியும் உங்களிடம் இருக்கின்றது என மக்கள் நம்புகின்றார்கள்.

நீங்களாகவே உங்களைச் சுற்றிப் போட்டிருக்கும் இலட்சுமண ரேகையை கடக்கும் தருணமிது முதல்வர் அவர்களே. அன்று இராமாயணத்தில் இலட்சுமண ரேகையை சீதை கடந்ததால் விபரீதம் ஏற்பட்டது. இன்று நீங்கள் உங்களைச் சுற்றிப் போட்டிருக்கும் இலட்சுமண ரேகையை கடக்காவிட்டால் பேரனர்த்தம் ஏற்பட்டுவிடும். கௌரவ வட மாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களே முடிவு உங்கள் கையில்.

மதிப்பிற்குரிய நீதியரசர். விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் இதுவரை சாதித்த விடயங்கள் என்று பார்த்தால் மாகாண சபையில் இனவழிப்புத் தீர்மானம் நிறைவேற்றியமை, காணிகளை ஓர் அளவேனும் விடுவித்தமை, தமிழர்களின் எதிர்கால இருப்பை உறுதிப்படுத்தப் பாடுபடுவது, சிங்களக் குடியேற்றங்கள் ஓர் அளவேனும் மட் டுப்படுத்தப்பட்டமை, சிங்கள சர்வதேச கூட்டுச் சதியை பலவீனப்படுத்தி பொறுப்புக் கூறலை உயிர்ப்போடு வைத்திருத்தல், சர்வதேசத்தின் மிரட்டல்களுக்குப் பணியாமை, சிறிலங்காவின் இடைக்கால அறிக்கையில் உள்ள ஓட்டைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றமை, வடக்குக், கிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனத் தொடர்ச்சியாக அழுத்தும் கொடுத்தல் போன்ற தமிழ்த் தேசியத்தின் இருப்பைத் தக்கவைக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் முதலமைச்சர் ஐயா அவர்கள் பகிரங்கமாக ஒருசில முடிவுகளை எடுக்கவேண்டிய தருணம் வந்து விட்டது என்பதைச் சுட்டிக்காட்டவும் அவரை மேலும் ஊக்கப்படுத்தவுமே இந்தக் கட்டுரையை எழுதியுள்ளேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# 2005 ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறை தமிழ் மக்கள் மீளவும் இழைக்கக் கூடாது!

## தேர்தல் அறிக்கையை வெளியிட்டு விஜயகலா மகேஸ்வரன் உரை




2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காமல் விட்ட தவறை, தமிழ் மக்கள் மீளவும் செய்யக்கூடாது. கடந்த 3 ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சி பல நல்ல விடயங்களை வடக்கில் செய்து முடித்திருக்கிறது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுகிறது. இந்த நிலையில் அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளில் முள்ளிவாய்க்காலில் எமது உறவுகளை நினைவுகூர முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டு மே 18 வரை முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரில் எமது உறவுகள் பலர் உயிரிழந்தனர். அப்போது 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு – கிழக்கில் இருந்தனர். எனினும் அந்த மக்களுக்காக அவர்கள் குரல் கொடுத்தார்களா என மக்கள் சிந்திக்கவேண்டும்.


அவர்களில் சிலர் இன்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். சிலர் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தனர்.

இவர்கள் அனைவரும் சேர்ந்தே தற்போது உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இவர்கள் இன்று பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர். அன்று மக்களுக்காக குரல் கொடுக்க முடியாதவர்களை நாம் இன்று ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்கள் கட்டபட்ட நிலையில்தான் அன்றும் இருந்தார்கள்; இன்று இருக்கிறார்கள் – என்றார்.

## மஸ்கெலிய காட்டுப்பகுதியில் அதிசய மனித காலடித் தடம்





மஸ்கெலியா காவல்துறை பிரிவுக்குட்பட்ட வட்மோர் தோட்ட காட்டுப் பகுதியில் உள்ள கற்பாறையொன்றில் வலது காலடித் தடமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட்மோர் தோட்ட பொதுமக்களால் இந்த காலடித் தடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, பிரதேச மக்கள் மஸ்கெலியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்த காலடித்தடம் தொடர்பில் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொது மக்கள் திரண்டு இந்த காலடித் தடத்தை பார்வையிட்டு வருகின்றனர்.

சிவனொளிபாத மலையில் இருக்கின்றமை போல இதுவும் கடவுளின் பாதத்தடமே எனத் தெரிவித்து அவர்கள் பூஜை, வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.